# අකීදා හා මසාදිරුෂ් ෂරීආ

(ඉස්ලාමීය මූලධර්ම හා නීති මූලාශ්‍ර)

**ඉස්ලාම් ආගමික (අහදිය්යා අල්කුර්ආන් පාසල්)**
**අවසන් සහතික පත්‍ර විභාගය සඳහා පෙළ පොත්**

# அகீதாவும் மஸாதிருஷ் ஷரீஆவும்

**(இஸ்லாமியக் கோட்பாடும் சட்ட மூலாதாரங்களும்)**

**இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா, அல்குர்ஆன்)**
**பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரியது**

# Aqeeda and Masadirus Shariah

**(Islamic Principles and Legal Sources)**

**Text Book for**
**Final Certificate Examination of Islamic Studies**
**(*Ahadhiyyah, Al Quran Schools) on Islamic Studies***

# العقيدة ومصادر الشريعة

**الكتاب المقرر لشهادة الإمتحانات النهائية**
**للمدارس القرآنية والأحدية الإسلامية**


**إصدار: إدارة الشؤون الإسلامية**
**كولومبو-سريلانكا**

***Published by :***
***Department of Muslim Religious and Cultural Affairs***
***180, T. B. Jayah Mawatha,***
***Colombo - 10,***
***Sri Lanka.***



2-CM14792

CM14792-5,000(2012/08)


بسم الله الرحمن الرحيم

**ஆலோசனையும் வழிகாட்டலும்** : கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி
பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

அஷ்ஷெய்க் ஏ. சி. அகார் முஹம்மத் (நளீமி)
பிரதிப் பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்
துணைத் தலைவர்
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை

அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி (நளீமி)
முன்னாள் பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் (நளீமி)
பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

**எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள்** : அஷ்ஷெய்க் உஸ்தாத் எம். ஏ. எம். மன்சூர் (நளீமி)
B. A. (Hons)
பணிப்பாளர்
அல்மிஷ்காத், அல்குர்ஆன் திறந்த கல்விக்கூடம்
அக்குரணை

அஷ்ஷெய்க் எஸ். எச். எம். பளீல் (நளீமி) M. A.
சிரேஷ்ட விரிவுரையாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

அஷ்ஷெய்க் எம். எம். அரபாத் கரீம் (நளீமி)
B. A. (Cey)
சிரேஷ்ட விரிவுரையாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

அஷ்ஷெய்க் எம். ஜே. எம். இம்தியாஸ் (நளீமி)
B. A. (Cey)
விரிவுரையாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

**செம்மையாக்கற் குழு** : அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல் (M. A.)
முன்னாள் செயலாளர்,
முஸ்லிம் சமய, கலாசார இராஜாங்க
அமைச்சு

அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன் (M. A.)
முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்
பேராதனை பல்கலைக்கழகம்

கலாநிதி மௌலவி எம். எஸ். எம். ஜலால்தீன்(கபூரி)
முன்னாள் பீடாதிபதி / சிரேஷ்ட விரிவுரையாளர்
தென்கிழக்கு பல்கலைக்கழகம்

மௌலவி எம். என். இஜ்லான் (காசிமி)
பிரதம கதீப்
கொழும்பு பெரியபள்ளிவாசல்

அல்ஹாஜ் எம். எச். எம். நாளிர் B. A. (Hons)
முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்
சகாப்தீன் பௌன்டேசன்

அல்ஹாஜ் எம். எம். எம். ஸாபீர் (M. A.)
சிரேஷ்ட விரிவுரையாளர்
கொழும்பு பல்கலைக்கழகம்

அஷ்ஷெய்க் எம். எச். எம். புஹாரி B. A. (Hons)PGDE
முன்னாள் திட்டமிடல் அதிகாரி
தேசிய கல்வி நிறுவனம்

**இணைப்பாக்கம்** : மௌலவி அல்ஹாஜ் எம். எச். எம். லாபிர் (கபூரி)
B. A. PGDE
தலைவர்,
மத்திய அஹதிய்யா சம்மேளன பாடத்திட்டக்குழு

மௌலவி அல்ஹாஜ் எம். எச். நூறுல் அமீன் (நத்வி)
B. A. (Cey)
உதவிப் பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | **அகீதாவும் மஸாதிருஷ் ஷரீஆவும்**<br>**(இஸ்லாமியக் கோட்பாடும்**<br>**சட்ட மூலாதாரங்களும்)**<br><br>இஸ்லாமிய சன்மார்க்க<br>(அஹதிய்யா, அல்குர்ஆன்) பாடசாலை<br>இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரியது |
| பதிப்பாசிரியர் | : | அல்ஹாஜ் மௌலவி எம். எச். நூறுல் அமீன்<br>உதவிப் பணிப்பாளர்<br>முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்<br>திணைக்களம் |
| வெளியீடு | : | முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்<br>திணைக்களம்<br>இல. 180, T. B. ஜாயா மாவத்தை<br>கொழும்பு - 10. |
| பதிப்பு | : | அரசாங்க அச்சகத் திணைக்களம்<br>இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா<br>மாவத்தை,<br>கொழும்பு - 08. |
| முதற்பதிப்பு | : | 2014 |
| பதிப்புரிமை | : | முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்<br>திணைக்களம் |

# மாண்புமிகு பிரதமர், புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் அவர்களது ஆசிச் செய்தி

இலங்கை சமயங்களுக்கும் கலாசாரங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கும் ஒரு தேசமாகும். சிறுபிராயம் முதல் பிள்ளைகளிடையே கலாசாரம், சகவாழ்வு, மானிடத்துவம் பற்றிய மனப்பாங்கை வளர்ப்பதன் ஊடாகவே தேசத்தையும் சமூகத்தையும் மதிக்கின்ற, சமய கலாசாரத்தை கௌரவிக்கின்ற, மனிதமாண்பை புரிந்து கொண்ட சமூகமொன்றை உருவாக்க முடியும். பரீட்சையை மையப்படுத்திய கல்வித் திட்டத்தின் மூலம் சிலவேளை தார்மீக பண்பாட்டு ரீதியான கல்வியை வழங்குவது கடினமாகலாம். இதனால் தான் இலங்கையில் ஞாயிறு சமய பாடசாலைக் கல்வித்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமய பிள்ளைகள் தத்தமது சமய ஸ்தலங்களுக்கு அல்லது பாடசாலைகளுக்கு சென்று சமயக்கல்வியைப்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமயக் கல்விப் போதனைகளுக்குத் தேவையான ஆசிரியர்களை வளப்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்கள், சீருடை வழங்கல் மட்டுமன்றி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் கைந்நூல், மாணவர்களுக்கான பாடநூல் என்பனவும் இலவசமாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பௌத்த சமய பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சகல வசதிகளும் ஏனைய சமயம் சார்ந்த பிள்ளைகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். அஹதிய்யா என்ற பெயரில் வழங்கப்படும் இஸ்லாமிய சமய பாடசாலைகளுக்கு அவசியமான பாடத்திட்டத்தை தயார் செய்யும் வேலைத்திட்டத்தினை சிறப்பாக நிறைவு செய்துள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதே பிரகாரம் பாடநூல் தொகுதியொன்றை வெளியிட மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை பாராட்டுக்குரியது.

சமயக் கல்விப் போதனையின் இலக்கை அடைவதில் ஆசிரியர் களுக்கான வழிகாட்டல்களை வழங்குவது இன்றியமையாததாகும். மிக விரைவில் இது விடயமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என நம்புகிறேன்.

எந்தவொரு மட்டத்திலாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடு வெற்றியளிப்பதற்கு உரிய பாடநூல்கள் அவசியம் என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். இவ்வவசியத் தேவையை சரியாகப் புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய பாடத்திட்டத்திற்கமைவாக இரு பரீட்சைகளுக்குமான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்திருப்பது காலத்தின் தேவையாகும். சமய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் இதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இதை செய்து முடிப்பதற்கு பங்களிப்புச் செய்த முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சகலருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**தி. மு. ஜயரத்ன**
இலங்கைச் சனநாயக சோசலிசக்
குடியரசின் பிரதமரும்
புத்த சாசனம் மற்றும்
மத அலுவல்கள் அமைச்சரும்.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# கௌரவ புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் பிரதியமைச்சரின் ஆசிச் செய்தி

பல்லின சமய கலாசார விழுமியங்களைக் கொண்ட இலங்கைத் திருநாட்டு மக்கள் மத்தியில், தார்மீக சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கையில் வதியும் பிரதான நான்கு சமயத்தவர்களும் தத்தமது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மூலம் முதன் முறையாக இஸ்லாமிய சமய (அஹதிய்யா) பாடசாலை மாணவர்களுக்காக பாடத்திட்டத்தினையும் அப்பாடத்திட்டத்திற்கமைவாக பாடநூல்களையும் வெளியிடும் இச்சிறப்பான வேளையில் வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிடக் கிடைத்தமையினை பெரும் நற்பேறாகக் கருதுகிறேன்.

நீண்டகாலமாக நிலவிவந்த இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு எமது அமைச்சின் ஊடாக பங்களிப்புச் செய்வது எமது கடமை என்பதோடு பல தசாப்தங்களாக இயங்கிவரும் அஹதிய்யா சமய பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தமது சமய கல்விப்பணிகளை முன்கொண்டு செல்வதற்கு இது பேருதவியாக அமையும் என நம்புகிறேன்.

ஒரு நாட்டின் அபிவிருத்தி நிலைத்திருப்பது அரசியல் பொருளாதார அபிவிருத்தியுடன சமய சமூக மட்டத்திலான அபிவிருத்தியும் இணைந்தது என உறுதியுடன் நம்பிக்கை பூண்டுள்ளேன். குறிப்பாக சமூக மட்டத்திலான ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதாயின் சமய கலாசார துறைசார் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மேற்படி சமய சமூக கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதில் அஹதிய்யா முதலான சமயப் பாடசாலைகள் ஆற்றும் பணி விலைமதிக்க முடியாததாகும்.

சிறு பராயம் முதல் பிள்ளைகளை சமய பின்னணியில் வாழப் பயிற்றுவிப்பது போல் அதற்கான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் ஒழுக்க விழுமியங்களால் போஷிக்கப்பட்ட இளைய தலைமுறையொன்று உருவாகுவதை எதிர்பார்க்க முடியும்.

எங்களைப் போல் பல்லின சமய கலாசார சமூகமொன்று வாழும் நாட்டில் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மக்கள் தமது பிள்ளைகளுக்கு அவரவர்களது சமய அறிவையும் விளக்கத்தையும் வழங்குவதற்கு இதுபோன்ற சமய பாடசாலைகள் ஊடாக மேற்கொள்ளும் அறப்பணி மகத்தானதாகும்.

இம்மகத்தான பணியைச் செய்வதில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இதற்கு பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எமது அமைச்சின் நன்றியறிதலை சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

**எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,**
பிரதியமைச்சர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளரது ஆசிச் செய்தி

தார்மீக சமுதாயமொன்றை தோற்றுவிப்பதில் சமயக் கல்வி அதிமுக்கிய பங்காற்றுகிறது. பாலர் பருவம் முதல் பிள்ளைகளிடையே சமய விழுமியச் சிந்தனையை ஏற்படுத்த முடியுமாயின் நாட்டின் சமூக சூழலை நல்ல நிலைக்கு மாற்றுவது கஷ்டமாயிராது. யாவரிடத்திலும் நல்ல மனப்பாங்கு ஏற்படுவது அனுபவங்கள் ஊடேயாகும். பயனுள்ள அனுபவங்களை வழங்குவதில் சமயக் கல்வி சிறந்த ஊடகமாகும். பரீட்சையை மையப்படுத்திய பொதுக்கல்வியுடன் மாத்திரம் சமய அறிவைப் புகட்டுவது சிரமமான காரியமாகும். இதற்கு மாற்றீடாக இலங்கையில் ஞாயிறு தினங்களில் நடாத்தப்படும் சமய பாடசாலைகள் முறை இத்துறையில் பெருமளவு வெற்றியை ஈட்டித்தந்துள்ளது.

பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ பிள்ளைகளிடையே சமய சூழலும் சமய அறிவும் விருத்தி செய்யப்படும் வகையில் ஒவ்வொரு சமயம் சார் பிள்ளைகளுக்குமாக வெவ்வேறான சமயப் பாடசாலைகள் நடைபெறுகின்றன. சமய பாடசாலைகளுக்கான பாடத்திட்டம், பாடநூல் என்பன தற்போதைக்கு வெளியிடப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கு அவசியப்படும் பயிற்சித்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் சீருடை என்பன வழங்கப்பட்டு வருகின்றன. இங்கு முக்கிய குறைபாடாக விளங்கி வந்த பாடநூல்களை வழங்க ஏற்பாடு செய்கின்றமை முக்கிய அம்சமாகும். சகல சமய குழந்தைகளுக்கும் ஒரே விதமான வசதிகளை செய்து கொடுப்பது அரசின் கொள்கையாகும். இஸ்லாமிய சமய பாடசாலைகள் விடயத்தில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாடத்திட்டத்தை தயாரித்து சிறப்பாக வெளியிட்டு வைத்த இத்திணைக்களம் தேவையான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்தமை சமய கல்வித்துறையில் ஒரு திருப்பு முனையாகும். எந்தவொரு கல்வி மட்டத்திலும் பாடத்திட்டத்தின் உரிய பலாபலன்களை அடைவதில் பாடநூல்கள் முக்கிய பங்கு வகிப்பதை மறுக்க முடியாது. இவ்வவசியத் தேவையினை சரிவரப்புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆரம்ப நடவடிக்கையாக அஹதிய்யா (தஹம்) இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல் களையும், அஹதிய்யா (தஹம்) தீனிய்யாத் சான்றிதழ் பரீட்சைக்குரிய

பாடநூல்களுடன் மொத்தம் 10 நூல்களை வெளியிட எடுத்துள்ள நடவடிக்கையினையிட்டு இத்திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் என்ற வகையில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

மேற்படி அறப்பணியில் ஈடுபட்டிருக்கும் திணைக்கள ஊழியர்கள், வளவாளர்கள், நூலாக்கக்குழுவினர் ஆகிய அனைவருக்கும் எனது நன்றிகளை சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன்.

**எம். கே. பீ. திசாநாயக்க,**
செயலாளர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

## முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

இன்றைய உலகு பயங்கர ஆன்மீக வறுமையிலும் வெறுமையிலும் வாடிக் கொண்டிருக்கிறது. உண்மையாக இன்றைய உலகின் சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது ஆன்மீகப் பிரச்சினையும் அதனடியாகப் பிறந்துள்ள பண்பாட்டு வீழ்ச்சியுமாகும் எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

சமய சார்பற்ற சிந்தனை, சடவாதம், உலோகாயதவாதம் முதலான மதவிரோத கொள்கைகளின் செல்வாக்கின் காரணமாகவே ஆன்மீக, தார்மீக, ஒழுக்க பண்பாட்டுத் துறைகளில் பயங்கர பின்னடைவை இன்று நாம் கண்டு வருகிறோம். அறிவைப் பூஜிக்கின்ற சமூகம் ஆன்மீகத்தைப் புறக்கணிக்கிறது. உடலைக் கவனிக்கின்ற சமூகம் உள்ளத்தை மறந்துவிடுகின்றது. இம்மையை நேசிக்கின்ற சமூகம் மறுமையை நிராகரிக்கின்றது.

சமகால உலகின் இத்தகைய சமய விரோத சவால்களுக்கு முகங்கொடுத்து மனித சமூகத்தை சன்மார்க்க அடிப்படையில், ஆன்மீகப் பாதையில் வழிநடாத்த வல்ல அறிவையும், புலமையையும், ஆளுமையையும் உருவாக்குகின்ற பயிற்சிப் பாசறைகளான அரபுக் கல்லூரிகளோடு இணைந்து அஹதிய்யா பாடசாலைகளும் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அஹதிய்யா பாடசாலைகள் இலங்கையில் 50 வருடங்களுக்கு மேலாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அஹதிய்யா பாடசாலைகளை சிறந்த முறையில் வழிநடத்துவதற்காக திணைக்களம் அதற்கான முழுமையான பாடத்திட்டத்தை வெளியிட்டு வழிநடாத்தி வந்துள்ளமை அனைவரும் அறிந்ததே.

இந்த வகையில் இப்பாடத்திட்டங்கள் மூலம் பூரண பயனைப் பெற முடியாது என்பதை அறிந்த திணைக்களம், முதற்கட்டமாக இப்பாடத்திட்டங்களுக்கு அமைவாக இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா அல்குர்ஆன்) பாடசாலை இறுதிச்சான்றிதழ் பரீட்சை மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சை களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த பணியை சிறப்பாக மேற்கொண்ட புத்தக

ஆக்கக்குழுவுக்கும் தொகுப்பாசிரியர் குழு மற்றும் இப்பணியில் மும்முரமாக ஈடுபட்ட எமது திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் அவர்களுக்கும் மற்றும் இப்பணியில் இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு, இப்பணியில் ஈடுபட்டவர்களது உழைப்பையும், அவர்களது முயற்சி யையும் அல்லாஹ் அங்கீகரித்துச் சிறந்த நற்கூலிகளை வழங்க வேண்டும் என வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

**அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல்,**
பணிப்பாளர்,
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180, T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

# உயர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்) அவர்களின் ஆசிச் செய்தி

இஸ்லாம் ஒரு வாழ்க்கை நெறியாகும். முஸ்லிமாக வாழ்வதாயின் அல்குர்ஆன், அல்ஹதீஸ் தொடர்பான தெளிவான அறிவைப் பெறுவது அவசியமாகும். "அறிவைத்தேடுவது முஸ்லிமான ஆண், பெண் இரு பாலார் மீதும் கடமையாகும்." என்ற கருத்தில் வரும் நபிமொழியும் "அல்குர்ஆனைக் கற்று மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுப்பவரே உங்களில் சிறந்தவர்" என்ற கருத்தில் வரும் நபிமொழியும் இதனை வலியுறுத்துகின்றன. இலங்கையில் இஸ்லாத்தை பாடசாலைப் பருவத்தில் கற்றுக்கொள்வதற்கான ஒரு சிறந்த ஊடகமாக அஹதிய்யா பாடசாலைகள் காணப்படுகின்றன. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளின் வளர்ச்சியில் போற்றத்தக்க சேவைகளை வழங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததாகும். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளுக்கு வருடாந்தம் வழங்கி வரும் சேவைகள் அஹதிய்யாவின் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக அமைகின்றன.

பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரையான 14 வருடங்களுக்குரிய தேசிய அஹதிய்யாப் பாடத்திட்டம், இலங்கை அரசாங்க பரீட்சை திணைக்களம் மூலம் அஹதிய்யா இறுதி சான்றிதழ் பரீட்சை, இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சாரிய) சான்றிதழ் பரீட்சை ஆகிய இரு பரீட்சைகளையும் நடாத்த ஏற்பாடு செய்தமை, மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட அஹதிய்யா ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளும் கருத்தரங்குகளும், அஹதிய்யா ஆசிரியர்களுக்கான வருடாந்த நூல் கொள்வனவுக் கொடுப்பனவு, வருடாந்தம் ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கல் என்பன அப்பணிகளில் சிலவாகும்.

இவற்றில் அஹதிய்யா பாடசாலைகளது வரலாற்றில் தேசிய பாடத்திட்டத்துக்கு அமைவாக பாடநூல்கள் வெளியிடப்படுவது முக்கியதொரு மைல்கல்லாகும். அஹதிய்யா சமூகத்தின் ஏகோபித்த கோரிக்கையின் முதற்கட்டம் இன்று நிறைவேறுவதையிட்டு உளப்

பூரிப்படைகிறேன். முதற் கட்டமாக, அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை வகுப்புகளுக்குரிய அகீதா, மஸாதிறுச்ஷரீஆ, பிக்குஹுல் இஸ்லாம், ஸீரா வத்தாரீக், அஹ்லாக் ஆகிய நான்கு பாடங்களுக்கும் தீனிய்யாத் பரீட்சைக்குரிய மேற்படி நான்கு பாடங்களுடன் *அரபு மொழியும் இஸ்லாமிய இலக்கியமும் ஆகிய ஆறு பாடங்களுக்குமாக பத்து பாட நூல்கள் வெளிவருகின்றமை சிறப்பித்துக் கூறவேண்டிய தொன்றாகும். புதிய பணிப்பாளர் தலைமையில் இப்பணிகள் யாவும் தொடரும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

மேற்படி பணிகளை முன்கொண்டு செல்வதில் ஆரம்பம் முதல் இன்றுவரை அயராது உழைத்துவரும் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மற்றும் எழுத்தாளர குழு அங்கத்தவர்கள், தொகுப்பாசிரியர்கள் ஆகியோர் என்றும் நன்றிக்குரியவர்களாவர். அல்லாஹ் அவர்களது முயற்சிகளை அங்கீகரித்துத்துக் கொள்வானாக. இப்பணியில் இவர்களுடன் சேர்ந்து ஈடுபடுவதற்கு கிடைத்தமையை அல்லாஹ் எனக்கு வழங்கிய ஒரு மகத்தான சந்தர்ப்பமாகவே கருதுகின்றேன்.

இதற்காக என்னால் ஆன பணிகளைச் செய்யக் காத்திருக்கின்றேன்.

அல்லாஹ்வின் அருள் வேண்டி அனைவருக்கும் பிரார்த்திக்கிறேன்.

ஆமின் !

**அஷ்ஷெய்க் Y. L. M. நவவி**,
உயர் கல்வியமைச்சின்
சிரேஷ்ட உதவிச் செயலாளரும்,
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்

உயர் கல்வியமைச்சு,
இல. 18, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07.

# மத்திய அஹதிய்யா சம்மேளன பாடத்திட்டக் குழுத் தலைவரின் ஆசிச் செய்தி

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**

அஹதிய்யாப் பாடசாலைகள் மூலம் கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக முஸ்லிம் சமூகம் பல நன்மைகளையடைந்து வந்துள்ளது. இருப்பினும் எதிர்பார்க்கப்படும் முறையான பயனை சமூகம் அடைவதற்கு முக்கிய சில தடைகள் இருந்து வந்துள்ளன. அவற்றுள் ஒன்று பாடநூல் இல்லாமை, மற்றையது தேவையான ஆசிரிய வளம் கிடைக்காமை எனலாம்.

பெரும்பாலும் அஹதிய்யாப் பாடசாலைகளில் க.பொ.த. (சாதாரண தரம்) அல்லது க.பொத.(உயர் தரம்) வரை கற்றவர்களே கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒரு சில இடங்களிலேயே உலமாக்களும் பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியர்களும் கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அஹதிய்யா பாடசாலைகளில் போதிக்கும் ஆசிரியர்களது அறிவு மட்டத்தை மேம்படுத்தும் வகையிலேயே இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சாரிய) பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறியைக் கற்றுத் தேர்வதன் மூலம் அவர்கள் சன்மார்க்க போதனாசிரியர்களுக்கான தராதரத்தைப் பெறுகின்றனர். இச்சான்றிதழ் உடையவர்களை சமய ஆசிரியர்களாக நியமிக்கும் திட்டத்தினை அரசு முன் கொண்டுள்ளது. எனவே இப்பாடத்திட்டம் முறையாக கற்பிக்கப்படுவதன் மூலம் அஹதிய்யாக்கள் எதிர்நோக்கும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும். அத்தோடு ஆசிரியர்களது கல்வித்தரத்தை மேம்படுத்தவும் முடியும். மேலும் இவர்களிடம் கற்கும் மாணவர்களது அறிவுமட்டம் உயர்வடையும் என்றும் எதிர்பார்க்கலாம்.

இது விடயத்தில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கரிசனை கொண்டு நடவடிக்கை மேற்கொண்டு செயற்பட்டுவருகின்றமை பாராட்டுக்குரியது. இதற்கு முன்னோடியாக விளங்கிய முன்னாள் பணிப்பாளர் அஷ்ஷெய்க Y. L. M. நவவி அவர்களது பங்களிப்பு மெச்சத்தக்கதாகும். அவரது வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் இதற்கு உறுதுணையாக விளங்கின. அவருக்கு பக்கபலமாக விளங்கிய முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. நூறுல் அமீன் அவர்களது அயராத முயற்சியும் ஈடுபாடும் இங்கு குறிப்பிடத்தக்கவை. அஹதிய்யாப் பாடசாலைகள் மத்திய சம்மேளனம் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்

திணைக்களத்தின் இந்தப் பங்களிப்பினை நன்றியுணர்வோடு நோக்குகிறது.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கை பூராவும் எமது இளைய தலை முறையினரான பாடசாலைப் பிள்ளைகளுக்கு இஸ்லாமிய அறிவையும் உணர்வையும் ஊட்டி தூய இஸ்லாமிய ஷரிஆவின் வழியில் நடாத்தும் பொறுப்பையேற்று செயற்பட்டு வரும் அஹதிய்யாவின் முன்னோடிகள், அதன் தொண்டர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் அல்லாஹ்வின் அருளுக்குரியவர்கள் என்பதை கூறவிரும்புகிறோம்.

அஹதிய்யாவின் ஸ்தாபகத்தலைவர் மர்ஹூம் எம்.எச்.அப்துல் அஸீஸ் அவர்களைத் தொடர்ந்து எம்மோடு பணியாற்றியாற்றுகின்ற தலைவர்கள், நிருவாகிகள் யாவருக்கும் இவ்விஸ்தாபனத்தை வழிநடாத்திச் செல்வதற்கான மனோபலத்தையும் உடற்சுகத்தையும் நல்க வேண்டுமென மத்திய அஹதிய்யா சம்மேளனம் பிரார்த்திக் கின்றோம்.

மத்திய அஹதிய்யா சம்மேளனம் 1988 ஆம் ஆண்டு பொதுப் பாடத்திட்டத்தை வகுத்தது, இதனைத் தொடர்ந்து முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய ரீதியாக 2003 ஆம் ஆண்டு பொதுப்பாடத்திட்டத்தனை அறிமுகஞ் செய்தது, 2005 ஆம் ஆண்டு முதல் தேசிய மட்டத்தில் அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சைகள் இடம் பெற்றாலும் பரீட்சைகளுக்கான பாடநூல்கள் எதுவும் இல்லா திருந்தமை பெரும் குறைபாடாக இருந்தது. இதனால் இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களது எண்ணிக்கையும் குறைவாக இருந்ததுடன் விண்ணப்பித்தோருள் பரீட்சைக்குத் தோற்றாமலிருப்போரின் எண்ணிக்கையும் கணிசமாயிருந்தது.

மேற்படி குறைபாட்டை முன்னாள் முஸ்லிம் சமய, பண்பாட்டலு வல்கள் திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி அவர்களிடம் எடுத்துக்கூறியபோது அவர் தேவையான நூல்களைத் தயாரித்து வெளியிட முன்வந்தார். அவர் விட்ட இடத்தில் இருந்து இப்பணியை சிறப்பாக தொடர்கின்ற பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் அவர்களின் பங்களிப்பும் பாராட்டத்தக்கது.

இப்பணியில் ஒத்துழைத்த அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக. அவர்களின் பணியை அங்கீகரிப்பானாக.

**மௌலவி எம். எச். எம். லாபிர்,**
மத்திய அஹதிய்யா சம்மேளனம்,
பாடத்திட்டக் குழுத்தலைவர்.

# பதிப்புரை

## பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்

சர்வ புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகட்டும்! அல்ஹம்துலில்லாஹ் !

"(எனக்கு வழிப்பட்டு என்னை) வணங்குவதற்கன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் சிருஷ்டிக்கவில்லை."(அல்குர்ஆன் - 51 : 56)

இவ்வுலகில் மானிட வர்க்கம் படைக்கப்பட்டதன் நோக்கம் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று, நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை அடிச்சுவடுகளை முறையாக பின்பற்றி முஸ்லிமாக வாழ்ந்து மரணிப்பதே யாகும். அல்லாஹ்வின் அடியார்கள் என்ற வகையில் ஒவ்வொரு முஸ்லிமும் ஆத்மீக சிந்தனையுடன் தனது வாழ்வை இபாதத்துடன் இணைத்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

நபி (ஸல்) அவர்களின் அருள்வாக்கு பின்வருமாறு சான்று பகர்கின்றது : "இவ்வுலகத்தில் அல்லாஹ் ஒருவனுக்கு நன்மையை நாடினால் அவனுக்கு மார்க்கத்தில் தெளிவான விளக்கத்தை வழங்குகிறான்." (அல்ஹதீஸ்)

மேற்படி இறைவசனத்திற்கும் நபி (ஸல்) அவர்களின் போதனைக்கும் ஏற்ப மார்க்கத்துடன் தொடர்புடையவனாக வாழ்வது கட்டாயக் கடமையாகும். இவ்வாறாக ஒரு முஸ்லிம் இறையச்சம், பொறுமை, சகிப்புத்தன்மை, நல்லொழுக்கம், நற்பண்புகளுடன் வாழ்வதற்கு இஸ்லாமிய சன்மார்க்கக் கல்வியை பெற்றுக் கொள்வது இன்றியமையாத தாகும். மார்க்கக் கல்வியை பெறுவது உண்மையான முஃமினாக வாழ்வதற்கு வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான நல்லொழுக்கமுடைய ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு இன்று நாடளாவியரீதியில் பல இஸ்லாமிய ஷரீஆ கல்வி நிறுவனங்களும், தனியார் அமைப்புகளும் தங்களாலான பங்களிப்புகளைச் செய்து வருவது உண்மையில் போற்றத்தக்கதாகும்.

மேற்படி நோக்கத்தை மையமாகக் கொண்டு சுமார் ஆறு தசாப்தங்களுக்கு மேல் அஹதிய்யா கல்வியை மேம்படுத்துவதற்காக திட்டங்களை வகுத்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் மத்திய அஹதிய்யா சம்மேளன தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் பணி என்றும் பாராட்டத்தக்கதாகும்.

அத்துடன் இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக அரபுக் கல்லூரிகள், அஹதிய்யா பாடசாலைகள், குர்ஆன் மத்ரஸாக்கள் போன்ற இஸ்லாமிய கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதிலும், பௌதிக வளங்களை விரிவுபடுத்துவதிலும் இத்திணைக்களம் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. இவற்றுள் அஹதிய்யா பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பல திட்டங்களை வகுத்து செயல்பட்டு வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த வகையில் முதல் பணியாக அஹதிய்யா மற்றும் குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பாடத்திட்டத்தினை 2003 ஆம் ஆண்டு வெளியிட்டு வைத்தமையும் இப்பாடத்திட்டத்திற்கமைவாக 2005 ஆம் ஆண்டு அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சையை நடாத்துவதற்கு இத்திணைக்களம் நிதியுதவி வழங்கி தேவையான ஒழுங்குகளை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் 2008 ஆம் ஆண்டு இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சையையும் பரீட்சைத்திணக்களத்தின் மூலமாக நடாத்துவதற்கு சகல நடவடிக்கை களையும் இத்திணைக்களம் மேற்கொண்டது. மேலும் 2008 ஆம் ஆண்டு அஹதிய்யா பாலர் வகுப்பு முதல் இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சை வரைக்குமான பாடத்திட்டங்களை வகுத்து தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இத்திணைக்களம் வருடந்தோறும் அஹதிய்யா ஆசிரிய ஆசிரியைகளுக்கான சீருடை மற்றும் புத்தகக் கொடுப்பனவு வழங்குதல்; கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல் போன்றவற்றையும் நடை முறைப்படுத்தி வருகின்றது.

குறிப்பாக அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) பரீட்சைகளுக்கு தோற்றுபவர்கள் பாடப் புத்தகங்கள் இல்லாததன் காரணமாக பரீட்சைக்கு தோற்றுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனை கருத்திற்கொண்டு பரீட்சைகளுக்கு ஏற்றவிதமாக பாடப்புத்தகங்களை உருவாக்கும் பணியை எமது திணைக்களம் மேற்கொண்டது.

மேற்படி நூல்களை வெளியிடுவதற்கும் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முன்னோடியாக விளங்கி ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய முன்னாள் பணிப்பாளர்களான அஷ்ஷெய்க் Y. L. M. நவவி அவர்களுக்கும் அஷ்ஷெய்க் M. I. அமீர் அவர்களுக்கும் இந்நூல் எவ்வித தங்கு தடையுமின்றி துரிதமாக வெளிவர காரணமாக இருந்த தற்போதைய பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. M. ஸமீல் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இப்பாடப் புத்தகங்களை வடிவமைத்து பிரசுரிப்பதற்கு எல்லா வகைகளிலும் ஆலோசனைகளையும் ; வழிகாட்டல்களையும் வழங்கிய ஜாமிஆ நளீமிய்யா கலாபீடப் பணிப்பாளர் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி மற்றும் பிரதிப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. சீ. அகார் முஹம்மத் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இப்பணியை செவ்வனே முடிப்பதற்கு ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் வழங்கியவர்களையும் நன்றியுடன் ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன்.

இப்புத்தகம் நூலுருவில் வெளியாவதற்கு பல சிரமங்களுக்கு மத்தியில் பாடவிதானங்களுக்கேற்ப பாடங்களை எழுதி வடிவமைத்து தந்த எழுத்தாளர் குழு அங்கத்தவர்களான அக்குரணை அல்மிஸ்காத், அல்குர்ஆன் திறந்த கல்விக்கூடத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் உஸ்தாத் எம். ஏ. எம். மன்சூர், ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான அஷ்ஷெய்க் எஸ். எச். எம். பளீல் (நளீமி), அஷ்ஷெய்க் எம். ஜே. எம். அரபாத் கரீம் (நளீமி) அஷ்ஷெய்க் எம். ஜே. எம். இம்தியாஸ் (நளீமி) ஆகியோர்களுக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் இப்புத்தகத்தினை செம்மைப்படுத்தி, வடிவமைத்து தந்தவர்களான முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல், பேராதனை பல்கலைக்கழக முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன், சிரேஷ்ட விரிவுரையாளரும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதியுமான கலாநிதி மௌலவி எம். எஸ். எம். ஜலால்டீன் (கபூரி), மௌலவி எம். என். இஜ்லான் (காசிமி) மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் வளவாளர், அல்ஹாஜ் எம். எச். எம் நாளிர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் எம். எம். எம். ஸாபிர், மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பிரதம செயல்திட்ட அதிகாரி அஷ்ஷெய்க் எம். எச். எம். புகாரி (நளீமி) ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை நூலாக்குவதற்கு ஆரம்பம் முதல் இன்று வரை என்னுடன் இணைப்பாளராக செயலாற்றிய மௌலவி எம். எச். எம். லாபீர் (கபூரி) மற்றும் அல்முபாரக் தேசிய பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை திருமதி எம். டீ. எஸ். றுவைதா அவர்களுக்கும் இப்புத்தகத்தை நூல் வடிவில் வெளிவருவதற்கு பல வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய ஜாமிஆ நளீமிய்யா சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம். ஜே. எம். அறபாத் கரீம் (நளீமி) அவர்களுக்கும், மேலும் ஒத்துழைப்பு நல்கிய எமது திணைக்கள அதிகாரிகளான அஷ்ஷெய்க் எம். ஐ. முனீர் (நளீமி), அல்ஹாஜ் ஏ. ஏ. எம். அஸ்ரின், திருமதி எம். ஐ. ரஸீனா, திருமதி எம். வை. எப். இன்சிபா மற்றும் இப்பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய திணைக்கள அனைத்து அதிகாரிகளுக்கும் சிற்றூழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை கணினி வடிவமைத்துத் தந்த திருமதி எம். எப். ஷாமிலா, திருமதி எம். எச். எஸ். பாத்திமா மஹ்ஸனி, திருமதி எம். எச். எப். ரிஸானா ஆகியோருக்கும் மற்றும் இப்புத்தகத்தின் அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த ஜனாப் அஸார் வஸீர்

அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மற்றும் அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் கணினிப் பிரிவில் கடமை புரியும் திருமதி ஏ. என். ஹிதாயா அவர்களுக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடநூல் சம்பந்தமாக ஏதேனும் ஆலோசனைகளும் கருத்துக் களும் இருப்பின் மறுபதிப்பில் பிரசுரிப்பதற்கு ஏதுவாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். எனவே இப்பணியில் ஈடுபட்ட சகலரதும் முயற்சியை எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக் கொள்வதுடன் உரிய பயனை அடைவதற்கு நம் அனைவருக்கும் அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக!

ஆமீன் !!

**மௌலவி எம். எச். நூறுல் அமீன்,**
உதவிப்பணிப்பாளர்,
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180 T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

# அகீதாவும் மஸாதிருஷ் ஷரீஆவும்
# (இஸ்லாமியக் கோட்பாடும் சட்ட மூலாதாரங்களும்)
# நூல் அறிமுகம்

அஹதிய்யா பாடநெறிக்கான இறுதிப் பரீட்சையில் அல்அகீதா மஸாதிருஸ் ஷரீஆ எனும் பகுதிக்கான பாடநூல் உங்கள் கைகளில் உள்ளது. இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகள் பற்றியும் இஸ்லாமிய ஷரீஆவின் மூலாதாரங்கள் பற்றியும் இந்நூல் ஓரளவு விரிவாக எழுதப்பட்டுள்ளது.

ஒரு முஸ்லிமின் வாழ்வில் அகீதா பெறும் முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கதாகும். இஸ்லாமிய வாழ்வு நெறியின் அடித்தளமாக அது அமைந்துள்ளது. எனவே இந்த அகீதாவின் பிரதான பிரிவான ஏகத்துவம் பற்றியும் அதற்கு எதிரான ஷிர்க் பற்றியும் முதலாவது பகுதி விளக்குகிறது. நேர்வழியிலிருந்து முஸ்லிம்கள் தவறாதிருக்கும் பொருட்டு வழிதவறிய குழுக்கள் பற்றிய ஓர் அறிமுகம் இங்கு இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இஸ்லாமிய சட்டமூலாதாரங்கள் என்றவகையில் அல்குர்ஆன், சுன்னா, இஜ்மா, கியாஸ் என்பனபற்றி விரிவாகவும் பிற மூலாதாரங்கள் பற்றி ஓரளவு சுருக்கமாகவும் இந்நூல் குறிப்பிடுகின்றது. சுன்னா பற்றிய பகுதியில் அதன் முக்கியத்துவம் அது தொகுக்கப்பட்ட வரலாறு சட்டமூலாதாரம் என்ற வகையில் அது பெறும் முக்கியத்துவம் போன்றன விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன் சுன்னாவின் பிரதான உள்ளடக்கமாக அமையும் ஆறுகிரந்தங்கள் பற்றிய விளக்கமும் இடம்பெறுகிறது.

பிக்ஹ் கலை தொடர்பான பகுதியில் அதன் தோற்றம் வளர்ச்சி அதன் முக்கியத்துவம் இஸ்லாமிய சட்டவாக்க வரலாற்றில் நான்கு மத்ஹப்களும் அவற்றின் ஸ்தாபகர்களும் பெறும் முக்கியத்துவம் போன்றன ஓரளவு விரிவாக ஆராயப்படுகிறது. இஸ்லாமிய சட்டங்களை வகுப்பதில் முஜ்தஹித்கள் முக்கிய இடம் வகிக்கிறார்கள். அவர்கள் பற்றிய சரியான அறிவு சமூகத்தில் இருக்க வேண்டும் என்ற குறிக்கோளில் அவர்கள் மேற்கொள்ளும் இஜ்திஹாத் பணிபற்றிய விளக்கம் இங்கு வழங்கப்படுகிறது. அவர்களது தராதரங்கள் வித்தியாசப்படுவதற்கேற்ப அவர்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இப்பாடப்பரப்பின் இறுதிப் பகுதியில் அல்-குர்ஆனிலுள்ள சில சூராக்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றின் மொழிபெயர்ப்புக்கள் தரப்பட்டிருப்பதுடன் அவற்றின் உள்ளடக்கம் தொடர்பான அறிமுகமும் இடம்பெறுகிறது.

அகீதா மஸாதிருஸ் ஷரீஆ எனப்படும் இப்பகுதி ஏனைய பகுதிகள் அனைத்துக்குமான அடிப்படையாக அமைகிறது. அது இஸ்லாமிய வாழ்வின் அஸ்திவாரங்கள் பற்றிப் பேசுவதனால் தான் இந்த முக்கியத்துவத்தை அது பெறுவதாகக் கூறலாம். மாணாக்கர்களுக்கு தாம் சார்ந்துள்ள மார்க்கத்தைப் பற்றி அறிவதற்கான நுழைவாயிலாக இப்பகுதி அமைந்துள்ளதாகக் கூறலாம்.

நூலாக்கக் குழு சார்பாக

**அஷ்ஷெய்க் எஸ். எச். எம். பளீல் (நளீமி)**,
சிரேஷ்ட விரிவுரையாளர்.

ஜாமிஆ நளிமிய்யா கலாபீடம்,
பேருவளை.

# உள்ளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| 01. | அகீதா | 01 |
| 02. | தௌஹீத் | 21 |
| 03. | மஸாதிருஷ் ஷரீஆ | 41 |
| 04. | இஜ்திஹாத் | 72 |
| 05. | அல்குர்ஆனில் சில முக்கிய ஸூராக்கள் | 103 |

# அகீதா

## அகீதாவின் முக்கியத்துவமும் அது தொடர்பான விளக்கங்களும்

### அகீதா - வரைவிலக்கணம்

அகீதா என்பது இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகளை குறிக்கின்றது. அகாஇத் என்பது இதன் பன்மைப் பதமாகும். ‘அக்த்’ என்ற வினையடியிலிருந்து பெறப்பட்ட அகீதா என்ற சொல் மொழியியல் ரீதியாக இறுக்கமாக கட்டுதல் என்ற கருத்தைக் குறிக்கின்றது. உறுதியாக மேற்கொள்ளப்படும் உடன்படிக்கைகளை குறிக்கவும் இந்த ‘அக்த்’ என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. சடப்பொருள்களை இணைத்துக் கட்டுதல் என்ற கருத்தையும், வியாபார கொடுக்கல் வாங்கல் உடன்படிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற கருத்துக்களையும் குறிக்கிறது.

இஸ்லாமிய பரிபாசையில் அகீதா என்பது ஒரு முஸ்லிம் உள்ளத்தினால் உறுதியாக விசுவாசிக்க வேண்டிய நம்பிக்கைகளின் தொகுப்பாகும்.

### அல்குர்ஆன், ஸுன்னா ஆதாரங்கள்

"உண்மையான விசுவாசிகள் எத்தகையோரென்றால், அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் விசுவாசம் கொண்டு, பின்னர் எவ்வித சந்தேகமும் கொள்ளாது, அல்லாஹ்வுடைய பாதையில் தங்களுடைய செல்வங்களாலும் உயிர்களாலும் ஜிஹாத் செய்தார்களே அத்தகையோர் தாம், உண்மை யானவர்கள்." (49 : 15)

அல்குர்ஆனும், சுன்னாவும் குறிப்பிடும் நம்பிக்கை கோட்பாடுகளை ஒரு முஸ்லிம் தன்னுடைய உள்ளத்தினால் ஆழமாக விசுவாசிப்பதே அகீதாவாகும். புலன்களுக்கு உட்படாத மறைவான நம்பிக்கைகளின் மீதே ஒரு மு.ஃமினின் வாழ்வு கட்டி எழுப்பப்படுகிறது. அல்குர்ஆன் இறையச்சமுள்ள மனிதர்களின் பண்புகளை விளக்கும் போது மறைவான உலகின் மீதான நம்பிக்கையை ஆரம்பமாகக் குறிப்பிடுகின்றது.

"அவர்கள் யாரென்றால் மறைவானவற்றை நம்பிக்கை கொள்வார்கள். தொழுகையையும் நிறைவேற்றுவார்கள். நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து (தானமாக) செலவு செய்வார்கள்." (2 : 3)

ஈமான் குறித்து ஜிப்ரீல்(அலை) அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் வினவியதற்கு நபியவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்கள். “அல்லாஹ்வையும், மலக்குமார்களையும், தூதர்களையும், மறுமை நாளையும், கழாகத்ரையும் நம்பிக்கை கொள்வதாகும்.” (புகாரி)

அந்த வகையில், அல்லாஹ், ரிஸாலத், மஆத் ஆகிய பகுதிகளை பிரதானமாக விளக்கும் கலையாக அகீதா விளங்குகிறது.

## இஸ்லாமிய அகீதாவின் முக்கியத்துவம்

இஸ்லாமிய அகீதா இஸ்லாத்தின் ஏனைய அம்சங்களை விட கூடிய முக்கியத்துவம் பெறுகின்றது. அதனைப் புரிந்து கொள்வதனூடாக ஒரு முஸ்லிமின் வாழ்வில் அது பெறும் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளலாம்.

### 1. அனைத்து நபிமார்களினதும் தஃவாவின் அடிப்படை

அல்லாஹ் ஒருவன், அவனுக்கு மாத்திரமே வணக்கம் செலுத்த வேண்டும். அவன் தவிர வேறு எவருக்குமோ, எப்பொருளுக்குமோ வணக்கம் செலுத்தக் கூடாது எனும் கோட்பாட்டை முன்னிறுத்தியே வரலாறு நெடுகிலும் அழைப்புப் பணிகள் இடம்பெற்றன. அல்குர்ஆன் பல இடங்களில் இந்த உண்மையை விளக்குகின்றது.

"நாம் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒவ்வொரு தூதரை அனுப்பி வைத்தோம். (அத்தூதர் அச்சமூகங்களிடம்) நீங்கள் அல்லாஹ்வையே வணங்குங்கள். அல்லாஹ் அல்லாத (ஷைத்தானாகிய) தாகூத்களிடமிருந்து விலகிக் கொள்ளுங்கள் என்றனர்." (16 : 36)

"நாம் நூஹை அவரது சமூகத்திற்கு அனுப்பி வைத்தோம். ‘நிச்சயமாக நான் உங்களை மிகவும் தெளிவாகவே எச்சரிக்கை செய்கிறேன்’ என்று அவர் கூறினார். மேலும், அவர் தனது சமூகத்தை நோக்கி ‘நீங்கள் அல்லாஹ்வைத் தவிர வேறு எதனையும் வணங்காதீர்கள். அவ்வாறு நீங்கள் வணங்கினால் துன்புறுத்தும் நாளின் வேதனையை உங்களின் மீது பயப்படுகிறேன்’ என்றார்." (11: 25, 26)

"நபியே நீர் கூறுவீராக, நிச்சயமாக எனது தொழுகை எனது கிரியை, எனது வாழ்வு, மரணம் ஆகிய அனைத்தும் அகிலங்களின் இரட்சகனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும். அவனுக்கு இணை கிடையாது. இவ்வாறு தான் நான் ஏவப்பட்டுள்ளேன். மேலும் நான் முஸ்லிம்களில் முதலாமவராகவும் இருக்கின்றேன்". (6 : 162, 163)

எனவே, உலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட அனைத்து தூதர்களின் வாழ்வின் அடிப்படையாகவும், பிரசாரத்தின் மையப் பொருளாகவும் அகீதாவின் அடித்தளமான தௌஹீத் அமைந்து இருப்பதை அவதானிக்கலாம். ஒவ்வொரு சமூகத்திலும் காணப்பட்ட குறிப்பிட்ட சில தீமைகளை ஒழிப்பதற்காக நபிமார்கள் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் தௌஹீதை போதிப்பது அனைத்து நபிமார்களினதும் ஒருமித்த இலக்காக காணப்பட்டது.

## 2. அல்லாஹ்விடத்தில் செயல்கள் அங்கீகரிக்கப்படுவதற்கான அளவுகோல்

ஒரு மனிதனின் செயற்பாடுகள் அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டுமாயின் அவனிடத்தில் இறை நம்பிக்கை இருக்க வேண்டும். ஈமானில்லாது மேற்கொள்ளப் படும் எக்காரியமும் அது எத்தகையதாக இருப்பினும் அதற்கு மறுமையில் எந்தப் பெறுமதியும் வழங்கப்படமாட்டாது.

> "ஆணாயினும் அல்லது பெண்ணாயினும் ஈமான் கொண்ட நிலையில் யார் நற்செயல்களை செய்கின்றாரோ நிச்சயமாக நாம் அவரை நல்ல வாழ்க்கையாக வாழச்செய்வோம். மேலும் நிச்சயமாக நாம் அவர்களுக்கான கூலியை அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றில் சிறந்ததாகக் கொடுப்போம்".
> (16 : 97)

> நபி(ஸல்) அவர்கள் "ஒரு மு.ஃமினின் நற்செயலுக்கு அல்லாஹ் எந்த அநீதியையும் செய்யமாட்டான். உலகிலும், மறுமையிலும் அதற்கான வெகுமதியை அல்லாஹ் வழங்குகிறான். ஒரு காபிரைப் பொறுத்தவரையில் அவன் செய்யும் நன்மைகளுக்கு உலகில் விளைவுகள் வழங்கப்பட்டு மறுமையில் எந்த நற்கூலியும் கொடுக்கப்படமாட்டாது" எனக் கூறினார்கள்.
> (முஸ்லிம்)

மறுமையில் நற்கூலி பெறுவதற்கு ஈமான் இன்றியமையாதது என்பதை இந்த ஹதீஸ் உணர்த்துகிறது.

## 3. அல்குர்ஆனின் பிரதான கருப்பொருள்

"அகீதா" பகுதிக்கு அல்குர்ஆன் கூடிய முக்கியத்துவம் அளித்துள்ளது. மக்காவில் இறக்கி வைக்கப்பட்ட ஸூராக்கள் இஸ்லாமிய அகீதாவை தெளிவுபடுத்துவதாகவும், அதன் அவசியத்தை உணர்த்துவதாகவும், அதற்கெதிரான கருத்துகளுக்கு மறுப்புச் சொல்வதாகவும் பெரும்பாலும் அமைந்திருக்கின்றன.

நபி(ஸல்) அவர்கள் தனது த.்.வாவின் ஆரம்பத்தில் இஸ்லாமிய அகீதாவின் பிரதான கூறுகளான தௌஹீத், ரிஸாலத், மஆத் ஆகிய நம்பிக்கை கோட்பாடுகளை முன்வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து காபிர்கள் இந்த நம்பிக்கைகள் அனைத்தும் தாம் ஏற்று வாழும் வாழ்க்கை முறைக்கு முற்றிலும் முரணானவை என்பதை உணர்ந்து எதிர்த்தார்கள். இப்படியாக அகீதாவை மையப்படுத்திய போராட்டமே மக்காவில் இடம்பெற்றது. எனவேதான் அங்கு இறக்கி வைக்கப்பட்ட ஸூறாக்களும் இஸ்லாமிய அகீதாவை பிரதான கருப்பொருளாக கொண்டிருந்தன.

முஸ்லிம் சமூகம் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றது. அங்கு இஸ்லாத்திற்கு நிலம், அதிகாரம், செல்வாக்கு என்பன கிடைத்த போதிலும் இஸ்லாமிய அகீதா குறித்து பேசுவதை அல்குர்ஆன் நிறுத்திக் கொள்ளவில்லை. மதீனாவில் இஸ்லாமிய சட்டங்கள், சமூக உறவுகள், குடும்ப வாழ்வு போன்ற பகுதிகள் மிகவும் விரிவாக பேசப்பட்டாலும் ஈமானோடு தொடர்புபடுத்தியே அல்குர்ஆன் அவற்றை குறிப்பிட்டுள்ளது. இஸ்லாமிய சட்டங்கள் முஸ்லிம் சமூகத்தினுள் நடைமுறைக்கு வரவேண்டுமாயின் அந்த சமூகத்தின் ஈமான் மிகவும் உறுதியாகக் காணப்பட வேண்டும். அதனால் இஸ்லாமிய அகீதா குறித்து அல்குர்ஆன் அதிகம் கவனம் செலுத்தியுள்ளதை புரிந்து கொள்ளலாம்.

**4. தனிமனித, சமூகவாழ்வில் ஆக்க பூர்வமான தாக்கம்**

சட்டமும், அதிகாரமும் ஏற்படுத்தாத மாற்றத்தை அகீதா தனி மனிதனில் ஏற்படுத்துகின்றது. ஒரு மனிதனின் உள்ளத்தில் பசுமையாகக் காணப்படும் இறையுணர்வு, மறுமை நம்பிக்கை என்பன உயர்ந்த செயற்பாடுகளை நோக்கி வழிகாட்டும் அதேவேளை, குற்றங்களை விட்டும் அவனைத் தடுக்கின்றது. மது தடை செய்யப்படுதல் குறித்த அல்குர்ஆன் வசனம் இறங்கிய போது ஸஹாபாக்கள் தங்களது கைகளில் காணப்பட்ட மதுக் கிண்ணங்களை தூக்கியெறியும் நிலைக்கு செல்வதற்கு அவர்களது உள்ளங்களில் ஆழமாக பதிந்திருந்த இஸ்லாமிய கோட்பாடுகளின் மீதான உறுதியான விசுவாசமே காரணமாகும்.

## இஸ்லாமிய அகீதாவின் சிறப்பம்சங்கள் :-

இஸ்லாமிய அகீதா ஏனைய நம்பிக்கை கோட்பாடுகளிருந்து பல வகையில் வித்தியாசப்படுகின்றது. தனித்துவமான சிறப்பம்சங்களை கொண்டுள்ள இஸ்லாமிய அகீதாவை ஏற்றுக் கொண்ட ஒருவர் இம்மை, மறுமை வாழ்வில் வெற்றியடைவார்.

அந்த சிறப்பம்சங்கள் வருமாறு :-

**1. தெய்வீகம் சார்ந்தது**

இஸ்லாமிய நம்பிக்கை கோட்பாடுகள் அனைத்தும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்தவையாகும்.

இயல்பான பலவீனங்களைக் கொண்ட மனிதனின் தலையீடுகள் எதற்கும் உட்படாது மிகவும் தூய்மையானதாக இஸ்லாமிய அகீதா காணப்படுகின்றது.

### 2. மனித இயல்போடு ஒத்துவரக்கூடியது

மனித இயல்போடு ஒத்துச் செல்லக்கூடிய வகையில் இஸ்லாமிய நம்பிக்கை கோட்பாடுகள் காணப்படுகின்றன. உலகில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் இஸ்லாத்தை ஏற்கும் மனோ நிலையிலே பிறக்கின்றன. இதனைத்தான் நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:-

> "ஒவ்வொரு குழந்தையும் பித்ராவுடைய (இஸ்லாத்தை ஏற்கும்) நிலையில் பிறக்கிறது. ஆனாலும் பெற்றோர்கள்தான் அதனை யஹூதிய்யாக அல்லது நஸ்ரானிய்யாக அல்லது மஜூசிய்யாக மாற்றுகிறார்கள்". (புகாரி)

மனிதன் நிர்க்கதியான நிலைக்கு உட்பட்டு இனி எந்த சக்தியாலும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது என்று உணரும்போது இயல்பாகவே இறை நம்பிக்கை அவனுள் தோன்றுகின்றது. இந்த உண்மையை அல்குர்ஆன் தெளிவுபடுத்தியுள்ளது.

### 3. நிலையானது

கால, சூழ்நிலைகளுக்கேற்ப இஸ்லாமிய நம்பிக்கைகளில் மாற்றமேற்படமாட்டாது. இஸ்லாமிய ஷரீஅத் சமூக சூழ்நிலைகளுக்கேற்ப நெகிழ்வுத் தன்மை கொண்டதாக அமைந்திருந்தாலும் இஸ்லாமிய அகீதா வரலாற்று நெடுகிலும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. அனைத்து நபிமார்களும் போதித்த அகீதா ஒன்றாகும்.

> "நாம் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒவ்வொரு தூதரை அனுப்பி வைத்தோம். (அத்தூதர் அச்சமூகங்களிடம்) நீங்கள் அல்லாஹ்வையே வணங்குங்கள்; அல்லாஹ் அல்லாத (ஷைத்தானாகிய) தாகூத்களிடமிருந்து விலகிக் கொள்ளுங்கள் என்றனர்." (16 : 36)

### 4. அறிவுபூர்வமானது

இஸ்லாமிய நம்பிக்கைகள் அறிவுபூர்வமானவை எனும் போது, அறிவினடியாக ஈமான் கொள்ள வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. அல்குர்ஆன் பிரபஞ்சம் பற்றிய உண்மைகளை விளக்கியுள்ளது. பிரபஞ்சத்தை படைத்த ஒருவன் இருப்பதை அறிவு பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தே பிரபஞ்ச உண்மைகளை குர்ஆன் முன்வைத்துள்ளது.

"நிச்சயமாக வானங்கள், பூமி படைக்கப்பட்டிருப்பதிலும், இரவு, பகல் மாறிமாறி வருவதிலும் அறிவுள்ளோருக்கு அத்தாட்சிகளுண்டு". (3 : 190)

### 5. இலகுவானதும், தெளிவானதுமாகும்

இஸ்லாமிய அகீதாவில் விளங்கக் கஷ்டமான தத்துவச் சிக்கல்களோ, நடைமுறைப்படுத்த முடியாத கொள்கைகளோ காணப்படவில்லை. எளிதாக புரிந்துகொள்ள முடியுமான இலகுவான நம்பிக்கைகளாகவே அவை உள்ளன.

## அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதாவும் அது தொடர்பான விளக்கங்களும்

இஸ்லாமிய வரலாற்றில் அகீதா சார்ந்த பல்வேறு பிரிவுகள் தோன்றின. அவற்றுக்கு மத்தியில் அல்குர்ஆன், ஸுன்னாவின் தூயவழியில் செயற்பட்ட அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதா கோட்பாடுகளை விசுவாசிக்கும் நாம் பின்வரும் பகுதிகளில் அஹ்லுஸ் ஸுன்னாவின் நிலைப்பாட்டை விளங்கிக்கொள்வோம்.

1. **அல்லாஹ் :-**

அல்லாஹ்வை ஈமான் கொள்ளுதல் இஸ்லாமிய அகீதாவின் அடிப்படையான அம்சமாகும். அனைத்து நபிமார்களும் அல்லாஹ் ஒருவன் என்பதையே போதித்தார்கள். மலக்குகள், வேதங்கள், நபிமார்கள், மறுமைநாள், கழா, கத்ரை விசுவாசிப்பது என்பன அல்லாஹ்வை ஈமான்கொள்வதனூடாகவே தோன்றுகின்றன. இஸ்லாத்தின் வணக்க வழிபாடுகள், ஒழுக்கநெறிகள், சட்டங்கள் அனைத்துக்கும் அல்லாஹ் பற்றிய நம்பிக்கையே மூலகாரணியாக விளங்குகிறது. அல்லாஹ்வை ஈமான் கொள்ளாத வரை சீரான சிந்தனையும், சரியான செயலும் உருவாகமாட்டா. இந்தவகையில், இஸ்லாமிய அகீதாவில் அல்லாஹ் பற்றிய நம்பிக்கை மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

பிரபஞ்சத்தை படைத்து ஆளும் அல்லாஹ் ஒருவன் இருப்பதை மனிதனுடைய சீரான இயல்பு, மனித அறிவு, விஞ்ஞானம், வரலாறு, வஹி என்பன நிரூபிக்கின்றன. அல்லாஹ் இருப்பதற்கான மிகச்சிறந்த ஆதாரமாக பிரபஞ்சமும், அவனது படைப்பினங்களும் காணப்படுகின்றன. இஸ்லாத்தின் வருகைக்கு முன்பு அரபிகள் அல்லாஹ்வின் இருப்பை ஏற்றிருந்ததாகவும் ஆனால், அல்லாஹ்வின் ஏகத்துவத்தை புரிந்து கொள்வதிலே அவர்கள் தவறுவிட்டதாகவும் அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

"(நபியே) வானங்களையும் பூமியையும் படைத்தவன் யார்? என்று நீங்கள் அவர்களைக் கேட்பீராயின் அதற்கவர்கள் "அல்லாஹ்தான்" என்று நிச்சயமாக கூறுவார்கள்." (31 : 25)

“(அன்றி) ‘ஏழுவானங்களுக்கு இறைவனும் மகத்தான அர்சுக்கு இறைவனும் யார்’ எனக்கேட்பீராக. அதற்கவர்கள் ‘(யாவும்) அல்லாஹ்வுக்குரியனவே’ என்று கூறுவார்கள்.” (23 : 86, 87)

நபிமார்கள் அல்லாஹ்வின் இருப்பை நிறுவிய அதே நேரம் தௌஹீதுக்கு எதிராகத் தோன்றிய ஷிர்க் மற்றும் மௌட்டீக சிந்தனைகளை நீக்குவதற்காகவே போராடினார்கள். அல்லாஹ்வை ஈமான்கொள்வதில் அல்லாஹ் இருக்கிறான் என்பதுடன் அவன் ஒருவன் என்று விசுவாசம் கொள்வது மிகவும் பிரதானமாக அமைகிறது.

பிரபஞ்சத்தைப் படைத்து பரிபாலித்து இரட்சிப்பவன் அல்லாஹ். அவனை மாத்திரமே வணங்கி வழிபட்டு பிரார்த்திக்கவேண்டும். அவனே மனிதர்களுக்கான அனைத்து சட்டங்களையும் இயற்றித்தருபவன். அவனது பண்புகள், பெயர்கள் என்பவற்றில் அவனுக்கு நிகராக, இணையாக எதுவுமில்லை என விசுவாசிப்பது ஒரு முஸ்லிமின் அடிப்படையான கடமையாகும்.

“மெய்யாகவே நாம் நூஹை அவருடைய மக்களிடம் (நம்முடைய தூதராக) அனுப்பிவைத்தோம். அவர் (அவர்களை நோக்கி) ‘நிச்சயமாக நான் உங்களுக்குப் பகிரங்கமாகவே அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறேன். அல்லாஹ்வையன்றி (மற்றெதையும்) நீங்கள் வணங்கக்கூடாது (வணங்கினால்) துன்புறுத்தும் நாளின் வேதனை நிச்சயமாக உங்களுக்கு (வருமென்று) நான் அஞ்சுகிறேன்.’ என்று கூறினார்.” (11 : 25, 26)

## 2. அல்குர்ஆன்

அல்குர்ஆன் என்பது அல்லாஹ் தனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு ஜிப்ரீல்(அலை) அவர்கள் மூலமாக இறக்கி வைத்த, ஓதினால் நன்மை கிடைக்கும் ஒரு வேதமாகும். அல்லாஹ் மனித சமுதாயத்திற்கான தன்னுடைய வழிகாட்டல்களை அவனது வார்த்தைகளாக இறக்கி வைத்தான்.

இறைதூதர் (ஸல்) அவர்களது மரணத்தின் பின்னர் அல்குர்ஆன் எந்த மாற்றத்துக்கும் உட்படாது மிகவும் தூயவடிவிலே பாதுகாக்கப்பட்டது. அல்குர்ஆனை பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றுக்கொண்டதாக அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

"நிச்சயமாக நாம் தான் இவ்வேதத்தை இறக்கிவைத்தோம். நிச்சயமாக நாமே அதனைப் பாதுகாத்துக்கொள்வோம். (15 : 09)

அல்குர்ஆனில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், அதில் இருந்தவை சில நீக்கப்பட்டு, இல்லாதவை சேர்க்கப்பட்டதாகவும் நம்புவது மிகத்தெளிவான குப்ராகும். அல்குர்ஆனின் அமைப்பு முறை, அதன் ஸூராக்கள், ஆயத்துகள்

அனைத்தும் இறைகட்டளையின் பிரகாரம் ஒழுங்குசெய்யப்பட்டவைகளாகும். அல்லாஹ் அல்குர்ஆனுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை அளித்திருப்பது ஏனைய இறை வேதங்கள் பெறாத சிறப்பம்சத்தை அது பெற்றிருக்கிறது என்பதற்கு சிறந்த சான்றாகும்.

எனவே, அல்குர்ஆன் இறைத்தூதர் மீது இறக்கிவைக்கப்பட்ட இறுதி வேதமாகும். அது அல்லாஹ்வின் வார்த்தைகளைக் கொண்டது. மறுமை வரைக்கும் எந்த மாற்றத்துக்கும் உட்படாது பாதுகாக்கப்படும் என்பன அல்குர்ஆன் பற்றிய அஹ்லுஸ்ஸுன்னாக்களின் நம்பிக்கையாகும்.

**3. மறுமை**

மறுமை மீதான நம்பிக்கை ஈமானின் ஆறு பகுதிகளில் ஒன்றாகும். அல்குர்ஆனும், சுன்னாவும் மறுமை இருப்பதற்கான ஆதாரங்களை முன்வைக்கின்றன. மறுமை வாழ்வின் அவசியத்தையும் அதனை நம்புவதன் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தியுள்ளன. மனிதனின் பகுத்தறிவும் மனித இயல்பும் மறுமை இருப்பதனை ஏற்றுக்கொள்கின்றன.

நபி(ஸல்) அவர்கள் தனது தூதை ஜாஹிலிய்யா சமூகத்திற்கு முன்வைத்த போது அதனை அந்த சமூகம் மறுத்தது; மரணத்திற்குப்பின் இன்னொரு வாழ்வு இருப்பதாகக் கூறுவதை மிகவும் ஆச்சரியமாக நோக்கியது. எனவே, மறுமை வாழ்வின் யதார்த்தத்தை உறுதிப்படுத்துவது அல்குர்ஆனின் நோக்கமாக இருந்தது. அதேபோன்று நபி(ஸல்) அவர்களும் மறுமை நம்பிக்கையின் உண்மை நிலையை விளக்கினார்கள்.

"அல்லாஹ்தான் உங்களை பூமியிலிருந்து உற்பத்தி செய்தான். பின்னர் அதில் தான் உங்களை மீளக்கொண்டுவருவான். அதிலிருந்தே (மற்றொரு முறையும்) உங்களை வெளிப்படுத்துவான்". (71 : 17-18)

"நிச்சயமாக இந்த உலக வாழ்வு அற்பமான இன்பமாகும். மறுமைதான் நிரந்தர வீடாகும்". (40 : 39)

மனிதனின் ஒவ்வொரு உறுப்பையும் மீண்டும் அதேவடிவில் அமைக்க அல்லாஹ் சக்தியுள்ளவன் என்பதை அல்குர்ஆன் பின்வருமாறு தெளிவுபடுத்து கிறது :-

"நிச்சயமாக நாம் மனிதனது விரல் நுனிகளைக்கூட சீராக உருவாக்கு வதற்குச் சக்தி பெற்றுள்ளோம்" (75 : 04)

மறுமை என்பது பல்வேறுபட்ட நிகழ்வுகளைக் கொண்டது. அந்த வகையில் பிரபஞ்ச அழிவு, மஹ்ஷர் மைதானம், சுவர்க்கம், நரகம் என மிக விரிந்த நிகழ்வுகளைக் கொண்டதாக உள்ளது. மறுமை நம்பிக்கை என்பது பிரபஞ்ச அழிவிலிருந்து ஆரம்பித்து அதனைத் தொடர்ந்து வரும் அனைத்து நிகழ்வு களையும் குறிக்கின்றது.

பிரபஞ்ச அழிவு குறித்து அல்குர்ஆன் பல ஸூராக்களில், பல வசனங்களில் விளக்கியுள்ளது. ஸூரதுல் தக்வீரில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான் :-

"சூரியன் சுருட்டப்படும்போது, நட்சத்திரங்கள் உதிரும் போது, மலைகள் பெயர்க்கப்படும் போது, பத்து மாதங்கள் கர்ப்பமுடைய ஒட்டகம் கைவிடப்படு கின்ற போது" (81 : 1-4)

உலகில் மனிதன் செய்யும் செயல்களுக்கான நிறைவான கூலி மறுமையில் வழங்கப்படுகின்றது. நன்மையாக இருந்தால் அதற்குரிய நற்கூலியும், தீமையாக இருந்தால் அதற்குரிய தண்டனையும் வெகுமதியாக வழங்கப்படுகின்றன.

" தீர்ப்பளிப்போருக்கெல்லாம் அல்லாஹ் மிக மேலாகத் தீர்பளிப்பவன் இல்லையா?" (95 : 8)

அதேபோன்று ஷபாஅத், மீஸான், ஸிராத், பட்டோலை வழங்கல் போன்றவற்றோடு, சுவர்க்க இன்பங்களும், நரகின் தண்டனைகளும் மறுமை நம்பிக்கையில் உள்ளடங்குகின்றன.

### 4. றிஸாலத்

றிஸாலத் என்பது அல்லாஹுத்தஆலா நபிமார்கள் மற்றும் றஸூல்மார்களுக் கூடாக இறக்கி வைத்த வேதங்களைக் குறிக்கின்றது. றிஸாலத்தை விசுவாசிப்பது ஈமானின் அடிப்படைகளில் ஒன்றாகும். உலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட அனைத்து நபிமார்களின் பணியாக அவர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட தூதை எத்திவைத்தல் இருந்தது. அவர்கள் தமது சமூகத்தைப் பார்த்து பின்வருமாறு கூறினார்கள் :-

"சமூகமே நான் உங்களுக்கு எனது இரட்சகனின் றிஸாலத்தை எத்தி வைத்து விட்டேன்". (7 : 79)

நபி ஷுஐப் (அலை) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.
"சமூகமே நான் உங்களுக்கு எனது இரட்சகனின் றிஸாலத்தை எத்திவைத்துவிட்டேன்". (7 : 93)

**வேதங்களை ஈமான் கொள்ளுதல்**

இறைவனால் நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து வேதங்களையும் ஈமான் கொள்வது அவசியமாகும். இறைவனால் வழங்கப்பட்ட தூது பல்வேறு வடிவங்களை பெற்றிருப்பதனைக் காணலாம்.

அல்லாஹ் சில தூதுகளை வானத்திலிருந்து எழுத்து வடிவிலே இறக்கி வைத்தான். மூஸா(அலை) அவர்கள் மீது இறக்கி வைக்கப்பட்ட தௌராத் வேதம் எழுதப்பட்ட நிலையில் இறக்கப்பட்டதை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது :-

> "நாம் அவருக்கு கொடுத்த ஏடுகளில் ஒவ்வொரு விஷயம் பற்றிய நல்லுபதேசங்களையும், ஒவ்வொரு கட்டளையின் விபரங்களையும் எழுதிவிட்டு நீர் இதனைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொண்டு அதிலிருக்கும் சிறந்தவை களை எடுத்துக் கொள்ளும்படி உமது மக்களுக்கு கட்டளையிடுவீராக" (என்றும் கூறினோம்). (7 : 145)

வேறு சில தூதுகள் ஓதிக் கொடுத்தல் மூலம் நபிமார்களுக்கு இறக்கி வைக்கப்பட்டன. இந்தவகையில் அல்குர்ஆனும் ஓதிக்காட்டுதல் மூலம் இறக்கப்பட்டதாகும்.

> "மனிதர்களுக்கு நீர் சிறிது, சிறிதாக ஓதிக் காண்பிக்கும் பொருட்டு, இந்தக் குர்ஆனைப் பல பாகங்களாக நாம் பிரித்தோம். அதற்காகவே நாம் இதனைச் சிறுகச் சிறுக இறக்கி வைத்தோம். (17 : 106) என அல்குர்ஆன் இறக்கப்பட்ட விதம் பற்றி அல்லாஹ் பிரஸ்தாபிக்கிறான்.

வேறு சில தூதுகள் வஹியின் மூலம் நபிமார்களுக்கு வழங்கப்பட்டும்கூட அவை புத்தக வடிவம் பெறவில்லை. நபிமார்களான இஸ்மாஈல் (அலை), இஸ்ஹாக்(அலை), ய∴கூப்(அலை) ஆகியோருக்கு இறக்கி வைக்கப்பட்ட தூதுகளை உதாரணங்களாக குறிப்பிடலாம்.

நபிமார்களுக்கு வழங்கப்பட்ட வேதங்கள் மேற்கூறப்பட்டவாறு மூன்று வகையாக இறக்கப்பட்டன. இத்தகைய அனைத்து வேதங்களையும் விசுவாசிப்பது

ஒரு முஸ்லிமின் மீது கடமையாகும். அவற்றில் சிலவற்றை ஏற்று இன்னும் சிலவற்றை நிராகரிப்பவர் உண்மை முஸ்லிமாக இருக்க முடியாது.

நபி (ஸல்) அவர்களை விசுவாசித்த மு.ஃ.மின்களுக்கு அல்லாஹ் அனைத்து தூதர்களையும் விசுவாசிக்கும்படி கட்டளையிடுகிறான்.

> "விசுவாசிகளே ! ‘அல்லாஹ்வையும், எங்களுக்கு அருளப்பட்ட வேதங்களையும் இப்றாஹீம், இஸ்மாயில், இஸ்ஹாக், ய.ஃ.கூப் போன்றவர்களுக்கும் அவர்களது சந்ததிகளுக்கும் அருளப் பெற்றவற்றையும் மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் கொடுக்கப்பட்டிருந்ததையும் மற்றைய நபிமார்களுக்கு அவர்களது இரட்சகனிடமிருந்து கொடுக்கப்பட்டிருந்ததையும் நாங்கள் விசுவாசிக்கின்றோம். அவர்களுக்கு மத்தியில் நாம் வேறுபாடு காட்டமாட்டோம். நாங்கள் அவனுக்கே முற்றிலும் வழிபடுவோம்’ என்று கூறுங்கள்." (2 : 136)

இறைவனால் இறக்கி வைக்கப்பட்ட அனைத்து வேதங்களையும் நாம் விசுவாசிக்கும் அதேவேளை, ஒவ்வொரு வேதமும் எந்தெந்த சமூகங்களுக்கு இறக்கி வைக்கப்பட்டதோ அந்த சமூகங்கள் அதற்குக் கட்டுப்படுவது கடமை என்பதையும் விசுவாசிக்க வேண்டும். அதேவேளை, இறைவனின் ஒரு தூது இன்னொரு தூதை உறுதிப்படுத்துவதாகவே அமைகின்றது. இந்தவகையில் தௌராத்தை இன்ஜீல் உறுதிப்படுத்துகிறது. அல்குர்ஆன் முன்னர் வந்த வேதங்களை உண்மைப்படுத்துகிறது.

அல்லாஹ் இறக்கியவற்றில் எதையாவது ஒன்றை யார் மறுக்கின்றாரோ அவர் காபிராகி விடுவார். அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான் :-

> "எவன் அல்லாஹ்வையும் அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதிநாளையும் நிராகரிக்கின்றானோ அவன் நிச்சயமாக வெகுதூரமான வழிகேட்டில்தான் செல்லுகின்றான்." (4 : 136)

முன்னால் வந்த ஒரு ஷரீஅத்தை பின்னால் வந்த ஷரீஅத் முழுமையாக அல்லது அதன் சில பகுதிகளை மாற்றும் எனவும் நாம் விசுவாசிக்கின்றோம். தௌராத்தில் ஹராமாக்கப்பட்ட சிலவற்றை இன்ஜில் ஹலாலாக்கியது.

> "உங்கள் மீது ஹராமாக்கப்பட்ட சிலவற்றை உங்களுக்கு ஹலாலாக்கு கின்றோம்". (3 : 50)

அல்குர்ஆன் தௌராத், இன்ஜீல் வேதங்களில் கூறப்பட்டுள்ள பல சட்டங்களை மாற்றியமைத்தது.

"எவர்கள் எழுத்தறிவற்ற நம் தூதராகிய இந்த நபியைப் பின்பற்று கின்றார்களோ அவர்கள், உங்களிடமுள்ள தௌராத்திலும், இன்ஜீலிலும் இவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதை காண்பார்கள். (இத்தூதரோ) அவர்களை நன்மைகளை ஏவி, தீமைகளை விட்டும் தடுப்பார். நல்லவைகளை ஆகுமாக்கி, கெட்டவைகளை ஹராமாக்குவார். மேலும் அவர்களது பளுவை அவர்களை விட்டும் போக்கி, அவர்கள் மீதிருந்த விலங்குகளையும் நீக்கி விடுவார்". (7 : 157)

**5. ஸஹாபாக்கள்**

'ஸஹாபி' என்ற சொல்லின் பன்மை 'ஸஹாபா' என்பதாகும். ஸஹாபி என்பது இறைத்தூதரைக் கண்டு, அவர்களை ஏற்று, பின்பற்றி வாழ்ந்தோரைக் குறிக்கின்றது. அவர்கள் இஸ்லாத்தின் தூதை மிகவும் கவனமாக பாதுகாத்து பின்னால் வந்த சமூகங்களுக்கு எத்தி வைத்தார்கள். அல்லாஹ் இவர்களை அல்குர்ஆனில் பல இடங்களிலே புகழ்ந்து கூறுகிறான்; அவர்களை திருப்தியோடு ஏற்றுக் கொண்டதாகவும் அவர்களுக்கு சுவனம் கிடைப்பதாகவும் வாக்குறுதி அளித்துள்ளான்.

(அ) "முஹாஜிர்களிலும், அன்சார்களிலும் எவர்கள் முதலாவதாக முந்திக் கொண்டு விசுவாசம் கொண்டார்களோ அவர்களையும், நற்கருமங்களில் அவர்களை பின்பற்றியோரையும் அல்லாஹ் திருப்தியோடு ஏற்றுக் கொண்டான். அவர்களும் அல்லாஹ்வை திருப்தியோடு ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்காக நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனங்களை தயார்படுத்தியுள்ளான். அதிலே எப்போதும் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள். அதுவே மகத்தான வெற்றியாகும்". (9 : 100)

(ஆ) "முஹம்மத் அல்லாஹ்வின் தூதர் ஆவார். அவரோடு, இருப்பவர்கள் நிராகரிப்பவர்கள் விடயத்தில் மிக்க கண்டிப்பானவர்களாகவும், தங்களுக்கு மத்தியில் இரக்கமுள்ளவர்களாகவும் இருப்பர். நீர் அவர்களை ருகூஉ, ஸுஜூது செய்தவர்களாக காண்பீர்". (48 : 29)

(இ) "மு.்.மின்கள் உங்களோடு மரத்துக்குக் கீழால் பைஅத் செய்து கொண்ட போது அவர்களை அவன் திருப்தியோடு ஏற்றுக் கொண்டான்". (48 : 18)

(ஈ) "அவர்களுக்கு பின்னால் வந்தவர்கள் 'எங்களது இறைவா எங்களினதும், எங்களுக்கு முன்னால் வாழ்ந்த மு.்.மினான சகோதரர்களினதும் பாவங்களை மன்னித்து விடுவாயாக, எமது உள்ளங்களில் ஈமான் கொண்டவர்கள் மீது குரோதத்தை ஏற்படுத்தி விடாதே, எமது இறைவா

நீயோ மிகவும் கருணையும், இரக்கமுள்ளவனுமாக இருக்கிறாய்' எனக்கூறுவார்கள்." (59 : 8 - 10)

பொதுவாக அல்குர்ஆன் அனைத்து ஸஹாபாக்களையும் பாராட்டிப் பேசுகிறது. முஹாஜிர்கள், அன்ஸாரிகள், அவர்களுக்குப் பின்னால் வந்தவர்கள் அவர்களுக்காக பாவ மன்னிப்புக் கேட்பவர்கள், அவர்கள் தொடர்பாக நல்லெண்ணம் வைப்பவர்கள் போன்றோரைப் பற்றி புகழ்ந்து கூறுகின்றது.

ஸஹாபாக்களை ஏசுவதை நபி(ஸல்) அவர்கள் கண்டித்தார்கள். 'நீங்கள் என்னுடைய தோழர்களை ஏசாதீர்கள்' என்றார்கள். (முஸ்லிம்)

ஸஹாபாக்களை நேசிப்பது முஸ்லிம்களின் கடமையாகும். அவர்களது பணிகளையும், தியாகங்களையும் எடுத்துச் சொல்வதும் அவர்களை நேசிப்போரை நேசிப்பதும் ஒரு முஸ்லிமின் சிறந்த பண்பாகும்.

### 6. பாவம் செய்வோரின் நிலை

பெரும் பாவம் செய்தோர் பற்றிய நிலைப்பாட்டில் மு.:.தஸிலா, ஹவாரிஜ்களை விட்டும் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்தினர் வேறுபடுகின்றனர். இவ்விரு பிரிவினரும் பெரும்பாவம் செய்தவர் நரகில் நிரந்தரமாக தங்கி விடுவதாக குறிப்பிடுகின்றனர். ஹவாரிஜ்கள் பெரும்பாவம் செய்தவனை காபிராகவும் மு.:.தஸிலாக்கள் ஈமானுக்கும் குப்ரிற்கும் இடையில் இருப்பவராகவும் கருதுகிறார்கள்.

பெரும் பாவம் செய்தோர் அல்லாஹ்வை ஈமான் கொண்ட நிலையில், தௌபா கேட்காதவர்களாக மரணித்தால் நரகம் செல்வார்கள். அவர்கள் அல்லாஹ்வின் பூரண விருப்பம் மற்றும் தீர்ப்பைப் பொறுத்து விளைவைப் பெற்றுக் கொள்வார்கள். அல்லாஹ் தனது அருளைக் கொண்டு அவன் விரும்பினால் மன்னித்து அவர்களை சுவனத்தில் நுழைவிப்பான்.

"ஷிர்க்கைத் தவிர ஏனைய பாவங்களை அவன் விரும்பியோருக்கு மன்னிப்பான்." (4 : 48)

அதேபோன்று அவன் நாடினால் பாவிகளை அவனது நீதியின் காரணமாக நரகில் இட்டு தண்டித்து பிறகு அவனது அருளின் மூலம் அதிலிருந்து வெளியேற்றி சுவனத்திற்கு அனுப்பி விடுவான் என்பதே பாவிகள் தொடர்பான அஹ்லுஸ் ஸுன்னாக்களின் நிலைப்பாடாகும்.

இறைதூதர்(ஸல்) அவர்கள், "யார் லாஇலாஹ இல்லல்லாஹ்வை ஏற்ற நிலையில் மரணிக்கின்றாரோ அவர் சுவர்க்கம் நுழைவார்". (முஸ்லிம்)

மேலும் அவர்கள் “சுவர்க்கவாசிகள் சுவனத்திலும், நரகவாசிகள் நரகத்திலும் நுழைவார்கள். பிறகு அல்லாஹுவுத்தஆலா ‘யாருடைய உள்ளத்தில் கடுகளவேனும் ஈமான் இருந்ததோ அவர்களை நரகத்தைவிட்டு வெளியேறி விடுங்கள்’ என்று கூறுவான்” என்றார்கள். (புகாரி)

சில பாவங்களை இஸ்லாம் குப்ராகவும், ஷிர்க்காகவும் கூறியுள்ளது. உதாரணமாக பின்வரும் நபிமொழிகளை எடுத்துக் காட்டலாம்.

"முஸ்லிமை ஏசுவது பாவமாகும். அவனுக்கெதிராக போராடுவது குப்ராகும்". (புகாரி)

"யார் அல்லாஹ் அல்லாத ஒன்றின் மீது சத்தியம் செய்கிறாரோ அவர் இணைவைத்துவிட்டார்". (அஹ்மத்)

மேற்படி ஹதீஸ்களை அடிப்படையாகக் கொண்டே ஹவாரிஜ்கள் பெரும்பாவம் செய்தோரை காபிர்கள் என்று கூறினார்கள். ஆனால், அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅத்தின் நிலைப்பாடும், விளக்கமும் வித்தியாசமானது. இங்கு "குப்ர்" என்பது ஒருவரை மார்க்கத்திலிருந்து வெளியேற்றும் குப்ரை குறிக்கமாட்டாது. மாறாக நன்றி மறத்தலைக் குறிக்கின்றது. அதேபோன்று யார் குறிப்பிட்ட பாவத்தை மார்க்கத்தில் ஆகுமாக்கப்பட்டவைகளாகக் கருதிச் செய்கின்றாரோ அவர்களே காபிராகி விடுவர். மாற்றமாக பாவம் என்பதை ஏற்றுக்கொண்ட நிலையில் அதில் ஈடுபடுபவர்கள் பாவியாகவே கணிக்கப்படுவர். இந்தவகையில் பெரும்பாவம் செய்தோர் நரகில் நிரந்தரமாக தங்கமாட்டார்கள் என்பதே அஹ்லுல் ஸுன்னாக்களின் கருத்தாகும்.

### 7. வலிமார்கள்

‘வலீ’ என்ற சொல்லின் பன்மை வடிவமே ‘அவ்லியா’ என்பதாகும். ‘வலீ’ என்பது இறைநேசன் என்ற கருத்தை குறிக்கின்றது. அல்லாஹ்வுடைய நெருக்கத்தையும், நேசத்தையும் பெற்ற மனிதர்களை அல்குர்ஆன் "அவ்லியா" என்று அழைக்கின்றது. அல்குர்ஆனில் அல்லாஹ் தன் நேசர்களை மூன்று வசனங்களுக்கூடாக தெளிவுபடுத்தியுள்ளான்.’

“நிச்சயமாக இறை நேசர்களுக்கு எந்தப் பயமுமில்லை. அவர்கள் கவலையடையவுமாட்டார்கள். அவர்கள் ஈமான் கொண்டு, இறையச்ச முள்ளவர்களாக இருந்தார்கள். உலகிலும், மறுமையிலும் அவர்களுக்கு

சுபசெய்தி உண்டு. அல்லாஹ்வுடைய வார்த்தைகளில் மாற்றம் இல்லை. அது மகத்தான வெற்றியாகும்." (10 : 62-64)

மேற்குறிப்பிட்ட வசனம் இறைநேசர்கள் யார் என்பதை விளக்கியுள்ளது. அவர்கள் ஈமானையும், தக்வாவையும் பெற்றவர்கள். அதாவது, அவர்களது அகீதாவும், நடத்தையும் சீராகக் காணப்படும். எனவே, ஈமான் என்பது அத்திவாரமாகவும் தக்வாவானது கட்டடமாகவும் இருக்கும். எனவே, அல்குர்ஆனின் கருத்துப்படி அவ்லியாக்கள் என்பவர்கள் மனிதர்களில் மிகவும் சிரேஷ்டமான வர்களாக இருப்பார்கள்.

ஆனால், அவ்லியாக்கள் என்போர் மறைவான அறிவுகொண்டவர்களாகவோ, இறைவனின் பௌதீக விதிகளுக்கு மாற்றமாக செயற்படுபவர்களாகவோ இருக்கமாட்டார்கள். மாற்றமாக அவர்களும் மனிதர்களே. அதேவேளை மலாஇகாமார்களைப் போன்று பரிசுத்தமானவர்களுமல்லர்; நபிமார்களைப் போன்று பாவங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்களுமல்லர்; அவர்கள் இறையச்ச முள்ளவர்கள்; பாவங்களைத் திட்டமிட்டுச் செய்யாதவர்கள்; பாவங்களில் ஈடுபட்டுவிட்டால் உடனே விலகி, பாவ மன்னிப்பை தேடிக் கொள்பவர்களாக இருப்பார்கள்.

"அவர்கள் மானக்கேடானவைகள் செய்தால் அல்லது தங்களுக்கே அநியாயம் செய்து கொண்டால் உடனே அல்லாஹ்வை நினைவுகூர்ந்து, தங்களது பாவங்களுக்காக மன்னிப்பை பெற்றுக்கொள்வார்கள். (3 : 135)

**அ. வலிமார்களும் கராமத்தும்**

"கராமத்" என்பது அல்லாஹ் தனது நல்லடியார்களின் மூலம் வெளிப்படுத்தும் பௌதீக இயல்புக்கு மாற்றமானதொரு செயற்பாடாகும். இறைநேசர்களை கண்ணியப்படுத்துவதற்காக வழங்கப்படும் அருளாக கராமத் காணப்படுகின்றது.

மர்யம் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் தன் புறத்திலிருந்து ஆகாரமளித்தமை பற்றி அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

> "ஸகரிய்யா மிஹ்ராபுக்குள் நுழையும் போது மர்யமுக்குப் பக்கத்தில் ஆகாரமிருப்பதைக் கண்டு 'மர்யமே இது எங்கிருந்து உனக்கு வந்தது' எனக்கேட்க அதற்கு அவர் 'அல்லாஹ்வின் புறத்திலிருந்து வந்ததாகும்' எனக் கூறினார்". (3 : 37)

உப்பாது பின் பிஷ்ர் (ரழி) அவர்களும் உஸைத் பின் ஹுழைர் (ரழி) அவர்களும் ஓர் இரவில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஏதோ பேசிவிட்டு, அவர்களுடைய இல்லத்திலிருந்து வெளியே வந்து தங்கள்

வீடுகளை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அந்த இரவோ மிகவும் இருள் சூழ்ந்திருந்தது. அப்போது ஒரு சாட்டையைப் போன்ற தோற்றத்தில் ஓர் ஒளி அவர்களுக்கு வெளிச்சம் கொடுத்துக்கொண்டே சென்றது. அவர்கள் ஒவ்வொருவரும் தம் வீடுகளுக்கு பிரிந்து சென்றபோது அந்த ஒளியும் பிரிந்து இருவருடனும் சென்றது. (புகாரி)

இந்தவகையில் 'கராமத்' என்பது அல்லாஹ் தன் நல்லடியார்களுக்கு வழங்கும் அருளாகும்.

## அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ அல்லாதோர்

இஸ்லாமிய வரலாற்றில் பல்வேறுபட்ட காரணங்களால் அகீதா ரீதியான பல்வேறு பிரிவுகள் தோன்றின. அதன் விளைவாக அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தின் தூய அகீதாக் கொள்கைகளுக்கு முரணான பல நம்பிக்கைகளும், கருத்துக்களும் பரவ ஆரம்பித்தன. இங்கு அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தின் அகீதாவோடு முரண்படும் பிரதானமான நான்கு பிரிவினரை நோக்குவோம்.

### 1. முஃதஸிலா

உமையா காலப்பிரிவில் தோற்றம் பெற்ற முஃதஸிலாக் கொள்கை அப்பாஸிய கிலாபத்தில் நீண்ட காலமாக பெரும் செல்வாக்குச் செலுத்தியது. பெரும்பாவம் தொடர்பான தீர்ப்பில் வாஸில் பின் அதா என்பவர் தனது ஆசிரியரான இமாம் ஹஸனுல் பஸரி (றஹ்) அவர்களோடு முரண்பட்டு ஒதுங்கிச் சென்றமையால் அவரும், அவரது கொள்கைகளைப் பின்பற்றியோரும் 'முஃதஸிலாக்கள்' என அழைக்கப்படுகின்றார்கள். எனினும் அவர்கள் தங்களை "அஹ்லுத்தவ்ஹித் வல் அத்ல்" என்றே அழைத்தனர். பஸராவில் தோற்றம் பெற்ற இக்கொள்கை பின்னர் ஈராக்கின் பல நகர்களிலும் பரவியது. இக்கொள்கை அப்பாஸிய சாம்ராஜ்யத்தின் அரச கொள்கையாக சிலகாலம் இடம் பிடித்திருந்தது.

### முஃதஸிலாக்களின் கொள்கைகள்

1. **அல்-மன்ஸிலது பைனல் மன்ஸிலதைன் : பெரும்பாவம் செய்த ஒருவர் முஸ்லிம் - காபிர் என்ற இரு நிலைகளுக்கு மத்தியில் இருத்தல்.**
   பெரும்பாவம் செய்தவர் முஸ்லிம் - காபிர் என்ற இரு நிலைகளுக்கும் மத்தியில் இருப்பதாக முஃதஸிலாக்கள் குறிப்பிடுகின்றனர். அதாவது, பெரும்பாவம் செய்த ஒரு முஸ்லிம் அதற்காக உலகில் தௌபா செய்யாமல் மரணித்தால் அவர் முஸ்லிமாகவோ அல்லது காபிராகவோ இருப்பதில்லை. மாற்றமாக பெரும் பாவியான நிலையில் நரகில் நிரந்தரமாக தங்கி விடுவதாக அவர்கள் கூறுகிறார்கள்.

2. **நீதி. (அல்-அத்ல்)**

பகுத்தறிவுவாத சிந்தனைப்போக்கு கொண்ட மு.்.தஸிலாக்களின் பிரதான கொள்கையாக நீதி (அல்அத்ல்) என்பது காணப்படுகின்றது. மனிதனின் பகுத்தறிவுக்கு கூடிய முக்கியத்துவமளித்து அதன் அடிப்படையில் அவர்கள் பல நம்பிக்கைகளை உருவாக்கிக் கொண்டார்கள். மனித அறிவின் நீதித் தன்மையில் அளவு மீறிய நம்பிக்கை கொண்டு இக்கருத்துக்களை முன்வைத்தார்கள். அனைத்து விடயங்களிலும் நல்லதையும், கெட்டதையும் தீர்மானிக்கும் சக்தி பகுத்தறிவுக்கு உண்டு என்றும் பகுத்தறிவினுடாக பெறப்பட்ட தீர்ப்பை பின்பற்றுவது கடமை என்றும் மனிதன் பூரண செயற் சுதந்திரமுள்ளவன் என்றும் அவர்கள் கூறினார்கள்.

3. **தௌஹீத்**

அல்லாஹ்வுடைய திருநாமங்கள், பண்புகள் தொடர்பான நம்பிக்கையிலும் அஹ்லுஸ்ஸுன்னாவோடு மு.்.தஸிலாக்கள் முரண்படுகின்றனர். ஸாத்தும் ஸிபத்தும் வெவ்வேறானவை அல்ல என்று கூறுவர். இவை இரண்டையும் பிரித்து தனியாக நோக்கினால் இறைவனின் ஒருமைத்தன்மை நீங்கிவிடும் என்பர்.

4. **அல் வ.்.து வல் வஈத்து - வாக்குறுதியும் எச்சரிக்கையும்**

நன்மைகளுக்கு கூலி வழங்கப்படுவதாக அளிக்கப்பட்ட வாக்குறுதியும், தீமைகளுக்கு தண்டனை வழங்கப்படுவதாக எச்சரிக்கப்பட்டதும் நிச்சயமாக நடந்தே தீரும் என்பது இந்தக் கொள்கையின் கருத்தாகும். மறுமையில் பாவிகளுக்கு தண்டனை வழங்கப்படாமல் மன்னிப்பு வழங்கப்படும் என்ற கூற்றானது அல்லாஹ்வுடைய தண்டனையை அர்த்தமற்றதாக்கிவிடுகிறது. இந்தக் கொள்கையின் காரணமாகவே மு.்.தஸிலாக்கள் மறுமையில் ஷபாஅத் மூலமாக பாவிகள் பயன்பெறுவதை நிராகரிக்கின்றனர்.

5. **அல் - அம்ரு பில்-ம.்.ரூப் வன் நஹ்ரீ அனில் முன்கர் - நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தல்**

நன்மையை ஏவி தீமையை தடுத்தல் என்பது அகீதாவின் அடிப்படை அம்சம் என்று குறிப்பிடுவதே இதுவாகும்.

## 2. ஷீஆ

இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் தோற்றம் பெற்ற மிகப் பழமை வாய்ந்த பிரிவே ஷீஆவாகும். நபி(ஸல்) அவர்களுக்குப் பிறகு கிலாபத் பதவிக்கு நபி(ஸல்) அவர்களின் குடும்பத்தினரே முற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை தான் ஷீஆக்களது தோற்றத்துக்கு பிரதான காரணியாகும். இந்தவகையில் அலி(றழி) அவர்கள் நபி(ஸல்) அவர்களுக்குப் பிறகு கலீபாவாக பதவியில் அமர்த்தப்பட்டிருக்க வேண்டும் என்பது ஷீஆக்களின் பலமான கருத்தாகும்.

## அ. ஷீஆக் கொள்கைகள்

### இமாமத் கோட்பாடு

1. இமாமத் மார்க்கத்தின் அடிப்படைத் தூணாகும். இமாமை தெரிவுசெய்யும் பொறுப்பை நபி(ஸல்) அவர்கள் முஸ்லிம் உம்மத்திற்கு வழங்கவில்லை. இமாமத் மார்க்கத்தின் அடிப்படையாக விளங்குவதால் நபி(ஸல்) அவர்கள் தனக்குப் பின்னால் தலைவரை நியமித்துவிட்டு மரணித்தார்கள்.

2. இமாம் சிறிய, பெரிய பாவங்களில் இருந்து முழுமையாக பாதுகாக்கப் பட்டவர்.

3. நபி(ஸல்) அவர்களுக்குப் பிறகு கிலாபத்திற்கு அலி(றழி) நியமிக்கப் பட்டிருந்தார். தனக்குப் பின்னர் கலீபாவாக அவர் பொறுப்பேற்பார் என்பதை தெளிவான வசனங்களினால் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள். இந்தவகையில் தான் நபி (ஸல்)அவர்களது வஸியத்தின் மூலம் நியமிக்கப்பட்ட இமாமாக அலி (றழி) அவர்கள் கருதப்படு கின்றார்கள்.

4. நபி(ஸல்) அவர்களுக்குப் பிறகு உலகிலும், மறுமையிலும் மிகவும் சிறந்த படைப்பாக அலி(றழி) அவர்கள் இருந்தார்கள். எனவே, யார் அவரை எதிர்க்கின்றாரோ அல்லது அவருக்கு எதிராக போராடு கின்றாரோ அவர் தௌபா செய்யாதவரை அல்லாஹ்வின் எதிரியாக இருப்பார்.

இத்தகைய பிரதான கொள்கைகளின் அடிப்படையில் தோற்றம் பெற்ற ஷீஆக்கள் காலப் போக்கில் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து கொண்டனர். ஒவ்வொரு குழுவும் தனியான கொள்கைகளை உருவாக்கிச் செயற்பட்டனர். இதனால் அவர்களுக்கு மத்தியிலும் அதிகமான முரண்பாடுகள் உள்ளன. அவர்களில் மிகவும் தீவிர போக்குள்ளோரும், நடுநிலைப் போக்குள்ளோரும் இருக்கின்றனர்.

நடு நிலைப்போக்குள்ளோர் ஏனைய ஸஹாபாக்களை விடவும் அலி(றழி) அவர்கள் சிறந்தவர் என்று கூறுவதோடு மாத்திரம் நின்று கொண்டனர். ஸஹாபாக்களை காபிர்கள் என்றோ, பெரும்பாவிகள் என்றோ கூறவில்லை. இந்தவகையில் மிகவும் சிறந்தவர் ஒருவர் இருக்கும்போது அவரை விட தரத்தில் குறைந்த ஒருவர் இமாமாக வருவதை இவர்கள் ஏற்றுக்கொள்வர். இவர்களுக்கு உதாரணமாக ஷீஆக்களில் ஸைதிய்யா பிரிவைக் குறிப்பிடலாம்.

மிகவும் தீவிர நிலைப்பாட்டைக் கொண்ட ஷீஆ பிரிவினரைப் பொறுத்த வரையில் அலி(றழி) அவர்களை ஏனைய ஸஹாபாக்களை விட சிறந்தவராகவும், எந்தப் பாவமும் செய்யாதவராகவும் கருதுவதோடு அவரை நபியுடைய தரத்துக்குக்

கூட உயர்த்தியுள்ளனர். நபி(ஸல்) அவர்களுக்குப் பிறகு கிலாபத் அலி (றழி) அவர்களுக்குச் செல்ல இருந்ததை அபூபக்ர் (றழி), உமர் (றழி), உஸ்மான் (றழி) ஆகியோர்கள் பறித்துக் கொண்டதாகவும் கூறுகின்றனர்.

### ஆ. ஷீஆப் பிரிவினர்கள்

இஸ்லாமிய வரலாற்றில் தோற்றம் பெற்ற பிரதானமான ஷீஆப்பிரிவுகள் :

1. ஸைதிய்யா
2. இஸ்னா அஷரிய்யா
3. இஸ்மாஈலிய்யா
4. நுஸைரிய்யா

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பிரிவினரும் வித்தியாசமான கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் கொண்டுள்ளனர்.

### 3. வஹ்ததுல் வுஜூத் கோட்பாட்டாளர்கள்

இஸ்லாம் முன்வைத்த தூய தௌஹீத் கோட்பாட்டிற்கு முரணான ஒரு நம்பிக்கையே 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாடு ஆகும். இஸ்லாமிய வரலாற்றில் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்திய கொள்கைகளில் ஒன்றாக வஹ்ததுல் வுஜூத் எனும் அத்வைதக் கொள்கை காணப்படுகிறது.

இப்பிரபஞ்சத்திற்கும், அதிலுள்ள அனைத்து படைப்பினங்களுக்கும் கருவாக இருப்பது இறைவனின் ஸிபத்துகளில் ஒன்றான "வுஜூத்" எனப்படும் மெய்ப் பொருளாகும். இந்த இறைவனின் மெய்ப்பொருள் தான் சர்வசிருஷ்டிகளாக தோற்றம் பெற்றது. இந்த சிருஷ்டிகள் தோன்ற முன்பு அவை அந்த மெய்ப்பொருளினுள் அடங்கிக் கிடந்தன. பின் இறைவன் சிருஷ்டிகளாகத் தோன்றினான். எனவே, பிரபஞ்சத்திற்கென்று ஒரு மெய்ப்பொருளில்லை. மாறாக அது இறைவனுடைய மெய்ப்பொருளின் வெளிப்பாடாகும். அப்படியாயின் நாம் காணும் இப்பிரபஞ்சம் இறைவனாகும் என்பதே அத்வைதக் கொள்கையின் சாரம்சமாகும்.

அத்வைதிகளின் கருத்துப்படி உலகில் படைப்பாளன், படைப்பினம் என்ற வேறுபாடில்லை. பிரபஞ்சத்திலுள்ள சகல சிருஷ்டிகளும் அவற்றின் மூலாதாரத்தைப் பொறுத்து இறைவனாகவே இருக்கின்றன. வெளித் தோற்றத்தை நோக்கும்போது அவை சிருஷ்டிகளாக தோற்றமளிக்கின்றன. அவற்றுக்கெல்லாம் இறைவனின் உள்ளமையே மூலமாக இருக்கின்றது.

உண்மையில் இக்கொள்கையானது குர்ஆன், ஸுன்னாவுக்கும் அவற்றின் அடிப்படையாக எழுந்த அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தின் நம்பிக்கை கோட்பாட்டுக்கும் முற்றிலும் முரணானதாகும். சிருஷ்டிகள் அனைத்தையும் இல்லாமையிலிருந்து படைத்தான் என்ற இஸ்லாத்தின் அடிப்படை தௌஹீத் நம்பிக்கைக்கு இது முற்றிலும் முரணானதாகும். உலகத்தை படைத்தாளும் இறைவனின் ஒருமைத் தன்மையை தெளிவு படுத்தும் அல்குர்ஆன் வசனங்கள் ஏராளமாக உள்ளன.

"நபியே அல்லாஹ்வைத்தவிர வேறு எந்த இறைவனும் இல்லை என்பதை நீர் அறிந்து கொள்வீராக". (47 : 19)

"நபியே நீர் கூறுவீராக. அல்லாஹ் ஏகன். அவன் எந்தத் தேவையும் அற்றவன். அவன் யாரையும் பெறவுமில்லை, (அவன்) பெறப்படவுமில்லை". (112 : 1-3)

அத்வைதக் கொள்கையானது வஹியின் வெளிச்சத்தை விட்டும் தூரமாகிய நிலையில், ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்ட தத்துவஞானிகளின் தத்துவங்களுக்கு மத்தியில் மெய்ப்பொருள் பற்றி எழுந்த கருத்து வேறுபாடுகளிலிருந்து தோற்றம் பெற்ற ஒரு தத்துவமாகும்.

### 4. இறுதி நபித்துவத்தை மறுப்போர்

நபி(ஸல்) அவர்கள் இறைவனின் இறுதித் தூதராவார்கள். அவர்களுக்குப் பின் எந்த நபியும் வரப்போவதில்லை என்பது முஸ்லிம்களின் அடிப்படை நம்பிக்கையாகும். இதற்கு மாற்றமாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் புதியதொரு கோட்பாடு தோன்றியது. இவர்கள் இறுதி நபித்துவத்தை மறுப்போர் என வழங்கப்படுகின்றனர். இவர்கள் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆவுக்கு முரணானவர்களாக கொள்ளப்படுகின்றனர்.

# தௌஹீத்

### தௌஹீத் பற்றிய பொது விளக்கம்

அல்லாஹ் பற்றிய நம்பிக்கை இஸ்லாமிய அகீதாவின் அடிப்படையாகும். அதே வேளை தௌஹீத் எனும் ஏக தெய்வ நம்பிக்கை இறை நம்பிக்கையின் அடிப்படையாக விளங்குகின்றது.

தௌஹீதை அறிந்து கொள்வது ஒரு முஸ்லிமின் அடிப்படை கடமையாகும். ஏனெனில், இறை நம்பிக்கை பற்றி கூறும்போது அல்லாஹ் தௌஹீத் பற்றியே கூறுகிறான். தௌஹீதின் அடிப்படையில் தான் இஸ்லாம் மார்க்கம் எழுந்திருக்கின்றது. அல்குர்ஆனின் மூல ஊற்றும் அதுவாகத்தான் இருக்கிறது. இறைத்தூதர்கள் அனைவரும் தௌஹீதைத் தான் போதித்தார்கள். தௌஹீதின் யதார்த்தத்தை புரிந்து வாழ்பவர்களே சுவர்க்கத்தை பெறுகிறார்கள். தௌஹீதை மறுப்போர் நரக வாழ்வுக்கு உரியவர்களாகின்றார்கள்.

இஸ்லாம் போதித்த தௌஹீத் "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற சுருக்கமான வசனத்தால் விளக்கப்படுகின்றது. ‘அல்லாஹ் அன்றி வேறு இறைவன் இல்லை’ என்பது இதன் பொருளாகும். இந்த வசனம் அல்லாஹ் அல்லாத எதற்கும், எவருக்கும் தெய்வீகத்தன்மை கிடையாது எனக்கூறி அல்லாஹ்வுக்கு மட்டுமே தெய்வீகத்தன்மை இருப்பதாகச் சுட்டிக் காட்டுகின்றது.

இதனை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் :-

> "நிச்சயமாக அல்லாஹ் அவன்தான் சத்தியமானவன் ; நிலைத்திருப்பவன்; அவனல்லாத அவர்கள் அழைக்கும் அனைத்தும் அசத்தியமானவை, அழிந்து போகக்கூடியவை; அவன் உயர்ந்தவன், பெரியவன்". (22 : 62)

“இலாஹ்” என்பதன் பொருள் வழிபடத்தக்கவன், அன்புக்குரியவன் என்பதாகும். அல்லாஹ் பூரணமான பண்புகளை பெற்றிருப்பதால் அவன் முழுமையாக அன்பு வைக்கப்படவும், வழிபடுவதற்கும் தகுதியுள்ளவனாக இருக்கிறான்.

தௌஹீத் கோட்பாட்டை இரு பிரிவாக வகைப்படுத்தலாம் :-

1. நம்பிக்கை, கொள்கை ரீதியான தௌஹீத்
2. நடத்தை, நடைமுறைவாழ்வு சம்பந்தமான தௌஹீத்

ஒரு முஸ்லிமிடம் இந்த இருவகையான தௌஹீதும் இணைந்து காணப்பட வேண்டும். எனவே, ஒரு மனிதனுடைய ஈமான் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமாயின் முதலில் அல்லாஹ்வை உரிய முறையில் நம்ப வேண்டும். அல்லாஹ், ஸாத், பண்புகள், (ஸிபத்து) செயற்பாடுகள் (அப்ஆல்) என்பவற்றில் தனித்துவமானவன்; ஒப்பற்றவன்; பிள்ளைகளோ, தாய் தந்தையோ அற்றவன் என்று ஏற்று, நம்பிக்கை கொள்ள வேண்டும். அதேவேளை, மனிதனின் செயற்பாடுகளும் இந்த நம்பிக்கையை பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். அவனுக்கு மட்டுமே பயப்பட வேண்டும். எனவே, தௌஹீதின் இவ்விரு பகுதிகளும் ஒரு முஸ்லிமின் வாழ்வில் பிரித்து நோக்க முடியாதவைகளாகும்.

## தௌஹீதின் முக்கியத்துவம்

புலன்களுக்கும், அறிவுக்கும் அப்பாற்பட்டவனும் வணக்கத்திற்கும் வழிபாட்டுக்கும் தகுதி வாய்ந்தவனுமாகிய அல்லாஹ்வை நம்புவது தவ்ஹீதின் அடிப்படையாகும். இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகளின் அத்திவாரமும் இதுவாகும்.

அல்குர்ஆன் ஈமானின் அடிப்படைகளைப் பற்றி விளக்குகின்ற போது இறை நம்பிக்கையை முதலாவது அடிப்படையாகக் குறிப்பிடுகின்றது. கீழ்வரும் வசனங்கள் இதற்கு உதாரணங்களாகும்:-

> “இறைத்தூதரும் மு.ஃ.மின்களும் இறைத்தூதரின் இரட்சகனிடமிருந்து அவருக்கு அறிவிக்கப்பட்டவற்றில் நம்பிக்கை கொண்டார்கள். அவர்கள் அனைவரும் அல்லாஹ்வையும், அவனது மலக்குகளையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும் நம்பிக்கை கொண்டனர்.” (2 : 285)

> “எனினும், நற்கருமம் எதுவெனில், அல்லாஹ்வையும், இறுதித் தூதையும் மலக்குகளையும், வேதங்களையும், நபிமார்களையும் நம்புவதாகும்”. (2 : 177)

> நபி (ஸல்) அவர்களிடம் ஈமான் பற்றி ஜிப்ரீல்(அலை) அவர்கள் வினவியபோது பின்வருமாறு பதிலளித்தார்கள். “ஈமான் என்பது அல்லாஹ்வை நம்புவதும், அவனது மலக்குகளையும், மறுமை நாளையும், விதியின் படியே நன்மை, தீமை அனைத்தும் நடைபெறும் என்பதையும் நம்புவதுமேயாகும்”. (புகாரி, முஸ்லிம்)

எனவே, அல்லாஹ் மீதான நம்பிக்கை ஏனைய நம்பிக்கைகளுக்கெல்லாம் அடிப்படையானதாகும். அகீதாவின் ஏனைய அம்சங்கள் அனைத்தும் இந்த நம்பிக்கையை ஒட்டியே உருவாகின்றன. எனவே, ஒருவர் அல்லாஹ்வை நம்பியதன்

பின்னரே அவர் மலக்குகளையும், வேதங்களையும், அவனது தூதர்களையும் மறுமை நாளையும், கழாகத்ரையும் நம்புகிறார்.

இறை நம்பிக்கையின் அடிப்படையாக விளங்கும் 'தௌஹீத்' விடயத்தில் இஸ்லாம் கூடிய கவனம் செலுத்துகின்றது. உலகத்தை படைத்து, பரிபாலிக்கும் ஒருவன் இருக்கின்றான் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒருவன் இறைவனின் தௌஹீத் பண்பை ஏற்க மறுக்கமாட்டான்.

பிரபஞ்சத்தை ஆளுபவன் ஏக இறைவனாகும். அவனே படைப்பாளன், கட்டளைகளை இடுபவனும் அவனே. அனைத்து சிருஷ்டிகளும் அவனிடமே மீள இருக்கின்றன. அனைத்துப் பொருட்களையும் படைத்து, வளர்த்து, வழிகாட்டுபவனும் அவனே. அனைத்து நிகழ்ச்சிகளையும் நிர்வகிப்பவனும் அவனே. அவன் மாத்திரமே வணக்கத்துக்குரியவன். அவனது கட்டளைகள் மீற முடியாதவை. இவ்வுண்மைகளே தௌஹீதின் சுருக்கமாகும். இதனையே கீழ்வரும் இறைவசனம் குறிப்பிடுகின்றது.

> "அந்த அல்லாஹ் உங்களுடைய இரட்சகனாவான். அவனைத் தவிர வேறு இறைவனில்லை. அனைத்தையும் படைத்தவன் அவனே. எனவே நீங்கள் அவனையே வணங்கி வழிபடுங்கள். அவனே அனைத்துக்கும் பொறுப்பாக இருப்பவன். பார்வைகள் அவனை எட்ட முடியாது. அவன் நுணுக்கமாக அறிபவனும், ஆழ்ந்த அறிவுள்ளவனுமாவான்". (6 : 102, 103)

இஸ்லாம் அறிமுகமான போது உலகெங்கும் இறைவனுக்கு இணை வைக்கின்ற பண்பு பரவியிருந்தது. இறைவனை மாத்திரம் வணங்கியவர்கள் மிகவும் குறைவாகவே இருந்தனர். உதாரணமாக, அரேபிய தீபகற்பத்தில் இப்றாஹீம் (அலை) அவர்களது மார்க்கத்தையும் யூத, கிறிஸ்தவர்களின் மார்க்கத்தையும் ஓரளவு அறிந்திருந்த "ஹனீப்கள்" என்றழைக்கப்பட்ட மிகச்சிறியதொரு தொகையினரே விக்கிரக ஆராதனையின் செல்வாக்கிலிருந்து விடுபட்டு, அல்லாஹ்வை நம்பி வந்தார்கள்.

> அபூரஜா அல் உதாரிதி என்ற ஸஹாபி கூறுகிறார்கள் : "நாங்கள் கற்களை வணங்கிக் கொண்டிருந்தோம். நாம் வணங்கும் கல்லை விடச் சிறந்த கல்லை கடவுளாகப் பயன்படுத்திக் கொள்வோம். எமக்கு கல் கிடைக்காமல் போனால் மண்குவியல் செய்து, அதில் ஆட்டின் பாலை ஊற்றி அதை வலம் வருவோம்." (புஹாரி)

மேற்குறிப்பிட்ட சம்பவம் எந்தளவுக்கு அறபு சமூகம் விக்கிரக ஆராதனையில் மூழ்கியிருந்தது என்பதனைத் தெளிவாக விளக்குகின்றது. அவர்கள் வணங்கும் இத்தகைய கடவுள்களைப் பற்றித்தான் கீழ்வரும் திருவசனம் குறிக்கின்றது :-

"...... அல்லாஹ் அல்லாத எவற்றை நீங்கள் (தெய்வங்களென) அழைக்கின்றீர்களோ அவை யாவும் ஒன்று சேர்ந்(து முயற்சித்)த போதிலும் ஓர் ஈ அவற்றினுடைய யாதொரு பொருளை எடுத்துக்கொண்ட போதிலும் அந்த ஈயிடமிருந்து அதனை விடுவிக்கவும் அவைகளால் முடியாது. (அவர்கள் தெய்வங்களென அழைக்கும்) அவை அவ்வளவு பலவீனமானமை. ஆகவே அவற்றை (த் தெய்வங்களென) அழைப்பவர்களும் பலவீனமானவர்களே." (22:73)

அல்லாஹ்வின் ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் எனக்கருதி மனிதர்களை அல்லது மலக்குகளை வணங்கும் வழக்கமும் பல சமூகங்களில் பரவிக் காணப்பட்டது.

இதனால் தான் இஸ்லாம் தௌஹீதில் முழுக் கவனத்தையும் செலுத்தியது. அறிவிலும் செயற்பாடுகளிலும் அது பிரதிபலிக்க வேண்டும் என விரும்பியது. தௌஹீதின் உண்மை நிலையை நிறுவ ஆதாரங்கள் உள்ளன. மனித அறிவும், இயல்பும் கூட அல்லாஹ்வின் ஒருமைத்துவத்தை ஏற்றுக் கொள்கின்றன. இந்த உண்மையை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"அவனே உங்களைத் தரையிலும், கடலிலும் பயணம் செய்ய வைக்கிறான்; (சில சமயம்) நீங்கள் கப்பலில் இருக்கும் போது - சாதகமான நல்ல காற்றினால் (கப்பலிலுள்ள) அவர்களைக் கப்பல்கள் (சுமந்து) செல்லும் போது அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள் ; பின்னர் புயல்காற்று வீசி எல்லாப் பக்கங்களிலிருந்தும் அலைகள் மோதும் போது, நிச்சயமாக (அலைகளால்) சூழப்பட்டோம் (தப்பவில்லையே) என்று எண்ணுகிறார்கள். அச்சமயத்தில் தூய உள்ளத்துடன்," நீ எங்களை இதிலிருந்து காப்பாற்றிவிட்டால் மெய்யாகவே நாங்கள் உனக்கு நன்றி செலுத்துபவர்களாக இருப்போம்." (10 : 22) என்று கூறுவார்கள்.

இறை நம்பிக்கையின் அடிப்படையாகிய தௌஹீத் பிரதானமாக மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1. தௌஹீத்தில் றுபூபிய்யா
2. தௌஹீத்தில் உலூஹிய்யா
3. தௌஹீதுல் அஸ்மா வஸ்ஸிபாத்

## 1. தௌஹீத் றுபூபிய்யா

அல்லாஹ்தான் முழுப் பிரபஞ்சத்தையும் படைத்தான். இப்பிரபஞ்சத்தை ஆள்பவனும் அவனே. அவனுக்கு இணை கிடையாது. அவன் ஒப்பற்றவன்; ஏகன். அவனது விதிகளை மாற்ற யாரும் சக்தி பெறமாட்டார்கள். அனைத்தையும் படைத்து பரிபாலிக்கும் இரட்சகன் அவனே என்ற அடிப்படையில் நம்பிக்கை வைப்பதே தௌஹீத் றுபூபிய்யா எனப்படும்.

தௌஹீதின் இப்பகுதியை மறுப்போர் மிகவும் குறைவு. இறைவனின் இருப்பை மறுக்கும் நாஸ்திகவாதிகளே றுபூபிய்யத்தை மறுக்கிறார்கள். பெரும்பான்மையான மக்கள் இதனை ஏற்கிறார்கள். உதாரணமாக, நபி (ஸல்) அவர்களது காலத்திற்கு முன்னரே அறபு மக்கள் தௌஹீதின் இப்பகுதியை நம்பி வாழ்ந்தனர். அல்குர்ஆன் இதனை உறுதிப்படுத்துகின்றது.

> “அவர்களிடம் நீங்கள் வானங்களையும், பூமியையும், படைத்தவன் யார்? சூரியனையும், சந்திரனையும் தன் திட்டப்படியே நடக்கும்படி செய்தவன் யார் என்று அவர்களைக் கேட்டால், நிச்சயமாக அல்லாஹ்வே என்று கூறுவார்கள். (29 : 61)

> “வானத்திலிருந்து நீரை இறக்கி, பூமி இறந்து போனதன் பின்னால் அதனை உயிர்ப்பிப்பவன் யார் என்று நீங்கள் அவர்களைக் கேட்டால் நிச்சயமாக அல்லாஹ்வே என்று அவர்கள் கூறுவார்கள்”.(29 : 63)

> "நபியே ‘நீங்கள் அறிவுடையோராயின் பூமியும், அதில் இருப்பவைகளும் யாருக்குச் சொந்தமானது?’ என்று அவர்களிடம் வினவுவீராக! அதற்கு ‘அல்லாஹ்வுக்கே சொந்தமானது’ என்று அவர்கள் கூறுவார்கள்.

‘அப்படியாயின் நீங்கள் சிந்தித்து உணர்வு பெறுவதில்லையா?’ என்று கேட்பீர்களாக! (நபியே) மேலும் நீங்கள் ‘ஏழு வானங்களின் சொந்தக்காரன், மகத்தான அர்ஷின் சொந்தக்காரன் யார்’ என்று, கேளுங்கள் அதற்கு “அல்லாஹ் தான்” என்று அவர்கள் சொல்வார்கள். ‘அப்படியாயின் நீங்கள் பயபத்தியோடு நடந்து கொள்ளவில்லையா’ என்று கேட்பீர்களாக, (நபியே) மேலும் நீர் ‘அனைத்தினதும், ஆட்சி, அதிகாரம் யார் கையில் இருக்கிறது? பாதுகாப்பை யாரிடமும் வேண்டி நிற்காமலே யார் பாதுகாப்பளிக்கின்றார்? அறிவுள்ளோராயின் (பதில் கூறுவீர்களாக)’ என்று கேட்பீராக! அதற்கு அவர்கள் "அல்லாஹ்வே" என்று கூறுவார்கள். அவ்வாறாயின் எப்படி நீங்கள் இத்தன்மைகளை விட்டும் பிறழ்ந்து செல்வீர்கள் என்று நபியே கேட்பீர்களாக” (23 : 84 – 89)

அல்லாஹ்வுக்கு இணைவைத்து வணங்கிய அந்த அறபிகள் கூறிய இப்பதில்கள் அவர்கள் தௌஹீத் றுபூபிய்யாவை ஏற்றுக்கொண்டிருந்தார்கள் என்பதை காட்டுகின்றது. இதனை அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்த போதும் தௌஹீத் உலூஹிய்யாவை அவர்கள் நிராகரித்தார்கள்.

**2. தௌஹீத் உலூஹிய்யா**

“இலாஹ்” என்ற சொல்லில் இருந்து பெறப்பட்டதே உலூஹிய்யா ஆகும். “இலாஹ்” என்பதன் பொருள் வழிபடத்தக்கவன், அன்புக்குரியவன் என்பதாகும். அல்லாஹ் குறைபாடுகளற்ற பூரணத்துவமான பண்புகளை பெற்றிருப்பதால் அவன் முற்றிலும் வழிபடவும், அன்பு செலுத்தப்படவும் தகுதியுள்ளவனாவான்.

இந்த வகையில் “உலூஹிய்யா” என்பது அல்லாஹ்வுக்கு மட்டுமே அடிமைப்படல், அவனை மட்டுமே வணங்கி, அவனுக்கு மட்டுமே பூரணமாக வழிபட்டு நடத்தல், எந்த வகைகளிலும் அவனுக்கு இணைவைக்காதிருத்தல் என்ற கருத்துக்களைக் குறிக்கும்.

அரபு மக்கள் தௌஹீத் றுபூபிய்யாவை ஏற்று வாழ்ந்தார்கள் என ஏற்கனவே நாம் பார்த்தோம். ஆனால், அவர்கள் இதனால் முஸ்லிம்களாகி விடவில்லை. ஏனெனில், அவர்கள் அல்லாஹ்வுக்கு இணை வைத்தார்கள். இறைவனிடம் நெருங்க அல்லது அவனிடம் அவர்களுக்காக பரிந்துரைக்க நடுவர்களாக பல கடவுள்களை வைத்துக் கொண்டார்கள்.

உலகமக்கள் தௌஹீதின் இப்பகுதியை ஆரம்ப காலம் முதலே புறக்கணித்து வந்துள்ளார்கள். பல கடவுளர்களை உருவாக்கி அல்லாஹ்வுக்கு இணை வைத்தார்கள். நூஹ்(அலை) அவர்களது சமூகத்தினர் வத், சுவாஉ, யகூது, யஊகு, நஸ்ரு போன்ற கடவுள்களையும், இப்றாஹீம்(அலை) அவர்களது சமூகத்தினர் விக்கிரகங்களையும் பழங்கால எகிப்தியர் மாட்டையும், மஜூஸிகள் நெருப்பையும், வேறு சிலர் தங்களது மதப் புரோகிதர்களையும், மதத் தலைவர்களையும் வணங்கினார்கள். எனவே இவர்கள் அனைவரும் அல்லாஹ்வுக்கு மட்டுமே வணக்கத்தைச் செலுத்தவில்லை என்ற வகையில் இணைவைப்பாளர்களாகவே கருதப்படுவர். தௌஹீத் றுபூபிய்யாவோடு, தௌஹீத் உலூஹிய்யா இணையாதபோது தௌஹீத் பூரணம் பெறமாட்டாது.

தௌஹீத் உலூஹிய்யாவை பிரதிபலிப்பதாக "இபாதத்" அமைகின்றது. இஸ்லாத்தில் இபாதத் என்பது பூரண பணிவோடும், அன்போடும் நிறைவேற்றப்படும் செயலாகும். இந்தவகையில் இறைவனின் முழு அதிகாரத்திற்கும் உட்பட்டதாக இபாதத் காணப்படுகின்றது. தௌஹீத் உலூஹியாவை ஒருவன் ஏற்றிருப்பதற்கான சிறந்த அடையாளமாக இபாதத் காணப்படுகின்றது. வணக்க வழிபாடுகள், இறைவனின் சட்டமியற்றும் அதிகாரம் என்பவற்றை மனப்பூர்வமாக ஏற்று பின்பற்றும் ஒரு மு.்.மின் இறைவனின் உலூஹிய்யாவை விசுவாசித்தவனாகின்றான். தௌஹீத் உலூஹிய்யா என்ற இப்பகுதியே மிகவும் முக்கியமானதாகும். இறைதூதர்கள் இப்பகுதிக்கே கூடிய முக்கியத்துவமளித்துள்ளனர்.

### 3. தௌஹீத்துல் அஸ்மா வஸ்ஸிபாத்

அல்லாஹ்வின் திருநாமங்களையும், பண்புகளையும் ஈமான் கொள்ளுதல், அவற்றில் யாரையும் இணைவைக்காதிருத்தல் 'தௌஹீத் அல் அஸ்மா வஸ்ஸிபாத்' என குறிக்கப்படுகின்றது.

> "அல்லாஹ்வுக்கு சிறந்த நாமங்கள் இருக்கின்றன. நீங்கள் அவற்றைக் கொண்டு அவனை அழைப்பீர்களாக". (7 : 180)

அல்லாஹுத்தஆலா தன்னை தனக்கேயுரிய பண்புகள், மற்றும் பெயர்களுக் கூடாக மனிதர்களுக்கு அறிமுகப்படுத்தினான். அவன் தனக்காக சூட்டிக் கொண்ட பெயர்களைக் கொண்டே தன்னை அழைக்குமாறு அல்குர்ஆனிலே குறிப்பிடு கிறான்.

அல்லாஹ்வின் பண்புகள், மற்றும் திருநாமங்களுக்கு நிகராக படைப்புக்களை ஒப்பிடுதல் தௌஹீதுக்கு முரணானதாகும். அல்லாஹ்வுக்கு நிகராக உலகில் எந்தப் படைப்பும் கிடையாது. அல்குர்ஆனிலே அல்லாஹ் இக்கருத்தை பல இடங்களில் வலியுறுத்துகிறான்.

> "அவனைப் போன்று எதுவுமில்லை. அவன் மிகவும் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கிறான்". (26 : 11)

> "நபியே நீர் கூறுவீராக ! அல்லாஹ் ஏகன்; அவன் எந்தத் தேவையுமற்றவன்; அவன் யாரையும் பெறவுமில்லை; யாராலும் பெறப்படவுமில்லை; அவனுக்கு நிகராக எதுவுமில்லை". (112 : 1-4)

அல்லாஹ்வுடைய திருநாமங்களில் ஒன்றை மறுப்பதுகூட குப்ராகவும், அவற்றில் ஒன்றை படைப்பினங்களுக்கு நிகராக்குவது ஷிர்க்காக அமையும்.

## தௌஹீதின் பயன்கள்

தௌஹீத் ஒரு மனிதனின் வாழ்வில் சிறந்த பயன்களையும் நல்ல விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது. தௌஹீத் ஏற்படுத்தும் பயன்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

### 1. மனித சுதந்திரம் :-

"ஷிர்க்" மனிதனை தன்னைப் போன்ற படைப்பினங்களுக்கு அடிபணிய வைக்கின்றது. நன்மையோ, தீமையோ விளைவிக்க முடியாத, படைக்கும் ஆற்றலற்ற அற்ப பொருள்களுக்கு அவனை அடிமைப்படுத்துகின்றது. ஆனால் தௌஹீத் எல்லா அடிமைத்துவங்களிலிருந்தும் மனிதனை விடுவிக்கின்றது. தௌஹீதை ஏற்ற மனிதன் தனது இரட்சகனுக்கே அடிமையாகின்றான்.

தௌஹீத் மௌட்டீகக் கொள்கைகள், வெறும் அனுமானங்கள், யூகங்களிலிருந்து மனித அறிவுக்கு விடுதலை அளிக்கின்றது. கண்மூடித்தனமாக பின்பற்றல் என்ற நிலையிலிருந்து உள்ளத்தை அது விடுவிக்கிறது. மனிதர்களை அடிமைப்படுத்தி ஆளும் ஆட்சியாளரிடமிருந்து அவனது வாழ்வுக்கு விடுதலையை கொடுக்கின்றது. இந்த வகையில் 'லாஇலாஹ இல்லல்லாஹு' என்பது மனித சுதந்திரப் பிரகடனமாகும்.

### 2. சமநிலை கொண்ட ஆளுமை

தௌஹீத் என்ற ஏகத்துவக் கொள்கையை விசுவாசித்தவனின் உள்ளம் எப்போதும் ஒரே இறைவனை நோக்காகக் கொண்டிருக்கும். இதனால் அவனது உள்ளம் சிதறுண்டு போகமாட்டாது; சமநிலைத் தன்மை காணப்படும். ஆனால், அல்லாஹ்வுக்கு இணைவைக்கும் மனிதன் இதற்கு நேர்மாற்றமானவன். அவனது உள்ளம் பல கடவுளர்களை மையமாகக் கொண்டு சுழலும். இதனை நபி யூஸுப் (அலை) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

> "சிறையில் இருக்கும் என்னிரு தோழர்களே ! வெவ்வேறு பல கடவுளர்கள் இருப்பது சிறந்ததா? அல்லது அனைத்தையும் அடக்கியாளும் ஒரே இறைவனாகிய அல்லாஹ் இருப்பது சிறந்ததா?" (12 : 39)

### 3. தௌஹீத் உள அமைதியை ஏற்படுத்தும்

தௌஹீத் உள்ளத்திற்கு அமைதியையும், பயமற்ற, கலக்கமற்ற நிலையையும் தரும். மக்களின் பயத்திற்கு காரணமாக இருக்கும் அனைத்து வாயில்களையும் தௌஹீத் அடைத்து விடுகின்றது. வருமானம் பற்றிய பயம், தனது குடும்பத்திற்கு வரும் துன்பங்கள் பற்றிய பயம், மனிதர்கள், ஜின்களால் உருவாக்கும் பய உணர்வுகள், மரண பயம், மரணத்தின் பின்னாலுள்ள நிலைகுறித்த பயம் இப்படி பல்வேறு பயங்களை நீக்கி, உள்ளத்திற்கு அமைதியைத் தருகிறது. இந்த உண்மையை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது :-

> "ஈமான் கொண்டு, ஈமானோடு அநியாயம் எனும் இணைவைப்புக் கலந்து விடாதோருக்கே பாதுகாப்பு உள்ளது. அவர்களே நேர்வழி பெற்றவர்கள்". (6 : 82)

உலகில் முஃமின்களுக்கு மன அமைதியும், பாதுகாப்பு உணர்வும் அவ்வாறே மறுமையிலும் நிலையான உயர்ந்த பாதுகாப்பும் கிடைக்கின்றது.

### 4. தௌஹீத் மனோ வலிமையைத் தருகிறது

தௌஹீத் மனித வாழ்வில் வலிமையை உண்டுபண்ணுகின்றது. அல்லாஹ்வின் மீதே பூரண நம்பிக்கை வைத்தல், படைப்புக்களில் நம்பிக்கை கொள்ளாதிருத்தல் போன்ற பண்புகள் தௌஹீதால் உருவாக்கப்படுவதால் முஃமினின் உள்ளத்தில் ஒரு பெரும் சக்தி உருவாகிறது. ஒரு முஃமினுக்கு துன்பம் நேர்ந்துவிட்டால்

அல்லாஹ்வை நோக்கி விரைந்து செல்வான் ; அவனிடம் முறையிடுவான் ; அவனிடம் மாத்திரமே தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முனைவான்.

#### 5. தௌஹீத் சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் ஏற்படுத்தும்

சமூகத்தில் சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் ஏற்படுத்துவதற்கு தௌஹீத் அடிப்படையாக அமைகிறது. மக்கள் அனைவரும் சம அந்தஸ்துள்ளோர் என்ற கருத்து நிலவும்போது ஒரு சமூகத்தில் சமத்துவம், சகோதரத்துவமும் ஏற்பட முடியும்.

அடியார்கள் அனைவரும் சமமானவர்கள் என்பதே தௌஹீத் உலகில் உருவாக்கிய கருத்தாகும். நபி(ஸல்), மன்னர்களுக்கு எழுதிய கடிதங்கள் கீழ்வரும் இறைவசனத்தோடு முடிவதை பார்க்க முடியும்.

> "உங்களுக்கும், எங்களுக்கும் இடையே பொதுவான கருத்துக்கு வாருங்கள். அதாவது, அல்லாஹ்வுக்கு மட்டுமே நாம் "இபாதத்" செய்ய வேண்டும். அவனுக்கு எதனையும் இணைவைக்கக் கூடாது. அல்லாஹ்வை யன்றி எங்களில் ஒருவர், இன்னொருவரை அடிபணிவதற்கு தகுதியான கடவுளாக கொள்ளக்கூடாது". (ஆல இம்ரான் 64)

### தௌஹீதுக்கு முரணானவைகள் :

### (1) குப்ர்

குப்ர் என்பது தௌஹீதுக்கு எதிரானதாகும். குப்ர் என்ற அரபுச் சொல்லின் மொழிக்கருத்து நிராகரித்தல் என்பதாகும். பரிபாசையில், அல்குர்ஆன் அல்லது நபி (ஸல்) அவர்கள் தெளிவாக குறிப்பிடும் ஓர் அம்சத்தை மறுத்தலை குப்ர் என கூறலாம்.

ஈமான் என்ற சொல்லின் எதிர்க் கருத்தான குப்ர் என்பது உண்மைகளை மறைத்தல், திரையிடல் போன்ற கருத்துக்களை தருகிறது. இயல்பாக இஸ்லாத்தில் பிறந்த மனிதன் தனது இயல்பின் மீது அறியாமையெனும் திரையிட்டுக் கொண்டிருப்பதால் அவன் காபிர் என அழைக்கப்படுகிறான். ஒருவன் இஸ்லாமிய

இயல்புடனே பிறக்கிறான். அவனது உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் இறைவனுக்கு முழுமையாக கட்டுப்படுகின்றன. அவனது விதிகளுக்கு ஏற்ப அவை முரண்படாது இயங்குகின்றன. மனிதனை சூழ இருக்கும் பிரபஞ்சமும் இறைவனின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு செயல்படுகின்றது. ஆனால் மனிதனோ இறைவனை நிராகரிக்கும் காபிராக இருக்கிறான்.

## இறை நிராகரிப்பு தோன்றும் சில சந்தர்ப்பங்கள்

1. பிரபஞ்சத்தைப் படைத்து, பரிபாலித்து, இயக்குவிக்கும் ஆற்றல் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உண்டு. இத்தகைய நம்பிக்கையில் கோளாறு ஏற்படும் போது குப்ர் ஏற்பட்டுவிடுகிறது. இந்தவகையில், படைப்பாளனை மறுத்தல், படைப்பாற்றலை வேறொன்றுக்கு அல்லது வேறொருவருக்கு வழங்குதல், பிரபஞ்சம் திடீரென அல்லது தானாக தோன்றியதாக நம்புதல், அல்லாஹ் படைப்பினங்களை படைத்துவிட்டு இரட்சிக்காமல் விட்டுவிட்டான் என்று கூறுதல் இறைவனுடைய றுபூபிய்யா பண்புகளில் களங்கம் ஏற்படுத்தும். வகையில் நம்பிக்கை கொள்ளல், கருத்துத் தெரிவித்தல், நடந்து கொள்ளுதல் என்பன குப்ராகும்.

   அதேபோன்று இறைவனுக்குரிய றுபூபிய்யா பண்பு தனக்கிருப்பதாக பிர்அவ்னைப் போன்று வாதிப்பதும் குப்ராகும். ”நான் உங்களது மிகவும் உயர்வான இரட்சகன்” (79 : 24) என பிர்அவ்ன் கூறினான்.

2. அல்லாஹ்வுடைய பண்புகளையும் திருநாமங்களையும் ஏற்றுக்கொள்வது இறைநம்பிக்கையின் அடிப்படை அம்சமாகும். அல்லாஹ்வுக்கு தனியான பெயர்களும் பண்புகளும் உள்ளன. அதே போன்று அவனுக்கு இருக்க முடியாத பண்புகளும் உள்ளன.

## * அல்லாஹ்வின் பண்புகளை மறுத்தல் இரண்டு வகைப்படும்

(அ) **குப்ர் அன்நப்ஈ :-**

அதாவது அல்லாஹ்வின் பண்புகளை மறுப்பதை இது குறிக்கும். அல்லாஹ்வுடைய அறிவு, சக்தி, நிலையான தன்மை, பார்வை, கேள்வி போன்ற பண்புகளை மறுப்பதாகும்.

அதேபோன்று அல்லாஹ்வுடைய பண்புகள் மற்றும் பெயர்களுக்கு அவற்றின் பூரண தன்மையை பாதிக்கும் வகையில் விளக்கம் கொடுப்பதும் இந்த வகைக் குப்ராகும்.

(ஆ) **குப்ர் அல்இஸ்பாத் :-**

அல்லாஹ்வுக்கு இருக்க முடியாத பண்புகளை அவனுக்கு இருப்பதாக உறுதிப்படுத்துவது குப்ர் அல் இஸ்பாத் ஆகும். அல்லாஹுவுக்கு

பெற்றோர், பிள்ளைகள் அல்லது தூக்கம், பொடுபோக்கு, மரணம் இருப்பதாக நம்புவது இதில் அடங்கும்.

3. அல்லாஹ்வுடைய பண்புகள் ஒருவருக்கு அல்லது வேறு ஒரு படைப்புக்கு இருப்பதாக நம்புவதும் குப்ராகும்.

4. வணங்கி வழிபடத்தக்கவனாகவும் சட்டமியற்றும் அதிகாரம் கொண்டவனாகவும் அல்லாஹ்வை நம்புதல் ஈமானின் பிரதான அம்சமாகும். அல்லாஹ்வுடைய உலூஹிய்யா பண்பை மறுப்பதும் அல்லது வேறொன்றுக்கு கொடுப்பதும் குப்ராகும்.

   "அல்லாஹ்வைத் தவிர அதிகாரம் யாருக்குமில்லை." (12 : 40)

   அல்லாஹ்வுக்கு எதிரான தாகூத்களை நிராகரித்தல் ஈமானின் அடிப்படை அம்சமாகும். அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான். "யார் தாகூத்தை நிராகரித்து, அல்லாஹ்வை ஈமான் கொள்கிறாரோ அவர் உறுதியான கயிற்றை பற்றிப்பிடித்துக் கொண்டவராவார்." (2 : 256)

5. இறைத்தூதர்களை மறுத்தல் அல்லது அவர்களது கௌரவத்தை குறைத்து மதிப்பிடுவது அல்லது அவர்கள் கொண்டுவந்தவற்றை மறுப்பதும் குப்ராகும்.

இந்தவகையில் அல்குர்ஆனை அல்லது அதன் ஒரு வசனத்தை மறுப்பது, மறைவான நம்பிக்கைகளை மறுப்பது, இஸ்லாத்தின் போதனைகளை பொய் யாக்குவது என்பன குப்ராகும். அதேபோன்று நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு நபிமார்கள் வருவர் என நம்புவதும் குப்ராகும்.

**குப்ரின் விளைவுகள்**

- இறைவனை நிராகரிப்போரின் நற்செயல்களுக்கு மறுமையில் எந்தப் பெறுமதியும் வழங்கப்படமாட்டாது.

  "இத்தகையவர்கள் தாம் தங்களது இரட்சகனின் அத்தாட்சிகளையும், அவனை சந்திப்போம் என்பதையும் நிராகரித்துவிட்டவர்கள் அவர்களுடைய நற்செயல்கள் அனைத்தும் அழிந்துவிட்டன. மறுமை நாளில் நாம் அவர்களுக்கு எந்தப் பெறுமதியையும் வழங்கமாட்டோம்." (18 : 105, 106)

- இறைவனை நிராகரிப்போர் நிரந்தரமாக நரகில் இருப்பார்கள்.

- இறை நிராகரிப்பு ஓர் அறியாமையாகும். மனிதன் இறைவனை அறியாமல் இருப்பதைவிடவும் உலகில் மிகப்பெரிய அறியாமை கிடையாது. மனிதன் தன்னைச் சூழவிருக்கும் பிரபஞ்சத்தையும், அதன் நேர்த்தியான இயக்கத்தையும் பார்த்து, அவற்றுக்குப் பின்னால் இருப்பவனை புரிந்து கொள்ளாதிருப்பது மிகப்பெரிய மடமையாகும்.

- இறை நிராகரிப்பு இறைவனுக்கு எதிரான புரட்சியாகும். மனிதனுக்குரிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்த இறைவனை, அந்தமனிதன் நிராகரிப்பது மிகமோசமான நன்றிகெட்ட நிலையாகும்.
- இறைவன் மீது நம்பிக்கைகொள்ளாதவனின் வாழ்வு குழப்பம் மிக்கதாக, நிம்மதியற்றதாக இருக்கும். உலகிலே பெரும் குழப்பங்களை ஏற்படுத்துபவனாகவும், பொறுப்பற்றவனாகவும், இலக்கற்றவனாகவுமே அவன் வாழ்வான்.

### (2) ஷிர்க்

தௌஹீதுக்கு எதிரானதாக ஷிர்க் உள்ளது. ஒரு பொருளை தெளிவாக புரிந்து கொள்ள அதன் எதிர்ப் பொருளை விளங்குவது அவசியமானதாகும். அந்தவகையில் தௌஹீத் கோட்பாட்டைச் சரியாக புரிந்து கொள்ள அதன் எதிர்க்கோட்பாடான ஷிர்க்கைப் பற்றி அறிவது அவசியமாகும்.

### ஷிர்க்கின் பொருள்

'ஷிர்க்' எனும் அறபுப்பதம் பங்கு சேர்த்தல், கூட்டிணைத்தல் போன்ற பொருள் களைத் தருகின்றது. இஸ்லாமிய பரிபாஷையில் 'ஷிர்க்' என்பது அல்லாஹ்வுக்கே உரிய தனிப்பட்ட பண்புகளில் அவனுக்கு இணையாக வேறு ஒன்றைக் கொண்டு வருவதைக் குறிக்கும். இந்த வகையில் ஷிர்கிற்கு உதாரணங்களாக பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம். அல்லாஹ்வோடு வணங்குவதற்கு இன்னொரு கடவுளை வைத்துக் கொள்வது, அல்லது அல்லாஹ்வின் உரிமைகளில் இன்னொருவருக்குப் பங்களிப்பது அல்லது அல்லாஹ் மீது அன்பு வைப்பது போன்றே இன்னொன்றின் மீது அன்பு வைப்பது.

இது அல்லாஹ்வுக்கு இணைவைத்தலின் மிக மோசமான நிலையாகும். இத்தகைய ஷிர்க் ஒருவனிடத்தில் இருக்கும் போது அவனது எந்தச் செயலையும் அல்லாஹ் அங்கீகரிக்கமாட்டான். ஏனெனில் அல்லாஹ்வை மாத்திரம் நோக்கமாகக் கொண்டு செயற்படுவது செயல்கள் அங்கீகரிக்கப்படுவதற்கான முதலாவது நிபந்தனையாகும்.

> "தனது இரட்சகனை சந்திக்க வேண்டுமென யார் ஆசை கொள்கிறாரோ அவர் நற்செயல்கள் புரியட்டும். தனது இரட்சகனுக்கு இபாதத் செய்வதில் யாரையும் இணையாகக் கொள்ள வேண்டாம்." (18 : 110)

> "அல்லாஹ் இணைவைக்கும் பாவத்தை ஒரு போதும் மன்னிக்கவேமாட்டான். அது தவிர்ந்த ஏனையவற்றை தான் விரும்பியவருக்கு மன்னித்து விடுவான்." (4 : 116)



6-CM14792

இணைவைப்பது சுவர்க்கம் செல்வதை தடுக்கும் குற்றமாகும். அந்தப்பாவத்தில் ஈடுபடுபவருக்கு நரகமே இருப்பிடமாக இருக்கும்.

> “அல்லாஹ் தனக்கு இணை வைப்பவருக்கு சுவர்க்கத்தைத் தடை செய்துள்ளான். அவன் ஒதுங்குமிடம் தலம் நரகமாகவே இருக்கும். அநியாயக்காரர்களுக்கு உதவியாளர்கள் எவருமில்லை.” (5 : 72)

**ஷிர்க்கின் வகைகள் :-**

அ. பெரிய ஷிர்க்
ஆ. சிறிய ஷிர்க்

**அ. பெரிய ஷிர்க் :-**

மனிதன் அல்லாஹ்வுக்கு இணையாக இன்னொன்றை அல்லது இன்னொருவனை வணங்குவதற்கு அல்லது அன்பு வைப்பதற்கு அல்லது பயப்படுவதற்குரியதாக ஆக்கிக் கொள்வதை இது குறிக்கும். நேரடியாக அல்லாஹ்வுடைய தாத், பண்புகள், திருநாமங்களோடு தொடர்பான ஷிர்க் ஆக இது அமையும். அல்லாஹ்வை விடுத்து தன்னிடம் தெய்வீகப் பண்பிருப்பதாக கூறிக் கொள்ளுதல் இந்த வகை சார்ந்த ஷிர்க்காகும். பிர்அவ்ன், நம்ருத் போன்றோர் தங்களை கடவுளர்களாக கருதிக் கொண்டனர். இறைவனின் திருநாமங்களை, மறுத்தல், படைப்பினங்களுக்கு நிகரானதாக இறை பண்புகளை ஆக்குதல் போன்றனவும் இதில் அடங்குகின்றன. மஜூஸிகள் ஒளிக்கும், இருளுக்கும் வெவ்வேறு கடவுள்களை ஆக்கிக் கொண்டமை போன்றவை பெரியவகை ஷிர்கிற்கு உதாரணங்களாகும்.

**1. அல்லாஹ்வை வணங்குவதோடு தொடர்பான ஷிர்க்**

வணக்க வழிபாடுகளின் போது அல்லாஹ் அல்லாத ஒன்றை நாடி வணக்கம் புரிவது இப்பிரிவில் அடங்கும். பின்வரும் பகுதிகள் இதில் அடங்குகின்றன.

- ஹலால், ஹராம் என்பவற்றை தீர்மானிக்கும் உரிமையை இறைவன் அல்லாத ஒன்றுக்கு வழங்குதல். அஹ்லுல் கிதாபுகள் அவர்களின் தலைவர்களுக்கு இந்த அதிகாரத்தை வழங்கியிருப்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

- அல்லாஹ்வுக்கு இணையாக இன்னொருவனை நேசித்தல்.

**2. இறைவன் அல்லாத ஒருவரிடத்தில் பிராத்தித்தல் :-**

"என்னை நீங்கள் அழையுங்கள். நான் உங்களுக்கு பதில் அளிக்கிறேன்" (109:60), என்று அல்லாஹ் கூறுகிறான்.

**3. அல்லாஹ்வைத்தவிர வேறொன்றுக்காக அறுத்துப் பலியிடுவது, நேர்ச்சை வைப்பது**

அனைத்து வழிபாடுகளும் அல்லாஹ்வுக்காகவே நிறைவேற்றப்பட வேண்டும். இதனால் தான் அல்குர்ஆன் தொழுகையையும் அறுத்துப் பலியிடலையும் ஒன்றாக இணைத்து கூறுகிறது. “நபியே நீங்கள் உமது இரட்சகனுக்காக தொழுது அவனுக்காக அறுத்துப் பலியிடுவீர்களாக.” (108 : 2)

**ஆ. சிறிய ஷிர்க்**

பெரிய ஷிர்க்குக்கு இட்டுச் செல்கின்ற அனைத்து வழிகளும் சிறிய ஷிர்க்காகும். இவை பெரும் பாவங்களை விட அல்லாஹ்விடத்தில் பாரதூரமானவையாகும்.

உதாரணமாக :-

**1. அல்லாஹ் அல்லாதவற்றின் மீது சத்தியம் செய்தல்**

நபி, க:.பா, வலீ, தாய், தந்தையர், பெரியார்கள் போன்ற படைப்புக்கள் மீது சத்தியம் செய்வதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

“யார் அல்லாஹ் அல்லாதவற்றின் மீது சத்தியம் செய்தாரோ அவர் நிராகரித்து விட்டார்; அல்லது ஷிர்க் வைத்து விட்டார்.” (திர்மிதி)

### 2. நூல், வளையம் போன்றவற்றை கட்டுதல்

பௌதீக விதிகளுக்கு அப்பாற்பட்ட, ஷரீஅத் ஏற்காத வழி முறைகளை மேற்கொண்டு நோய்களுக்கு நிவாரணம் காணமுயல்வது தௌஹீதுக்கு முரணானதாகக் கொள்ளப்படும்.

இம்ரான் பின் ஹுஸைன்(றழி) அவர்கள் கூறுகிறார்கள்:

நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதனின் கையில் ஒரு வளையம் இருப்பதைக் கண்டார்கள். அந்த வளையம் செம்பாலானது என நினைக்கிறேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் "இது என்ன?" எனக்கேட்டதுடன் "இது உமக்கு மேலும் பலவீனத்தையே தரும். இதனைக் களைந்து விடும். அதனை அணிந்த நிலையிலே மரணிப்பீராயின் ஒருபோதும் வெற்றியடையமாட்டீர்" என்றார்கள். (அஹ்மத்)

ஜாஹிலிய்யாக்கால அறபிகள் தங்களது பிள்ளைகளை கண்ணேறு, ஜின்களின் தீமையிலிருந்து காப்பாற்றும் நோக்கோடு தாயத்தை கட்டி விடுவார்கள்.

நபி(ஸல்) அவர்கள் "யார் தாயத்தை நல்லதொன்றை நாடி அல்லது தீமையை நீக்கும் நோக்கில் கட்டுகிறாரோ, அவருக்கு அவரது நாட்டத்தை அல்லாஹ் பூரணமாக்கிக் கொடுக்காமல் இருக்கட்டும்" என்றார்கள். (முஸ்னத் அஹ்மத்)

மந்திரித்தல், சூனியம், வசியம் செய்தல், குறி சொல்லல், சாஸ்திரம் பார்த்தல், சகுனம் பார்த்தல் போன்றவையும் சிறிய ஷிர்க்குகளாகும்.

### பெரிய, சிறிய ஷிர்க்குகளுக்கிடையிலான வேறுபாடுகள்

பெரிய ஷிர்க் செய்பவன் இஸ்லாத்தை விட்டும் வெளியேறி விடுகிறான். ஆனால், சிறிய ஷிர்க்கில் சம்பந்தப்படுவன் இஸ்லாத்தை விட்டும் வெளியேறி விடுவதில்லை. ஆனால், பெரும் பாவங்களை விட மிகவும் பாரதூரமான குற்றச் செயல்களாக அவை கருதப்படும்.

சிறிய ஷிர்க்கைப் பொறுத்தவரையில் அல்லாஹ் விரும்பினால் அவனை மன்னிப்பான். அல்லது அவன் விரும்பினால் தண்டிப்பான்.

பெரிய ஷிர்க் வைப்பவனின் எந்த நற்காரியங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அதேபோல் அவனது ஏனைய நற்காரியங்களையும் அது அழித்து விடும். ஆனால் சிறிய ஷிர்க்கோடு தொடர்புபடுபவனின் குறிப்பிட்ட செயல் மாத்திரமே பெறுமதியிழக்கும்.

**(3) ரித்தத்**

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஒருவர் அதிலிருந்து வெளியேறிச் செல்வது 'ரித்தத்' எனப்படும். இறை நிராகரிப்பின் ஒருவகையே ரித்தத்தாகும். இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாது நிராகரிப்பதை விட அதனை ஏற்றபின் அதிலிருந்து வெளியேறிச் செல்லும் நிராகரிப்பு மிகவும் கடுமையானதாகும்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் பின்னர் தனது மார்க்கத்தை மாற்றிக் கொள்பவருக்கு ஏற்படும் விளைவுகள் குறித்து அல்லாஹுத் தஆலா பின்வருமாறு எச்சரிக்கிறான்.

> "......... உங்களில் யார் தனது (இஸ்லாம்) மார்க்கத்தைவிட்டும் மாறி காபிரான நிலையில் மரணிக்கிறாரோ உலகிலும், மறுமையிலும் அவர்களது செயல்கள் அழிந்துவிடும். அவர்கள் நரகத்துக்குரியவர்கள். அவர்களோ அதில் நிரந்தரமாக இருப்பார்கள்". (2 : 217)

ரித்தத்தை இஸ்லாம் மிகப்பெரும் தீமையாகக் கருதுகிறது. அபூபக்ர்(றழி) அவர்கள் ரித்தத்தை முளையிலே கிள்ளியெறிந்தார்கள். அவரது காலத்தில் ஸகாத்தை மறுத்தவர்களை எதிர்த்துப் போராடினார்கள். ரித்தத் மிகவும் பகிரங்கமான, பொதுத் தீமையாக மாறிவிட்டால் அது மேலும் அபாயகரமானதாக மாறும். முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்துக்கு ஆபத்தானதாகவும், இஸ்லாத்தின் அடிப்படையான நம்பிக்கைகளை தகர்த்தெறிவதாகவும் அமையும். எனவே தான் தாபிஊன்களில் சிலரும், பின்னால் வந்த அறிஞர்களும் ரித்தத்தை அல்லாஹ்வுக்கும், இறைத்தூதருக்கும் எதிராக போர் புரிந்து, பூமியிலே குழப்பத்தை உண்டுபண்ணும் குற்றச்செயலுக்கு நிகராகக் கருதி அதற்குரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டிருந்தார்கள்.

**(4) நிபாக்**

நிபாக் என்பது உள்ளொன்றை வைத்து வெளியில் வேறொன்றை வெளிப்படுத்து வதைக் குறிக்கிறது. இந்த வகையில் முனாபிக் என்பவன் தன்னிடம் உள்ள குப்ரை மறைத்து ஈமான் உள்ளவனைப் போல பாசாங்கு செய்வான்.

இமாம் இப்னுல் கைய்யிம் (றஹ்) நிபாக்கைப் பற்றி பின்வருமாறு விளக்குகிறார். "மனிதன் தன்னை அறியாத நிலையிலே அவனது உள்ளத்தை நிரப்பி விடுகின்ற கடுமையான நோய் நிபாக்காகும். அது ஏனைய மனிதர்களை விட்டும் மறைந்திருக்கும். இந்த நோயை சுமந்தவர்கள் அடிப்படையில் குழப்பவாதிகளாகவே இருப்பார்கள். எனினும் அவர்கள் தங்களை சீர்திருத்தவாதிகளாக அடையாளப்படுத்திக் கொள்வார்கள்."

அல்குர்ஆன் நிபாக்குடைய தன்மைகளை பின்வருமாறு விளக்குகின்றது. ”அவர்களது உள்ளங்களிலே (நிபாக் எனும்) நோய் காணப்படுகிறது. மென்மேலும் அல்லாஹ் அவர்களது நோயை அதிகப்படுத்திவிடுகிறான். அவர்கள் பொய் சொல்லிக் கொண்டிருந்ததன் காரணமாக அவர்களுக்கு நோவினை தரும் வேதனையுண்டு. அவர்களிடம் “நீங்கள் பூமியிலே குழப்பத்தை உண்டு பண்ணவேண்டாம்” என்று கூறப்பட்டால் அவர்களோ “நாங்கள் தாம் சீர்திருத்தவாதிகள்” எனக் கூறுவார்கள். அறிந்து கொள்ளுங்கள் அவர்கள் தான் குழப்பவாதிகள். எனினும் உணர்ந்து கொள்ளமாட்டார்கள். (2 : 10, 11, 12)

**நிபாக்கின் வகைகள் :-**

1. நம்பிக்கை சார்ந்த நிபாக்
2. நடத்தை சார்ந்த நிபாக்

**அ. நம்பிக்கை சார்ந்த நிபாக்**

நம்பிக்கை சார்ந்த நிபாக் என்பது குப்ரை மனதில் மறைத்து ஈமானைப் போலியாக வெளிப்படுத்துவதாகும். நிபாக்கின் வகைகளில் இது மிகவும் பாரதூரமானதாகும். உண்மையில் இதுவும் ஒரு குப்ராகும். இறை நிராகரிப்பை கொள்கையாக ஏற்றுக் கொண்ட ஒருவர் பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக முஸ்லிம் சமூகத்தோடு இணைந்து வாழ்வார். இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர் போல் போலியாக நடிக்கும் இந்நிலையை அல்குர்ஆன் ‘குப்ர்’ எனக் குறிப்பிடுகிறது.

“அது ஏனெனில் அவர்கள் ஈமான் கொண்டார்கள் ; பின்னர் நிராகரித்தார்கள். அவர்களது உள்ளங்கள் மீது முத்திரையிடப்பட்டுவிட்டது. அவர்களோ புரிந்து கொள்ளமாட்டார்கள்.” (63 : 3)

இதற்கு "பெரிய வகை நிபாக்" என்று கூறப்படும். இது நிரந்தர நரகத்தை வேண்டி நிற்கும் குற்றம் மாத்திரமன்றி நரகின் கீழ்தட்டை நோக்கி கொண்டு சேர்க்கும் மோசமான தீமையுமாகும். அல்குர்ஆனிலே இத்தகைய முனாபிக்குகள் குறித்து அல்லாஹுத்தஆலா மிகவும் விரிவாக விளக்கியுள்ளான்.

இத்தகைய முனாபிக்குகள் இஸ்லாம் பலம்மிக்க ஒரு கொள்கையாக மாறிய முஸ்லிம் சமூகத்தில் தான் தோன்றுவார்கள். இஸ்லாத்தை பகிரங்கமாக எதிர்க்க முடியாது என்று அவர்கள் கருதும் போது கோழைத்தனமாக, மறைமுகமாக, இஸ்லாமிய சமூகத்துக்குள் ஊடுருவி இஸ்லாத்தையும், முஸ்லிம் சமூகத்தையும் பலவீனப்படுத்துவதற்காக அவர்கள் கையாளும் வழிமுறையே நிபாக் ஆகும்.

**இத்தகைய முனாபிக்குகளிடம் காணப்படும் பண்புகளாவன :-**

1. உலகில் குழப்பவாதிகளாக இருப்பார்கள். "அவர்கள் தான் குழப்ப வாதிகள் ; எனினும் உணர்ந்து கொள்ளமாட்டார்கள்." (2 : 08)

2. பொய்யும் துரோகமும் அவர்களை விட்டுப்பிரியாத பண்புகளாகும். மக்களிற் சிலர் "நாம் அல்லாஹ்வையும் மறுமையையும் ஈமான் கொண்டுவிட்டோம் என்று கூறுகிறார்கள். என்றாலும் அவர்கள் ஈமான் கொண்டவர்களாக இல்லை." (2 : 12) "அவர்கள் அல்லாஹ்வையும், முஃமின்களையும் ஏமாற்றுகிறார்கள். ஆனால் அவர்களை அறியாமலே தங்களையே அவர்கள் ஏமாற்றிக்கொள்கிறார்கள்." (2 : 9)

3. அவர்கள், முஃமின்களுக்கு ஒரு முகத்தையும் காபிர்களுக்கு வேறொரு முகத்தையும் காட்டுவார்கள். "அவர்கள் முஃமின்களை கண்டால் நாம் ஈமான் கொண்டு விட்டோம் என்று கூறுவார்கள். அவர்கள் தங்களது ஷைத்தான்களோடு (தலைவர்களோடு) இருந்தால் நிச்சயமாக நாம் உங்களோடு தான் இருக்கிறோம். நாமோ பரிகாசம் செய்து கொண்டிருக்கிறோம் என்று கூறுவார்கள்." (2 : 14)

4. ஈமான் இல்லாத அவர்களது உள்ளங்களில் முகஸ்துதி காணப்படும். இதன் காரணமாக இறைவனுடைய கட்டளைகளை ஆர்வத்தோடு நிறைவேற்ற முடியாமல் சோம்பேறிகளாக மாறிவிடுவார்கள்.

“அவர்கள் தொழுகைக்காக எழுந்து நின்றால் மக்களுக்கு காண்பிப்ப தற்காகவும், சோம்பேறிகளாகவும் எழுந்து நிற்பார்கள்; அல்லாஹ்வை குறைவாகவே நினைவுபடுத்துவார்கள்.” (4 : 142)

மேற்குறிப்பிட்டது போன்ற பல மோசமான பண்புகளைக் கொண்டவர்களாக வாழும் இத்தகைய முனாபிக்குகள் உலகில் குழப்பவாதிகளாகவும் மறுமையில் பெரும் நஷ்டவாளிகளாகவும் இருப்பார்கள்.

## ஆ. நடத்தை சார்ந்த நிபாக்

உள்ளத்தில் ஈமானை சுமந்து கொண்டு அதற்கு மாற்றமாக வெளிப்பாடுகளைக் கொண்டிருத்தலை இது குறிக்கிறது. நடத்தையோடு தொடர்பான நிபாக் ஈமானின் பலவீனத்தால் ஏற்படுவதாகும். ஏமாற்றுவது, பொய், மோசடி போன்றவற்றைப் பெற்றிருக்கும் மு.்.மின்கள் நிபாக் பண்புள்ளவர்கள் என்றே அழைக்கப்படுவர்.

நம்பிக்கையோடு தொடர்பான நிபாக்கை விட பாரதூரத்தில் குறைவானதாக இது இருந்தாலும் கூட, இறைவனின் கோபத்தை ஏற்படுத்தும் பாவமாக உள்ளது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் :- “முனாபிக்கின் அடையாளங்கள் மூன்று :- பேசினால் பொய் பேசுவான்; (பிறர் அவனை) நம்பினால் மோசடி செய்வான்; வாக்குறுதி அளித்தால் மாறு செய்வான்”. (புகாரி)

# மஸாதிருஷ் ஷரீஆ

இஸ்லாமிய ஷரீஆ எனப்படுவது மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தை யும் ஒழுங்குபடுத்திக் கொடுக்கும் வழிமுறையாகும். எல்லாக் காலத்திலும் சகல இடங்களிலும் வாழும் மக்கள், தமது நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக் கொள்வ தற்காக சில அடிப்படையான மூலாதாரங்களையும் துணை மூலாதாரங்களையும் இஸ்லாம் ஏற்படுத்தியுள்ளது.

**அல்குர்ஆன்**

இஸ்லாமிய ஷரீஆ சட்டங்களின் அடிப்படை மூலாதாரங்களாக அல்குர்ஆனும் ஸுன்னாவும் அமைந்திருக்கின்றன. இவை இரண்டிலும் முதலிடத்தில் இருப்பது அல்குர்ஆனே.

மனிதனைப் படைத்த அல்லாஹ் மனிதனுக்குத் தேவையான அடிப்படையான அனைத்து வழிகாட்டல்களையும் அல்குர்ஆன் ஊடாகவே வழங்கியுள்ளான். மனித வாழ்க்கைக்கான நேர்வழியாகவும் இந்த அல்குர்ஆனே அமைந்திருக்கின்றது.

"பயபக்தியுடையோருக்கான நேர்வழிகாட்டியாகும்." (2 : 2)

அல்குர்ஆன் மனித சமூகத்தின் வாழ்க்கை நெறியாக மாறும் வரை மனித சமூகம் விடிவு பெற முடியாது.

"தன் இறைவனின் வசனங்கள் நினைவூட்டப்பட்ட பின்னரும் அவற்றைப் புறக்கணிப்பவனை விட வழி கெட்டவன் யார்? நிச்சயமாக நாம் அக்கிரமக்காரர்களைப் பழி வாங்குவோம்." (32 : 22)

## • அல்குர்ஆன் அருளப்படல்

இத்தகைய முக்கியத்துவமிக்க குர்ஆனின் வசனங்கள் உலகிற்கு அல்லாஹ்வால் இறக்கப்பட்ட முறை பற்றி நாம் அறிந்திருப்பது அவசியமாகும்.

அல்குர்ஆன் மூன்று வழிமுறையில் இறக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

### அ. தனி வசனம் அருளப்படல்

நபி(ஸல்) அவர்களுக்கு அல்குர்ஆன் அருளப்பட்ட வழிமுறைகளில் ஒன்று தனித்தனி வசனமாக அருளப்பட்டதாகும்.

> "இறை நம்பிக்கையாளர்களில் நியாயமான காரணம் எதுவுமின்றி ஜிஹாதில் கலந்து கொள்ளாமல் தங்கி விடுபவர்களும், தங்களது உயிராலும் பொருளாலும் அல்லாஹ்வின் வழியில் ஜிஹாத் செய்பவர்களும் சம அந்தஸ்துடையவர்களாக மாட்டார்கள்" (4 : 95)

இதில் வரும் "நியாயமான காரணம் எதுவுமின்றி" என்ற சொற்றொடர் மட்டும் ஒரே தடவையில் அருளப்பட்டதாக அல் குர்ஆன் விளக்கவுரையாளர்கள் கூறுகின்றார்கள்.

### ஆ. பல வசனங்கள் அருளப்படல்

தனி வசனங்கள் அருளப்பட்டது போன்றே பல வசனங்களும் அருளப்பட்டுள்ளன. ஸூராக்களான அந்நூர், அல் மு.ஃமினூன் என்பவற்றில் அருளப்பட்ட வசனங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். ஆயிஷா(ரழி) அவர்கள் மீது பழி சுமத்தப்பட்ட போது அதை மறுத்து சூறா அந்நூரில் 10 வசனங்கள் அருளப்பட்டன.

> "எனக்கு பத்து வசனங்கள் அருளப்பட்டன. யார் அவற்றின் அடிப்படையில் செயல்படுகின்றாரோ அவர்கள் நிச்சயம் சுவர்க்கத்தில் பிரவேசிப்பர்" என்று கூறிய நபியவர்கள் சூரா அல்மு.ஃமினூனின் ஆரம்ப பத்து வசனங்களையும் ஓதிக்காட்டினார்கள்." (திர்மிதி)

சூறாவின் ஒரு பகுதி ஒரு தடவையிலும் இறுதிப் பகுதி மற்றொரு தடவையிலும் அருளப்பட்டதற்கு சூரா அலக் உதாரணமாகும்.

### இ. சூறா முழுவதும் இறக்கப்படல்

அல்குர்ஆனில் சில சூறாக்கள் முழுமையாக ஒரே தடவையில் இறக்கியருளப் பட்டிருக்கின்றன. சூறாக்களான அல்கவ்தர், அல்இக்லாஸ், அந்நஸ்ர் போன்றவை இதற்கு உதாரணங்களாகும். பெரிய சூறாக்களில் சூறா அல்அன்ஆம் மட்டுமே ஒரே தடவையில் அருளப்பட்டுள்ளது.

**சூறாக்கள் பகுதி பகுதியாக அருளப்பட்டதற்கான காரணங்கள் :**

முன்னைய வேதங்கள் போலல்லாது அல்குர்ஆன் பகுதி பகுதியாக இறக்கப்பட்டமைக்கு காரணங்கள் சில உள்ளன.

(1) **அல்லாஹ்வின் திட்டம்**

முன்னைய வேதங்கள் போன்று ஒரே தடவையில் அல்குர்ஆனை இறக்குவதற்கு அல்லாஹ் சக்திபடைத்தவன் என்றாலும் அது ஒரே தடவையில் இறக்கப்படவில்லை. இது அல்லாஹ்வின் திட்டத்தோடு தொடர்பான விடயமாகும்.

(2) **நபியின் உள்ளத்தில் பதியச் செய்தல்**

அல்குர்ஆன் ஒரே தடவையில் இறக்கப்பட்டிருந்தால் எழுதவாசிக்கத் தெரியாத நபி (ஸல்) அவர்களுக்கு அதனை உள்ளத்தில் பதிந்து கொள்வது சிரமமாய் இருந்திருக்கும். அது மட்டுமல்லாது அல்லாஹ்வின் வழிகாட்டல்களை வாழ்வில் பிரதிபலித்துக்காட்ட வேண்டிய கடமையும் நபியவர்களுக்குரியது.

(3) **மக்களுக்குக் கற்றுக் கொடுத்தல்**

கற்பித்தலில் கால இடைவெளி அவசியமானதாகும். அது இல்லாது போனால் கற்பித்தல் தோல்வியடையும். எனவே இவ்விடயமும் அல்குர்ஆன் இறங்கியதில் உள்ள பகுதியாக்கத்தில் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

“நாம் இந்த அல்குர்ஆனை கொஞ்சம் கொஞ்சமாக இறக்கியமைக்கான காரணம் இதை நீர் மக்களுக்கு நிறுத்தி நிறுத்தி ஓதிக்காட்ட வேண்டும் என்பதற்காகத்தான்” (17 : 2)

(4) **நபியவர்களை பலப்படுத்தல்**

த.்.வாவில் அடிக்கடி கஷ்டங்களைச் சந்தித்த நபியவர்களுக்கு அவ்வப் போது அல்குர்ஆனின் வசனங்கள் இறக்கியமையானது அவர்களை பலப்படுத்துவதாக அமைந்திருந்தது. “இவ்வாறு நாம் கொஞ்சம் கொஞ்ச மாக இறக்கி இதனை ஒழுங்குபடுத்தியதெல்லாம் உம் இதயத்தை உறுதிப்படுத்துவதற்காகவே.” (25 : 32)

(5) **மனப்பாடமிட்டு செயற்படுத்துவது**
மனப்பாடமிடுவதற்கும் செயற்படுத்துவதற்கும் கால இடைவெளி இன்றியமையாத ஒன்றாகும்.

(6) **கால மாற்றங்களை கருத்திற்கொள்ளல்**
நபியவர்களது த.ஃ.வா, மக்கா, மதீனா என்ற இரு காலகட்டங்களைக் கொண்டதாக அமைந்தது. இரு காலகட்டங்களுக்கும் உரிய தன்மைகள் வேறுபட்டவை. எனவே, அந்தந்த இடங்களுக்கும் காலங்களுக்கும் பொருந்துகின்ற வகையில் அல்குர்ஆன் பகுதி பகுதியாக இறக்கப்பட்டது.

(7) **நபியவர்களிடம் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளித்தல் :-**
நபியவர்களிடம் அவ்வப்போது மக்கள் வினாக்களைத் தொடுத்தனர். அல்குர்ஆன் ஒரே தடவையில் இறக்கப்பட்டிருப் பின் மக்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விடையளிப்பது என்பது நடைமுறையில் சிரம சாத்தியமானதாக அமைந்திருக்கும். அதன் மூலம் இவ்வேதம் மனித உணர்வுகளுக்கு அப்பாற்பட்டது என்ற வாதம் எழுந்திருக்கும்.

## • அல்குர்ஆன் பாதுகாக்கப்படல்

நபியவர்களது காலப்பிரிவில் தற்போது உள்ளது போன்று எழுத்துக் கலை வளர்ந்திருக்கவில்லை என்று கூறுவது பிழையாகும். ஸைத் இப்னு தாபித், ஆமிர் இப்னு புகைரா, முஆவியா இப்னு அபூ ஸுஃப்யான், அம்ரிப்னு ஆஸ்(றழி) போன்ற 26 ஸஹாபாக்கள் எழுத்தறிவை பெற்றிருந்தார்கள் என வரலாறு கூறுகின்றது. அல்குர்ஆன் இன்று இருப்பது போன்று எழுத்துருவில் அன்று காணப்படாவிட்டாலும் காலத்துக்கு ஏற்ப பாதுகாக்கப்பட்டு வந்துள்ளமையை நாம் வரலாற்றில் காணலாம்.

**அ. நபியவர்களது காலம்**

நபியவர்களது காலத்தில் அல்குர்ஆன் நூல்வடிவில் தொகுக்கப் பட்டிருக்கவில்லை. ஆனால், அது எந்தவகையிலும் பாதுகாக்கப்படவில்லை என்பது அதன் கருத்தல்ல.

நபியவர்களுக்கு வஹியாக அருளப்பட்டு வந்த அல்குர்ஆன் வசனங்கள், அவர்களது வழிகாட்டல்களுக்கு ஏற்ப வஹியை எழுதும் பணிக்காக நியமிக்கப் பட்டிருந்தோரால் எழுதப்பட்டன. உபை இப்னு க.ஃ.ப், ஸைத் இப்னு தாபித், முஆவியா (றழி) போன்ற நபித்தோழர்கள் இப்பணிக்காக நியமிக்கப்பட்டிருந்தனர். வஹியை எழுதுவோர் (குத்தாபுல் வஹீ) என இவர்கள் அழைக்கப்பட்டனர். தோல், மட்டை, எலும்புகள் ஆகியவற்றில் இவர்கள் குர்ஆன் வசனங்களைப் பதிய வைத்தனர். அவ்வப்போது இறங்கப் பெற்ற வசனங்களை ஸஹாபாக்களும்

மனனமிட்டுக் கொண்டனர். நபியவர்களது கால அல்குர்ஆனின் பாதுகாப்புப் பற்றிய விடயத்தில் மனனம் என்பதற்கு ஒரு தனியான முக்கியத்துவம் இருந்தது. நபியவர்கள், அல்குர்ஆனை மனனமிட்டது போன்றே ஸஹாபாக்களையும் மனனமிடத் தூண்டினார்கள். ஸஹாபாக்களிலும் அல்குர்ஆனை மனனமிட்டவர்கள் இருந்திருப்பது கவனிக்கத்தக்கதாகும். யமாமா போரின் போது 70 ஹாபிழ்கள் கொல்லப்பட்டமை இதற்கான ஆதாரமாகும். நபியவர்கள், தான் மனனமிட்ட அல்குர்ஆனின் பகுதிகளை நீண்ட இரவுத் தொழுகைகளில் ஓதி வந்திருக்கிறார்கள். ஸஹாபாக்களும் இதே வழிமுறையை பின்பற்றியிருக்கிறார்கள்.

> அபூமூஸா (றழி) அறிவிப்பதாவது, "என்னிடம் நபி (ஸல்) அவர்கள் அஷ்அரி குடும்பத்தவர்களுக்கு இரவுடன் உள்ள தொடர்பு எனக்கு நன்கு தெரியும். பகல் நேரங்களில் அவர்கள் அல்குர்ஆன் ஓதும் ஓசையை வைத்து நான் நன்கறிந்து கொள்வேன்" என்றார்கள். (புகாரி, முஸ்லிம்)

புனித ரமழானில் அல்குர்ஆன் முழுவதையும் ஜிப்ரீல்(அலை) நபியவர்களுக்கு ஓதிக்காண்பித்தார். இதன் போது நபியவர்களுக்கு பக்கத்தில் ஸைத் இப்னு தாபித் (றழி) அவர்களும் இருந்தார். ஸைதும் தனது மனனத்தை சரிபார்த்துக் கொண்டார். எனவேதான், அல்குர்ஆன் தொகுப்புப்பணி அவரிடம் ஒப்படைக்கப் பட்டது.

### ஆ. அபூபக்கர் (ரழி) அவர்களது காலம்

நபித்துவ வாதம் புரிந்த பொய்யர்களுக்கும் அபூபக்ர் (றழி) அவர்களது படையினருக்கும் இடையில் நடைபெற்ற யமாமாப் போராட்டத்தில் முஸ்லிம்கள் தரப்பில் சுமார் 1200 பேர் வபாத்தானார்கள். அவர்களுள் 38 முக்கிய நபித்தோழர்களும் அல்குர்ஆனை மனனமிட்டிருந்த 70 ஹாபிழ்களும் அடங்குவர். இந்நிலை அல்குர்ஆனின் பாதுகாப்பைப் பொறுத்தவரை பெரும் பாதகமாக அமைந்தது.

உமர்(ரழி) அவர்கள், இப்பாதக நிலை பற்றி கலீபா அபூபக்ர் (ரழி)க்கு உணர்த்தி அல்குர்ஆனை தொகுப்பதற்கான வேலைகளைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். ஆரம்பத்தில் தயக்கம் காட்டிய கலீபா அவர்கள், பின்னர் அதனை ஏற்றுக் கொண்டு அப்பணிக்கென ஸைத் இப்னு தாபித்(ரழி) அவர்களை தெரிவு செய்தார்கள். ஸைத்இப்னு தாபித் அவர்கள், "என்னிடம் ஓரிடத்தில் இருந்து இன்னுமோர் இடத்திற்கு ஒரு மலையை பெயர்க்கும் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தால் இப்பொறுப்பை விட அதனை இலகுவாக ஏற்றுக் கொண்டிருப்பேன். நபியவர்கள்

நினைக்காத ஒரு செயலை செய்வதற்கு எவ்வாறு நீங்கள் துணிந்தீர்கள்?" என்று கலீபாவிடம் தனது இயலாமையைக் குறிப்பிட்டார்கள். எனினும் அதன் நோக்கம் உணர்த்திக் காட்டப்பட்ட போது ஏற்றுக் கொண்டார்கள். இரவு பகலாக இதற்கான முயற்சிகள் இடம் பெற்றன. "குத்தாபுல் வஹி"களால் எழுதப்பட்டிருந்த பிரதிகள் திரட்டி எடுக்கப்பட்டன.

பள்ளியின் நுழைவாயிலில் இருந்த வண்ணம், தொழ வருபவர்களிடமிருந்து இரு சாட்சிகளுடன் அல்குர்ஆன் வசனங்கள் எழுதிவைக்கப்பட்டிருந்த ஏடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மக்கள் மனனமிட்டவற்றை எழுதப்பட்டவற்றுடனும் எழுதி வைக்கப்பட்டவற்றை மனனத்தோடும் ஒப்பிட்டு அவர்கள் ஏற்றுக் கொண்டனர். ஸூறா தவ்பாவின் கடைசி வசனங்களை மனனமிட்டவர்கள் பலரிருந்தும் கூட ஆரம்பத்தில் அவற்றை அங்கீகரிக்கவில்லை. அபூ ஹுஸைமா என்ற அன்ஸாரித் தோழரிடம் அவை எழுதப்பட்டிருந்ததனைக் கண்ட பின்னரே அவை அங்கீகரிக்கப் பட்டன.

இவ்வாறு தொகுக்கப்பட்ட மூலப் பிரதி கலீபாவிடம் ஒப்படைக்கப் பட்டது. பின்னர் அவரது கடைசி காலப் பிரிவில் உமர்(ரழி) அவர்களிடம் கொடுக்கப்பட்டு பின்னர் ஹப்ஸா(ரழி) அவர்களிடம் வழங்கப்பட்டது.

### இ. உஸ்மான் (ரழி) அவர்களது காலம்

உமர் (ரழி) அவர்களது காலப்பிரிவில் பல நாடுகளும் இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் ஆதிக்கத்திற்குள் வந்தன. அப்போது அறபு மொழியை தாய் மொழியாகக் கொள்ளாத பலர் இஸ்லாத்தில் நுழைந்தனர். இந்த நிலை உஸ்மான்(ரழி) அவர்களது காலத்தில் வலுப்பெற்றது.

ஆர்மேனியப் போராட்டங்களில் கலந்து கொள்வதற்குச் சென்ற ஈராக், சிரிய வீரர்களிடையே குர்ஆனிய ஓதல் முறைகளில் முரண்பாடுகள் நிலவுவதை அவதானித்த ஹுதைபா அல்யமானி அவர்கள் அல்குர்ஆன் விடயத்தில் மக்கள் பிரிந்து சென்றிருக்கின்ற நிலையைக் குறித்துக் காட்டி முஸ்லிம்களை ஒன்றுபடுத்த வேண்டியதன் அவசியத்தை உஸ்மான்(ரழி) அவர்களிடம் வலியுறுத்தினார்கள்.

குறித்த இப்பணியைச் செய்வதற்காக ஸைத் இப்னு தாபித், அப்துல்லாஹ் இப்னு ஸுபைர், ஸஈத் இப்னு ஆஸ், அப்துர் ரஹ்மான் அல்ஹாரித் உட்பட நான்கு ஸஹாபாக்கள் கொண்ட உப குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவினர் ஹப்ஸா நாயகியிடம் இருந்த பிரதியைப் பெற்று ஏழு பிரதிகளைச் செய்து

மக்கா, மதீனா, கூபா, பஸரா, டமஸ்கஸ், யெமன், பஹ்ரைன் போன்ற இடங்களுக்கு அனுப்பி வைத்தனர். இதற்கு முன் எழுதப்பட்டிருந்த பிரதிகளை தீயிடுமாறும் இதனைப் பார்த்து பிரதிபண்ணிக் கொள்ளுமாறும் கலீபா கட்டளையிட்டார். இதனால் குர்ஆனில் ஒருமுகப்பட்ட தன்மையைப் பாதுகாக்க முடியுமாகியது. அல்குர்ஆனை ஒன்றுபடுத்தியதன் காரணமாக உஸ்மான்(ரழி) அவர்கள் - ஜாமிஉல் குர்ஆன் (குர்ஆன் மூலம் சமூகத்தை ஒன்றுபடுத்தியவர்) என அழைக்கப்பட்டார்.

## அல்குர்ஆனை ஓதுவதும் கண்ணியப்படுத்துவதும்

- அல்குர்ஆன் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டத் தகுந்த உள்ளகச் சிறப்புக்களைக் கொண்டுள்ளது. அதே போன்று அதற்கு அப்பால் புறச் சிறப்புக்களையும் கொண்டுள்ளது. அல்குர்ஆனை ஓதுதல், செவிமடுத்தல், மனனமிடுதல் முதலியவற்றின் சிறப்புக்கள் பற்றி அல்குர்ஆனும், அல்ஹதீஸும் பல இடங்களில் சுட்டிக் காட்டுகின்றன.

- இஸ்லாத்தில் அல்குர்ஆனை ஓதுவதும் இபாதத் ஆகக் கணிக்கப்படு கின்றது. இத்தனை சிறப்புகள் தவ்றாத், இன்ஜீல் போன்ற வேதங் களுக்கில்லை. ஆனால், அல்குர்ஆனின் ஒவ்வொரு எழுத்தையும் வாசிப்பவருக்கு ஒவ்வொரு எழுத்துக்கும் பத்து நன்மைகள் வீதம் வழங்கப்படுகின்றன.

### (அ) வுழூவுடன் தொடுதல்

அல்குர்ஆனை ஓதமுனைகின்ற ஒருவர் சில ஒழுக்க விதிகளைப் பின்பற்றுதல் வேண்டும். அவற்றுள் வுழுவுடன் தொடுதல் என்பது முக்கியமானதாகும்.

அல்குர்ஆனை வுழுவுடன் தொட வேண்டுமா? இல்லையா? என்பதில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. அல்குர்ஆனை ஓதுகின்றவன் வுழுவுடன் இருப்பது முஸ்தஹப்பான- விரும்பத்தக்க விடயமாகும். இமாம் ஜுவைனி – றஹ் அவர்கள் இப்படிக் கூறினார்கள். :-

நீரைப் பெறாத போது தயம்மும் செய்து அல்குர்ஆனைத் தொட வேண்டும். பெருந்தொடக்கு உடையவர் சுத்தமாகும் வரை அல் குர்ஆனைத் தொடக்கூடாது.

“சுத்தமானவர்களைத் தவிர அதனை வேறு யாரும் தொடமாட்டார்கள்” என்ற அல்குர்ஆனின் வசனத்தினைப் பொறுத்தவரை கருத்து வேறுபாடுகள் காணப்படு கின்றன. இதில் வரும் சுத்தமானவர்கள் என்பது மலக்குகளைக் குறிக்கின்றதா அல்லது வுழுவுடன் இருப்போரைக் குறிக்கின்றதா என்பது தான் அந்த கருத்து வேறுபாட்டுக்குரிய காரணமாகும்.

அல்குர்ஆனின் மகிமையை சரிவர உணர்ந்த ஒருவர், தான் இறைவாக்கை பாராயணம் செய்யப் போகிறேன் என்று விளங்கியவர், மனிதர்களுடன் தான் பேசுகின்ற போது சுத்தமாக இருக்க வேண்டும் என்பதை தெரிந்திருக்கின்றவர், இறைவாக்கை ஓதுகின்ற போது, அதற்காக யாவரும் நிச்சயம் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வர்.

### (ஆ) பயபக்தியுடன் ஓதுதல்

அல்குர்ஆன் மாட்சிமை பொருந்திய அல்லாஹ்விடமிருந்து இறங்கிய வேதமாகும். அல்லாஹ்வுக்கு முன்னால் ஒரு அடியான் எவ்வளவு பயபக்தியோடு இருக்க வேண்டும் என்று வேண்டப்படுகின்றானோ அது போலவே இறை வசனங்களுக்கு முன்னாலும் ஒரு அடியான் இருக்க வேண்டும். தான் இருப்பது அல்லாஹ்வின் சந்நிதானத்துக்கு முன்னால் என்ற உணர்வு ஒருவனிடத்தில் இருந்தால் பயபக்தியோடு ஓதுவதற்கான வழிபிறக்கும்.

“நீங்கள் எங்கிருந்த போதும் அவன் உங்களோடு இருக்கிறான்” (2:4)

“நீங்கள் எந்த நிலையிலிருந்த போதிலும், நீங்கள் அல்குர்ஆனிலிருந்து எதை ஓதிய போதிலும் நீங்கள் எந்த வேலையிலிருந்த போதிலும், நீங்கள் அவற்றில் ஈடுபட்டிருக்கும் போதே நான் உங்களை கவனிக்காமலில்லை” (10 : 61) என அல்லாஹ் கூறுகின்றான்.

அல்குர்ஆன் வசனங்கள் நேரடியாக தம்முடன் தான் பேசுகின்றன என்ற உணர்வு மனிதனிடத்தில் இருப்பின் அல்குர்ஆனை ஓதுவதில் உள்ளம் லயித்து விடும்.

அல்குர்ஆன் ஓதப்படுகின்ற போது உள்ளம் பக்தியுடன் காணப்படும் என்று அல்குர்ஆன் முஃமின்களது பண்பு பற்றிச் சொல்கின்றது.

“மு.்.மின்களுக்கு இறைவசனங்கள் ஓதி காண்பிக்கப்படின் உள்ளம் நடு நடுங்கும்” (8 : 2)

நபி (ஸல்), தான் அல்குர்ஆனை ஓதுகின்ற போதோ மற்றவர்கள் ஓதுவதைக் கேட்கின்ற போதோ அச்சத்தின் காரணமாக அழுது விடுவார்கள்.

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் இப்படி அறிவிக்கிறார்.

"நபியவர்கள் ஒரு தடவை “என்னிடம் குர்ஆனை ஓதிக் காண்பியுங்கள்” என்றார்கள். அதற்கு நான், “உங்களுக்குத் தானே அல்குர்ஆன் இறக்கப் பெற்றது. நான் எப்படி உங்களுக்கு ஓதிக் காண்பிப்பது என்று’ கேட்டேன். அதற்கு அவர்கள் “அதை பிறர் ஓதக் கேட்க ஆசைப்படுகிறேன்.” என்றார்கள். அப்போது நான் ஸுரா நிஸாவின் ஆரம்பப் பகுதியிலிருந்து ஓதிக் கொண்டு வந்து ‘அந்நாளில் உம்மை இவர்களுக்கு சாட்சியாளராகக் கொண்டு வந்தால் எப்படி இருக்கும்?’ என்ற வசனத்தை அடைந்தவுடன் திரும்பிப் பார்த்தேன். நபியவர்களது இரு கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது"

‘‘நபியே இக்குர்ஆனை நாம் ஒரு மலையின் மீது இறக்கி யிருந்தால் அல்லாஹ்வின் பயத்தால் அது வெடித்துச் சிதறி இருப்பதை நீர் காண்பீர்.’’ (59 : 21)

எனவே, நிச்சயம் பயபக்தியோடு ஓத வேண்டிய அல்குர்ஆனைத் தான் அல்லாஹ் எமக்குத் தந்திருக்கிறான்.

முன்னோர்களிற் சிலர் குறித்த ஒரே ஒரு வசனத்தை அச்சத்தின் காரணமாக இரவு முதல் காலை வரை ஓதிக் கொண்டிருப்பார்கள்.

அல்குர்ஆனை ஓதுவதில் மூன்று படித்தரங்கள் இருப்பதாக இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் கூறினார்கள்.

1. அடியான் தான் இறைவனுக்கு முன்னால் நின்று கொண்டு ஓதுவதாகவும் இறைவன் தான் ஓதுவதைக் கேட்பதாகவும் உணர்த்தல்.

2. இறைவன் தனது நி∴மத்துக்களையும், அருள்களையும் முன்வைத்து தன்னோடு பேசுவதாக உணர்தல்.
3. இறைவனது வார்த்தைகளைக் கூர்ந்து அவதானித்தல்.
"ஒருவன் அல்குர்ஆனை பயபக்தியோடு ஓதுகிறான் என்பதற்கான அடையாளம் அவனை ஒரு வகையான கவலை பீடித்திருப்பதாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் அவர்கள்,

"நிச்சயமாக அல்குர்ஆன் கவலையோடு இறங்கியது நீங்கள் அதை ஓதுவதாக இருப்பின் கவலையை வெளிப்படுத்துங்கள்" (அபூ ய∴லா) என்றும் கூறினார்கள்.

உமர் (றழி)அவர்கள் ஒரு தடவை சுபஹ் தொழுகையில் ஸூறா யூசுபை ஓதினார்கள். அவர்களது தாடி நனையும்வரை அப்போது அழுதார்கள்.

எனவே, அல்குர்ஆனை ஓதும்போது உள்ளச்சம் அல்லது பயபக்தி என்பது இன்றியமையாத ஒன்றாகும்.

### (இ) உரிய இடங்களில் ஸஜ்தா செய்தல் (ஸஜ்தா திலாவத்)

அல்குர்ஆன் ஓதலின்போது ஸஜ்தாவின் வசனத்தினை ஓதுகின்றவர் அல்லது ஓதக் கேட்பவர் அதற்கான ஸஜ்தாவைச் செய்ய வேண்டும்.

இப்னு உமர் (றழி) பின்வருமாறு அறிவிக்கின்றார்கள். "நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு அல்குர்ஆனை ஓதிக் காண்பிப்பார்கள். ஸஜ்தாவுடைய வசனத்தை ஓதினால் ஸஜ்தா செய்வார்கள். நாமும் ஸஜ்தா செய்வோம்" (புகாரி)

ஸஜ்தா செய்யாவிட்டாலும் பாவம் கிடையாது. என்றாலும் ஒரு ஸுன்னாவை விட்டதாக அமையும்.

ஆபூஹுரைரா(றழி) பின்வருமாறு அறிவிக்கிறார்கள் :- ஆதமின் மகன் ஸஜ்தாவின் வசனத்தை ஓதி ஸஜ்தா செய்தால் ஷைத்தான் அவனை விட்டும் நீங்கி பின்வருமாறு கூறிய வண்ணம் அழுகிறான்." எனக்கு நேர்ந்த கேடே ! ஆதமின் மகனுக்கு ஸஜ்தா செய்யும் படி ஏவப்பட்டது. அவன் செய்தான் அவனுக்கு சுவனமுண்டு. எனக்கும் ஸஜ்தா செய்யும்படி ஏவப்பட்டது. நான் மறுத்தேன். எனக்கு நரகமுண்டு" (அல் -ஹாகிம்)

ஸஜ்தா திலாவத்தில் நபியவர்கள் ஓதிய பின்வரும் கருத்துள்ள துஆவை ஓதிக் கொள்ள வேண்டும் :-

“எனது முகத்தைப் படைத்து தனது சக்தியின் மூலம் அதன் கேள்வியையும், பார்வையையும் அளித்தவனுக்கு எனது முகம் ஸஜ்தா செய்து விட்டது.”

இந்த வகை ஸஜ்தாவுக்கான நிபந்தனைகள் :-

- பெருந் தொடக்கு, சிறு தொடக்கை விட்டும் நீங்கியிருத்தல்
- இடம் சுத்தமாக இருத்தல்
- கிப்லாவை முன்னோக்கியிருத்தல்
- அவ்ரத்தை மறைத்திருத்தல்

அல்குர்ஆனில் பின்வரும் ஆயத்துக்கள் ஓதப்படும் போது ஸஜ்தா திலாவத் செய்யப்படும் :

1. அல்அ.ஃ.ராப் - 206
2. அர்ர.ஃ.த் - 15
3. அந்நஹ்ல் - 49
4. அல்இஸ்ரா – 107, 108
5. மர்யம் - 58
6. அல்ஹஜ் - 18
7. அல்ஹஜ் - 77
8. அல்புர்கான் - 60
9. அன்நம்ல் - 25-26
10. அஸ்ஸஜ்தா – 15
11. அஸ்ஸாத் - 24
12. புஸ்ஸிலத் - 37
13. அந்நஜ்ம் - 62
14. அல்இன்ஷிகாக் - 21
15. அல்அலக் - 19

### சட்ட மூலாதாரம் என்ற வகையில் அல்குர்ஆன்

ஷரீஆ சட்டங்களின் மிகப் பிரதானமான மூலாதாரம் அல்குர்ஆனாகும். இதனை அடிப்படையாகக் கொண்டுதான் ஏனைய அனைத்து மூலாதாரங்களும் தோற்றம் பெற்றிருப்பதுடன் அவற்றிற்குரிய ஆதாரங்களையும் பெற்றுக் கொண்டன. மனிதர்களைப் படைத்த அல்லாஹ்தான் அவனுக்கான சட்டங்களை இயற்றுவதற்கு மிகப் பொருத்தமானவன்.

"படைத்தவன் அறிய மாட்டானா? அவனோ நுட்பமான அறிவுள்ள வனாகவும் நன்குணர்பவனாகவும் இருக்கிறான்." (67 : 14)

மனிதனைப் படைத்தவனே அவனைப் பற்றி நன்கறிவான். அந்த வகையில் மனிதனின் வாழ்க்கை நடவடிக்கைகளுக்கான பிரதான வழி காட்டியாக அவனது கலாமாகிய அல்குர்ஆன் அமைந்தது.

"வானங்கள், பூமி இவற்றிலுள்ள அனைத்துப் பொருட்களின் உரிமை யாளன் அல்லாஹ்வே. மேலும் எல்லா விவகாரங்களும் அல்லாஹ்விடமே திரும்பக் கொண்டுவரப்படுகின்றன." (3 : 109)

மனிதன் தனது படைப்பாளனோடு கொண்டிருக்க வேண்டிய உறவுகள், அவனது தனிப்பட்ட வாழ்வுடன் தொடர்பானவை, குடும்ப வாழ்வுடன் தொடர்பானவை, வர்த்தக உறவுக்கானவை ஆகிய அனைத்துப் போதனைகளையும் அல்லாஹ் இந்த மூலாதாரத்தில் கூறியிருக்கிறான்.

அல்குர்ஆனின் சுமார் 500 வசனங்கள் வாழ்க்கைக்கான சட்ட திட்டங்களையும் விதிமுறைகளையும் உள்ளடக்கியிருப்பதாக சட்ட அறிஞர்கள் விளக்குவர். மனித வாழ்வு எவ்வித குறைபாடுகளும் இன்றி சீராக இயங்க வேண்டும் என்பதற்காகத் தான் படைத்தவனால் இவ்வனைத்தும் அல்குர்ஆன் மூலம் கூறிக்காட்டப்படுகின்றன. மனிதன் செய்ய வேண்டியவை எவை செய்யக்கூடாதவை எவை போன்ற அனைத்தையும் அல்குர்ஆன் கூறுகிறது. இதனால் சீரான வாழ்க்கையொன்றுக்கான பிரதான மூலாதாரமாக அல்குர்ஆன் அமைவதைப் பார்க்கிறோம்.

"நிச்சயமாக இது தான் என்னுடைய நேரான வழி. இதனையே பின்பற்றுங்கள். (பல) வழிகளைப் பின்பற்றாதீர்கள். அவை அல்லாஹ்வின் பாதையை விட்டும் உங்களைப் பிரித்து விடும். நீங்கள் இறை அச்சம் கொள்வதற்காகவே அவ்வாறு உபதேசம் செய்கிறான்." (6 : 154)

"இந்த அல்குர்ஆன் நிச்சயமாக எது மிக நேரானதோ அதன்பால் வழி காட்டுகின்றது. நற்கருமங்களைச் செய்யும் முஃமின்களுக்குப் பெரும் கூலியுண்டு என்று நற்செய்தியும் சொல்கிறது." (17 : 9)

எனவே, உலகத்தைப் படைத்து அதிலுள்ள அனைத்தையும் நிர்வகிக்கும் அல்லாஹ்வால் இறக்கப்பட்ட அல்குர்ஆனை அனைத்தை விடவும் முன்னுரிமைப் படுத்துவது அறிவு பூர்வமானதாகும். இதற்கு முன்னர் அல்லாஹ்வால் இறக்கப்பட்ட அனைத்து இறைவேதங்களையும் பூரணப்படுத்தும் வகையில் தான் அல்குர்ஆன் அருளப்பட்டது. இது மறுமை வரை நிலைத்து நிற்கும் இறைவேதமாகும். இறுதி நாள் வரை வாழும் மனிதர்களுக்கான வழிகாட்டல்களை அது வழங்கிக் கொண்டே இருக்கும்.

ஏனைய மூலாதாரங்களை விட அல்குர்ஆன் முற்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன.

"விசுவாசிகளே ! நீங்கள் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் உங்களில் அதிகாரம் பெற்றவர்களுக்கும் வழிபட்டு நடவுங்கள். உங்களுக்குள் ஏதேனும் ஒரு விடயத்தில் பிணக்கு ஏற்பட்டால் அதனை அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் ஒப்படைத்து விடுங்கள்" (4 : 59)

இதுபோல ஏராளமான ஹதீஸ்களும் காணப்படுகின்றன. "உங்களுக் கிடையில் இரு விடயங்களை நான் விட்டுச் செல்கிறேன். அவற்றை நீங்கள் கடைப்பிடித்து வாழும் காலமெல்லாம் வழிதவறமாட்டீர்கள். அவை அல்லாஹ்வின் வேதமும் நபியின் ஸுன்னாவுமாகும்" (அல் - ஹாகிம்)

"பூமியிலுள்ள அல்லாஹ்வின் அதிகாரம் அல்லாஹ்வின் வேதமும் அவனது நபியின் ஸுன்னாவுமாகும். (தபரானி)

முஆத் இப்னு ஜபல் (றழி) அவர்களை நபியவர்கள் யமன் தேசத்திற்கு அனுப்பிய போது 'உம்மிடத்தில் ஒரு பிரச்சினை வந்தால் எதைக் கொண்டு தீர்ப்பளிப்பீர்?' என்று கேட்டார்கள். அதற்கவர் 'அல்குர்ஆனைக் கொண்டு' என்று கூறினார்கள்."

மய்மூன் இப்னு முஹ்ரான்(ரஹ்) பின்வருமாறு கூறினார்கள். அபூபக்ர்(றழி) அவர்களிடம் ஏதேனும் பிரச்சினை வந்தால் அவர்கள் அல்குர்ஆனில் தீர்வைத் தேடுவார்கள். தீர்வைக் கண்டு கொண்டால் அதைக் கொண்டு தீர்ப் பளிப்பார்கள்? (அஃலாமுல் முவக்கிஈன்)

உமர்(றழி), உஸ்மான்(றழி), அலி(றழி) ஆகியோரின் நடைமுறைகளும் இப்படித்தான் இருந்தன. அலி (றழி) அவர்கள் :- “நான் ஒரு நபியல்ல. எனக்கு வஹி வருவதும் கிடையாது. என்றாலும் நான் முடியுமான அளவிற்கு அல்லாஹ்வின் வேதம் மூலமும், அவனது தூதரின் ஸுன்னா மூலமும் செயலாற்றுகின்றேன்.” எனக் கூறினார்கள்.

இமாம் மாலிக் (றஹ்) அவர்கள் பின்வருமாறு கூறியதாக முஈன் பின் அல்-கஸ்ஸாலி (றஹ்) சொல்கின்றார்கள் :-

“நான் சரியாகவும் பிழையாகவும் செயற்படும் ஒரு மனிதன். எனவே நான் கூறியவற்றைப் பாருங்கள். அல்குர்ஆன் ஸுன்னாவுடன் உடன் படுவதாய் இருப்பின், அதை எடுத்துக் கொள்ளுங்கள். உடன்படாவிட்டால் விட்டுவிடுங்கள்.”

எனவே, சட்டங்களைத் தருவதற்கான உரிமைகள் அல்லாஹ்வுக்கு மாத்திரம் தான் இருக்கின்றன. அதற்கான காரணங்கள். :-

1. முழுப் பிரபஞ்சத்தினதும் ஆட்சியாளன் அல்லாஹ் தான்.
2. இல்லாமையிலிருந்து மனிதனைப் படைத்தவன் அவன் தான்.
3. முன் சென்ற, பின்வருகின்ற சமூகங்களைப் பற்றிய அறிவு அவனுக்கு மாத்திரமே உண்டு.
4. இறுதி நாள் வரை நிலைக்கப் போகும் இந்த மார்க்கத்தைப் பாதுகாப்ப தாகப் பொறுப்பேற்றவனும் அவனே.
5. படைப்பினங்களின் இயல்பையும் ஆற்றலையும் சரியாக அறிந்தவன் அவன் மட்டுமே.

எனவே, இப்படியான இரட்சகனிடமிருந்து இறக்கப்பெற்ற அல்குர்ஆனை சட்டவாக்கத்தில் முற்படுத்தப்படுவது தான் அறிவு பூர்வமானதாகும்.

### அல்குர்ஆன் ஓதுவது பற்றி அல்குர்ஆன்

“அல்குர்ஆன் ஓதப்பட்டால் அதனைச் செவிமடுங்கள். மேலும் அமைதியாக இருங்கள். நீங்கள் அருள்பாலிக்கப்படலாம்” (7 : 204)

“நிச்சயமாக அல்லாஹ்வின் வேதத்தை ஓதி,தொழுகையை நிலைநாட்டி, நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து இரகசியமாகவும் பரகசியமாகவும் செலவு செய்பவர்கள் நஷ்டமடையாத வியாபாரத்தை ஆதரவு வைக்கின்றார்கள்” (35 : 29)

“மேலும் அல்குர்ஆனை நிறுத்தி நிதானமாக ஓதுவீராக” (73 : 04)

**அல்குர்ஆன் ஓதுவது பற்றி அல்ஹதீஸ்**

"அல்குர்ஆனை ஓதுங்கள். மறுமை நாளில் அது தன்னை ஓதியவர்களுக்கு பரிந்துரை செய்யும் " (முஸ்லிம்)

"அல்குர்ஆனை அழகிய ராகத்துடன் ஓதாதவர் என்னைச் சார்ந்தவரல்ல." (அபூதாவூத்)

"அல்லாஹ்வின் வேதத்திலிருந்து யார் ஒரு எழுத்தையேனும் ஓதுகின்றாரோ அவருக்கு ஒரு நன்மை உண்டு. நன்மையானது அதன் 10 மடங்கு வரை அதிகரிக்கும். அலிப் லாம் மீம் என்பது ஒரு எழுத்து எனக் கூற மாட்டேன். மாறாக அலிப் ஒரு எழுத்து, லாம் ஒரு எழுத்து, மீம் ஒரு எழுத்தாகும்" (அத்திர்மிதி)

"அல்குர்ஆனை ஓதுகின்ற ஒரு விசுவாசியின் உதாரணம் உத்ருஜ்ஜா எனும் பழத்துக்கு ஒப்பானதாகும். அதன் நறுமணம் சிறந்தது. அதன் சுவை சிறந்தது. அல்குர்ஆனை ஓதிவராத மு.ஃமீனுக்கு உதாரணம் தம்ரா எனும் பழத்துக்கு ஒப்பானதாகும். அதற்கு நறுமணம் கிடையாது. சிறந்த சுவையுடையது. அல்குர்ஆன் ஓதிவரும் ஒரு முனாபிகின் உதாரணம் ரீஹானா எனும் கனியை ஒத்தது. அதன் மணம் சிறந்தது. ஆனால், சுவை கசப்பானதுமாகும். அல்குர்ஆனை ஓதாத ஒரு முனாபிகின் உதாரணம் ஹன்ஸலா எனும் கனியை ஒத்தது. அதற்கு எவ்வித நறுமணமும் கிடையாது. அதன் சுவையும் கசப்பானதாகும்" (புகாரி, முஸ்லிம்)

"அல்குர்ஆனை ஓதுவதில் திறமையானவர் நல்லோர்களான சங்கைமிக்கவர்களுடன் இருப்பார். யார் அல்குர்ஆனை - அது அவருக்கு கஷ்டமானதாக இருந்த போதும் - திக்கி திக்கி ஓதுகின்றாரோ அவருக்கு இரு கூலிகள் உண்டு" (புகாரி - முஸ்லிம்)

மனிதர்கள் அனைவருக்கும் நேர்வழியைச் சுமந்து வந்த அல்குர்ஆன், கண்ணியத்தோடு நோக்கப்பட வேண்டிய ஒரு வேதமாகும். ஒருவர் தனது வழிகாட்டியாக கருத வேண்டிய இவ்வேதத்தைத் தனது முதுகிற்குப் பின்னால் ஆக்கிக் கொள்வது அதன் கண்ணியத்தைக் குறைத்து மதிப்பது போன்றாகி விடும். அல்லாஹ்விடமிருந்து ஜிப்ரீல் என்ற கண்ணியமான மலக்கின் மூலம் நபி(ஸல்) என்ற கண்ணியமான தூதருக்குக் கொடுக்கப்பட்ட வேதம்

இதுவாகும். இத்தகைய கண்ணியமும் புனிதமும் பெற்ற அல்குர்ஆனுக்கு ஏனைய நூல்கள் இணையாகா. அதன் தூய்மை, புனிதம், தெய்வீகத்தன்மை, மாட்சிமை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு நாம் செயற்படல் வேண்டும்.

## அஸ்ஸுன்னா

### அல் ஹதீஸ், அஸ்ஸுன்னா - பத விளக்கம்

ஹதீஸ் எனும் அரபுப் பதம் உரையாடல், கதை, செய்தி போன்ற கருத்துக்களைத் தருகிறது. எனினும் இப்பதத்தை மற்றொரு பதத்திற்கான அடைமொழிச் சொல்லாகப் பயன்படுத்தும் போது 'புதியது' என்ற பொருளைச் சுட்டுகிறது. ஆனால் ஹதீஸ் கலை அறிஞர்கள் நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம், குணப்பண்புகள், போன்றவற்றைக் குறிக்கவே ஹதீஸ் என்ற சொல்லைப் பயன்படுத்தினார்கள்.

'ஸுன்னா' என்பது மொழி ரீதியில் வழிமுறை, நியதி, வழக்கம் போன்ற கருத்துக்களைத் தரும். ஸுன்னா என்ற சொல்லை அல்குர்ஆன் 'நியதி' என்ற கருத்தில் பயன்படுத்தியுள்ளது. இஸ்லாமிய சட்டத்துறை அறிஞர்கள் கட்டாயம் அல்லாத அதாவது, வாஜிப் அல்லாத விரும்பத்தக்க செயற்பாட்டைக் குறிக்க இப்பதத்தை கையாள்வர். ஆரம்பத்தில் ஸுன்னா என்ற சொல் நபி(ஸல்), ஸஹாபாக்கள், முஸ்லிம் சமூகம் ஆகியோரின் நடைமுறையைச் சுட்ட கையாளப்பட்டுள்ளது. ஆனாலும், குறிப்பாக ஸுன்னா என்ற பதம் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையை குறிக்கவே பயன்படுத்தப்படுகிறது.

ஹதீஸ், ஸுன்னா ஆகிய இரு சொற்களும் பொதுவாக ஓரே பொருளை குறித்தபோதிலும் குறித்த ஓர் அம்சத்தில் ஒன்றில் இருந்து மற்றது வேறுபடுகின்றது. ஹதீஸ் என்பது நபி (ஸல்) அவர்களின் நடத்தை பற்றிய ஓர் அறிவிப்பாகும். எனினும், ஸுன்னா என்பது ஹதீஸில் இருந்து பெறப்படுகின்ற ஒரு சட்டத்தை அல்லது வாழ்க்கை முன்மாதிரியைக் குறித்து நிற்கிறது. இந்தவகையில், ஆதாரபூர்வமான ஹதீஸிலிருந்தே ஸுன்னா பெறப்படுகிறது என்பதையும், சிலவேளை ஒரு ஹதீஸில் இருந்து இரு ஸுன்னாக்கள் பெறப்படமுடியும் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

## ஸுன்னாவின் முக்கியத்துவம்

அல்குர்ஆனுக்கு அடுத்த நிலையில் இருக்கும் ஸுன்னா இஸ்லாத்தில் மிகுந்த முக்கியத்துவத்தை பெறுகிறது. அல்குர்ஆனுக்கு விரிவுரையாக அது விளங்குகிறது. "நாம் திக்ரை (அல்குர்ஆனை) உங்களுக்கு இறக்கிவைத்தோம். மக்களுக்கு இறக்கிவைக்கப்பட்டவைகளை நீங்கள் அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதற்காகும்" என அல்குர்ஆன் நபி (ஸல்) அவர்களது பணியை தெளிவுபடுத்துகிறது. இந்த வகையில் நபி(ஸல்) அவர்கள் சொல், செயல், அங்கீகாரம் என்பவற்றுக்கூடாக அல்குர்ஆனை தெளிவுபடுத்தினார்கள். அல்குர்ஆன் சுருக்கமாக முன்வைக்கும் அடிப்படைகள், விதிகள், கொள்கைகளை விரிவாக விளக்கவும், நடைமுறைப்படுத்தவும் ஸுன்னா அவசியப்படுகிறது. இதனையே இமாம் அவ்ஸாஈ (றஹ்) அவர்கள் ஸுன்னா அல்குர்ஆனை வேண்டி நிற்பதை விட அல்குர்ஆன் ஸுன்னாவை அதிகமாகவே வேண்டிநிற்பதாக குறிப்பிடுகிறார்.

தொழுகைகளின் வகைகள், நேரங்கள், ரக்அத்துக்கள், நிபந்தனைகள் மற்றும் ஸகாத், நோன்பு ஹஜ் போன்ற வணக்க வழிபாடுகள் பற்றியும் மிகவும் விரிவாக ஸுன்னா தெளிவுபடுத்துகிறது.

ஸுன்னா அல்குர்ஆனுக்கான முதன்மையானதும் முழுமையானதுமான நடைமுறை வடிவமாகும். எனவேதான் நபி (ஸல்) அவர்களது வாழ்வு பற்றி ஆயிஷா(றழி) அவர்களிடம் வினவப்பட்டபோது "அவரது வாழ்வு அல்குர்ஆனாக இருந்தது" என பதிலளித்தார்கள். அல்குர்ஆனின் முழு நடைமுறை வடிவமாக ஸுன்னா இருப்பது அதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. ஸுன்னாவைக் குறிப்பதற்கு "ஹிக்மா" என்ற சொல்லை அல்குர்ஆன் பயன்படுத்தியுள்ளது. நபி(ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதம் முக்கியத்துவம் பெறுவதுபோல ஹிக்மாவாகிய அவர்களது ஸுன்னாவும் முக்கியத்துவம் பெறுகிறது.

ஸுன்னாவின் அவசியத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் அல்குர்அன் பல இடங்களிலே தெளிவுபடுத்துகின்றது. அல்லாஹ்வின் ஏவல், விலக்கல்களுக்கு கட்டுப்படுவது போல இறைத்தூதருக்கும் கட்டுப்படுமாறு பணித்திருக்கிறது. "விசுவாசிகளே! அல்லாஹ்வும், றஸுலும் உங்களை வாழவைப்பதன்பால் அழைப்பு விடுத்தால் நீங்கள் அவர்களுக்கு பதிலளியுங்கள்," (8:24) என்பதாக அல்லாஹ் மு∴மின்களுக்கு கட்டளையிடுகின்றான். "றஸுல் உங்களுக்கு எதனைக் கொண்டு வந்தாரோ அதனை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். எதனை விட்டும் உங்களை தடுத்தாரோ அதனை விட்டும் நீங்கள் தவிர்ந்து கொள்ளுங்கள். (59 : 7)

இப்படியாக ஸுன்னாவை பின்பற்றுவதன் அவசியம் குறித்து அல்குர்ஆன் வலியுறுத்திச் சொல்கின்றது.

நபி(ஸல்) அவர்களே ஸுன்னாவின் அவசியத்தை வலியுறுத்தியிருக் கின்றார்கள். "நான் உங்களுக்கு மத்தியில் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். அவை இரண்டையும் நீங்கள் கடைப்பிடிக்கும் வரை வழிதவற மாட்டீர்கள். அவை அல்குர்ஆனும் எனது வழிமுறையுமாகும்." (முஅத்தா) அல்குர்ஆனுக்கு அடுத்த நிலையில் வைத்து ஸுன்னா நோக்கப்படுவது அதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. ஷரீஆவின் சட்டவாக்கத்தில் இரண்டாவது சட்டமூலாதாரமாகவும் அதேவேளை தனியானதொரு மூலாதாரமாகவும் விளங்கு கிறது. இத்தகைய ஸுன்னாவை ஏற்று பின்பற்றுவது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.

### சட்ட மூலாதாரம் என்ற வகையில் ஸுன்னா

இஸ்லாமிய சட்டத்துறை அறிஞர்கள் அனைவரும் அல்குர்ஆனுக்கு அடுத்த தரத்திலான மூலாதாரமாக ஸுன்னாவை அங்கீகரித்துள்ளனர். இஸ்லாமிய சட்டவாக்கத்தில் அல்குர்ஆனுக்கு அடுத்த தரத்திலிருக்கும் ஸுன்னா அல்குர்ஆனைப் போலவே தனியான மூலாதாரமாகவும் விளங்குகிறது. நபி(ஸல்) அவர்களுக்கு சட்டங்களை இயற்றுகின்ற அதிகாரத்தை அல்லாஹ் வழங்கியிருப்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

> "அவர்(இறைத்தூதர்) தன் மனோ இச்சைப்படி எதனையும் கூறு வதில்லை. இது அவருக்கு வஹி மூலம் அறிவிக்கப்பட்டதேயன்றி வேறில்லை." (53:3-4)

> "இறைத்தூதர் உங்களுக்கு கொடுத்ததை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். தூதர் எதனை உங்களுக்கு தடுத்துக் கொண்டாரோ, அதிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள்." (59:7)

> "விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு நடவுங்கள். அவ்வாறே அல்லாஹ்வுடைய தூதருக்கும் உங்களுள் பொறுப்பாளர்களுக்கும் வழிப்பட்டு நடவுங்கள். விசுவாசிகளே! உங்களுக்குள் யாதொரு விடயத்தில் பிணக்கு ஏற்பட்டால் அதனை அல்லாஹ்விடமும், அவனுடைய தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள்." (4:59)

> “யார் அல்லாஹ்வின் தூதருக்கு வழிப்பட்டு நடக்கிறாரோ, அவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு வழிப்பட்டார்.” (4:80)

நபி(ஸல்) அவர்களது தீர்ப்புக்கள், ஏவல், விலக்கல்கள் முதலானவை உட்பட அவரது வாழ்க்கை முன்மாதிரிகள் அனைத்தும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டவை என்பதை மேலுள்ள வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

நபி(ஸல்) அவர்களது ஸுன்னா சட்டவாக்க மூலாதாரம் என்பதை ஹதீஸ்களும் உறுதிப்படுத்துகின்றன. முஆத் பின் ஜபல் (றழி) அவர்களை நபி(ஸல்) அவர்கள் யமன் பிரதேசத்துக்கான அதிகாரியாக நியமித்தார்கள். அவர்களிடம் எதனைக் கொண்டு பிரச்சினைகளை தீர்ப்பீர்கள்? என நபி(ஸல்) அவர்கள் கேட்டதற்கு இறைவேதத்தைக் கொண்டு எனப்பதிலளித்தார்கள். அதில் தீர்வு காணப்படாவிட்டால் என்ன செய்வீர்கள் எனக் கேட்டபோது ஹதீஸ்களை வைத்துத் தீர்ப்பு வழங்குவேன் என்றார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் அங்கீகாரம் வழங்கினார்கள்.

> நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் “உங்களிடம் இரு அம்சங்களை விட்டுச்செல்கின்றேன். அவ்விரண்டையும் பின்பற்றும் வரை நீங்கள் வழிதவறமாட்டீர்கள். அவை அல்லாஹ்வின் வேதமும் எனது ஸுன்னாவுமாகும்.” (முவத்தா)

> நபி (ஸல்) அவர்கள் உயிர்வாழ்ந்த காலத்திலும் அவர்களது மரணத்திற்குப் பின்னரும் ஸஹாபாக்கள் ஹதீஸ்களை பின்பற்றி வாழ்ந்தார்கள். இந்தவகையில், ஸுன்னாவை பின்பற்ற வேண்டும் என்பது ஸஹாபாக்களின் “இஜ்மா”வான (ஏகோபித்த) முடிவாகும்.

அல்குர்ஆன் சுருக்கமாக குறிப்பிடுபவற்றை விளக்குபவராகவும், அல்குர்ஆன் குறிப்பிடாத பல சட்டங்களை கூறுபவராகவும், முன்மாதிரியாக செயற்பட வேண்டியவராகவுமே நபி (ஸல்) அவர்களை அல்லாஹ் தெரிவு செய்தான். இந்தவகையில் அன்னாருக்கு மனிதர்கள் முழுமையாக கட்டுப்படுவது அவசியமாகிறது.

இஸ்லாமிய சட்டத்தில் சட்டங்களை ஆக்குகின்ற முழு உரிமையும் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உண்டு. அவனாக விரும்பி இறுதித் தூதரை தேர்ந்தெடுத்து சட்டம் இயற்றும் அதிகாரத்தை ஓர் எல்லையுள் அவர்களுக்கு

வழங்கியுள்ளான் என்பதால் அவர்களது ஸுன்னாவை மூலாதாரமாகக் கொள்வது அவசியமாகின்றது.

**ஹதீஸ் பாதுகாக்கப்பட்ட முறை**

இஸ்லாமிய சட்டக்கலையின் முக்கிய மூலாதாரங்களில் ஒன்றான ஹதீஸை பாதுகாப்பதற்கு ஆரம்ப காலம் முதலே பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நபித்தோழர்கள் நபி(ஸல்) அவர்களை தமது அன்புக்குரியவராக மட்டுமன்றி தமது குடும்பத்தவரைவிட நெருக்கமானவராகவும், தமது உயிரிலும் மேலான வராகவும் நேசித்தனர். அவர்களது வாழ்க்கையை முழு முன்மாதிரியாகக் கருதி அணுவணுவாகப் பின்பற்றினர். அவர்களது வாழ்வின் ஒவ்வொரு அசைவையும் மிகவும் நுணுக்கமாக அவதானித்தனர்.

நபி(ஸல்) அவர்களது இரவு நேர வணக்கங்களை அவதானிப்பதற்காக ஸைத் பின் ஹாரிஸ் (றழி) முழு இரவிலும் கண் விழித்திருந்தார். நபி(ஸல்) அவர்கள் எத்தனை முறை பாவமன்னிப்புக் கேட்டிருக்கிறார்கள் என்பதை அப்துல்லாஹ் இப்னு உமர்(றழி) அவர்கள் அவதானித்தார்கள். அபூஹுரைரா(றழி) அவர்கள் தொடர்ந்தும் மூன்று வருடங்கள் மஸ்ஜிதுன் நபவியில் தங்கி நபி(ஸல்) அவர்களை முழுமையாக அவதானித்தார்கள். உமர்(றழி) அவர்கள் நபி(ஸல்) அவர்களது எந்த செய்தியும் தனக்குத் தவறவிடக்கூடாது என்பதற்காக மதீனத்து ஸஹாபி ஒருவரோடு ஒப்பந்தம் செய்து கொண்டு ஒரு நாள் விட்டு ஒரு நாள் மாறி மாறி இருவரும் நபிகளாரை அவதானித்து வந்தார்கள். இவ்வாறு அவதானித்ததுடன் நபி (ஸல்) அவர்களிடமிருந்து தாம் கண்டவற்றையும் கேட்ட வற்றையும் பரஸ்பரம் அறிவித்துக்கொண்டார்கள். பொதுவாக ஸஹாபாக்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போதெல்லாம் நபி (ஸல்) அவர்கள் பற்றிய செய்திகளைப் பரிமாறிக் கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் வீட்டில், மஸ்ஜிதில் நடந்துகொள்ளும் முறைகள், அவர்களது பிரயாண, போர்க்கள செயற்பாடுகள் போன்றவற்றை மிகவும் நுணுக்கமாக ஸஹாபாக்கள் அறிந்துவைத்திருந்தார்கள். இவ்வாறு ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களோடு கொண்டிருந்த நேசமும், பற்றும் ஹதீஸ்கள் மிகவும் தூய்மையாக பாதுகாக்கப்பட வழிகோலியது.

நபி (ஸல்) அவர்களது பேச்சு மிகத் தெளிவானதாகவும், இலக்கண வரம்புக்கு உட்பட்டதாகவும் மனதில் பதித்துக்கொள்ள வசதியாகவும் இருந்தது. இதனால் மனனமிடுவதும் இலகுவாகியது. நபி(ஸல்) அவர்களது ஹதீஸ்களை ஸஹாபாக்கள் மனனத்துக்கூடாகவே அதிகமாக பாதுகாத்தார்கள். மனனசக்தி அரபிகளிடத்தில்

மிகவும் பலமானதாகக் காணப்பட்டது. மனனத்துக்கூடாக ஹதீஸ்கள் பாதுகாக்கப் பட்டது போலவே ஸஹாபாக்களிற் சிலர் நபி(ஸல்) அவர்களது அனுமதியோடு எழுதியும் பாதுகாத்தார்கள். எனினும், அல்குர்ஆனோடு ஹதீஸ்கள் கலந்து விடக்கூடாது என்பதற்காக எழுதுவதைத் தடுத்து பல அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டிருந்தன.

நபி (ஸல்) அவர்களிடம் சுமார் ஐந்து எழுத்தாளர்கள் கடமையாற்றினார்கள். இவர்கள் அல்குர்ஆனை எழுதியது மாத்திரமின்றி, ஸகாத் கணக்குகளையும் பதிவுசெய்து வைத்தனர். நபி(ஸல்) அவர்கள் வெளிநாட்டு அரசர்களுடன் கடிதத்தொடர்புகளை வைத்திருந்தார்கள். ஹுதைபியா உடன்படிக்கை எழுத்தில் வடிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டிருந்தது. நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கும் நூற்றுக்கணக்கான கடிதங்களை நபியவர்கள் அனுப்பியிருந்தார்கள். நபி (ஸல்) அவர்களது காலத்தில் ஹதீஸ்கள் எழுத்துருவில் பாதுகாக்கப்பட்டதை இவை நிரூபிக்கின்றன.

அல்குர்ஆனுடன் ஹதீஸ்கள் கலந்து எழுதப்படுவதை நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள் என்பது உண்மையே. ஆனால், ஹதீஸ்களை தனியாக பதிந்து வைப்பதற்கு அனுமதி வழங்கி ஊக்குவித்தார்கள். அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ்(றழி) எனும் இளம் வயது ஸஹாபி நபி(ஸல்) அவர்களது கூற்றுக்கள் அனைத்தையும் எழுதி வைக்கும் பழக்கமுடையவராக இருந்தார்கள். ஒரு நாள் அவருடைய தோழர்களில் ஒருவர் “நபி(ஸல்) அவர்களும் மனிதர் தான், அவர் சிலவேளை மகிழ்ச்சியாகவும், திருப்தியாகவும் இருப்பார். மற்றும் சிலவேளை கோபமடைந்திருக்க முடியும். அதனால் அவரது கூற்றுக்களை அப்படியே எழுதி வைப்பது நல்லதல்ல” என்று கூறினார். எனவே நபிகளாரிடம் சென்று “நீங்கள் கூறும் அனைத்தையும் ஒருவர் எழுதிவைக்கலாமா?” என்று வினவினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் “அல்லாஹ்வின் மீது ஆணையாக ஒரு பொழுதும் இந்த வாயிலிருந்து பொய் வருவதில்லை” என்று பதிலளித்தார்கள். (ஆதாரம் அபூதாவூத்). அப்துல்லாஹ் பின் அம்ர் இப்னு ஆஸ்(ரழி) தான் எழுதி வைத்திருந்த ஹதீஸ் தொகுப்புக்கு “ஸஹீபா ஸாதிகா” என்று பெயரிட்டிருந்தார்கள்.

நபி(ஸல்) அவர்களது காலத்தில் ஹதீஸ்கள் எழுத்துருவில் பாதுகாக்கப் பட்டிருந்தன என்பதற்கு மேற்கூறியது போன்ற பல சான்றுகள் உள்ளன. எனினும், அல்குர்ஆனை எழுதி வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது போன்று ஹதீஸ்கள் அனைத்தையும் எழுதுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. ஸஹாபாக்களில் சிலர் தங்களுக்கு கிடைத்தவற்றை எழுதி வைத்தார்கள். ஆனால்,

அனைத்து ஹதீஸ்களும் எழுதப்படவில்லை. நபி(ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை இடம் பெற்றுக்கொண்டிருந்த ஹதீஸ்கள் அனைத்தையும் எழுதுவதும் சாத்தியமற்றதாக இருந்தது.

குலபாஉர் ராஷிதூன் காலத்தில் ஏற்பட்ட இஸ்லாமிய இராச்சிய விரிவை அடுத்து முக்கிய நகரங்களில் ஸஹாபாக்கள் குடியேறினர். த.்.வா, நிர்வாக வேலைகள், மற்றும் போராட்டங்கள் போன்றவற்றுக்காகச் சென்ற ஸஹாபாக்கள் தாம் மனனம் செய்திருந்த ஹதீஸ்களை அவ்வப்பகுதிகளில் போதித்தார்கள். இதனால் மக்கா, மதீனா, கூபா, பஸரா, டமஸ்கஸ், புஸ்தாத், ஸன்ஆ போன்ற நகரங்களில் ஹதீஸ் கலாநிலையங்கள் தோன்றின. அவை மிகவும் பிரசித்திபெற்றிருந்தன. எனினும் அனைத்து ஹதீஸ்களும் ஒரே இடத்தில் கிடைக்கவுமில்லை. இதனால் ஸஹாபாக்கள் ஹதீஸை கற்பதற்கு மிக நீண்ட தூர பயணங்களை மேற்கொண்டார்கள். ஜாபிர் பின் அப்துல்லாஹ்(றழி) அவர்கள் ஒரு ஹதீஸை அறிவதற்கு மதீனாவிலிருந்து சிரியாவுக்குச் சென்றார்கள்.

சிதறிக்காணப்பட்ட ஹதீஸ்களை திரட்டுவதற்கும், தொகுப்பதற்கும் கலீபா உமர் (றழி) அவர்கள் சிந்தித்தபோதும் அல்குர்ஆனின் முக்கியத்துவம் குறைந்துவிடுமோ என்ற பயத்தினால் அம்முயற்சியை விட்டுவிட்டார்கள். உமையா கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் (றஹ்) அவர்கள் ஹதீஸ்களை தொகுப்பதற்கு உத்தியோகபூர்வ முயற்சிகளை மேற்கொள்ளும்படி மதீனா கவர்னருக்கு கட்டளையிட்டதுடன் ஹதீஸ் கலையில் ஆழ்ந்த அனுபவமும், ஈடுபாடும் கொண்ட இமாம்களை இப்பணிக்காக நியமித்தார்கள். அபூபக்கர் பின் முஹம்மத் பின் ஹத்ம், இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ, ஸஃத் பின் இப்றாஹிம் போன்ற முஹத்திஸ்கள் இப்பணிக்காக ஈடுபடுத்தப்பட்டார்கள். அந்தவகையில், ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டின் இறுதியில் ஹதீஸ்களை உத்தியோக பூர்வமாக தொகுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு இமாம் மாலிக்(றழி) அவர்களின் முஅத்தா நூலும் அதனைத் தொடர்ந்து ஸிஹாஹுஸ் ஸித்தா நூற்களும் தொகுக்கப்பட்டன. அதன்மூலம் ஹதீஸ்கள் மிகவும் தூய்மையாகப் பாதுகாக்கப்பட்டன.

ஹதீஸ்களின் தூய்மையைப் பாதுகாப்பதற்காக அவற்றை அறிவித்த ராவிகளின் நம்பக தன்மையை உறுதி செய்வதற்காக 'இஸ்னாத்' என்ற தனியான கலையையும் உருவாக்கி வளர்த்தனர்.

**ஹதீஸின் வகைகள்**

இஸ்லாமிய வரலாற்றில் ஹதீஸ்களின் தூய்மையை பாதுகாப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தவகையில் தான் ஹதீஸ்களை அறிவிக்கும் ராவிகள் குறித்து மிக நுணுக்கமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ராவிகளின்

நம்பகத்தன்மைக்கு ஏற்ப ஹதீஸ்கள் பிரித்து நோக்கப்பட்டன. இந்தவகையில் ஹதீஸ்கள் பிரதானமாக இரண்டு வகைப்படுகின்றன :-

1. மக்பூல் - ஏற்கப்பட்டவை
2. மர்தூத் - நிராகரிக்கப்பட்டவை

மக்பூல் வகையை சேர்ந்த ஹதீஸ்களை ஸஹீஹ், ஹஸன் என்று முஹத்திஸ்கள் மேலும் இரு கூறுகளாக வகைப்படுத்துவர்.

**ஸஹீஹ்**

இப்பதம் நம்பத்தகுந்த ஹதீஸ்களைக் குறிக்கிறது. ஒரு ஹதீஸ் ஸஹீஹானதாக இருக்கவேண்டுமாயின் அது ஐந்து நிபந்தனைகளைப் பெற்றிருக்க வேண்டும். அறிவிப்பாளர் வரிசை முறிவடையாதிருத்தல், குறித்த ஹதீஸ்களை அறிவிக்கும் அனைத்து ராவிகளும் நம்பகமானவர்களாகவும், செய்திகளை மாற்றமுறாது, ஊர்ஜிதமாக கூறுபவராகவும் இருத்தல், குறித்த ஹதீஸின் உள்ளடக்கம் அதைவிட பலமான கருத்தோடு முரண்படாததாகவும், குறைபாடு அற்றதாகவும் காணப்படல் வேண்டும். இத்தகைய நிபந்தனைகள் பூர்த்தியாகும் போதே ஹதீஸ் ஸஹீஹானதாக அமையும்.

**ஹஸன்**

ஸஹீஹான ஹதீஸுக்கு இருக்க வேண்டிய நிபந்தனைகள் தான் ஹஸனான ஹதீஸிலும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், அறிவிப்பாளர் வரிசையில் காணப்படும் ராவியின் ‘ஹிப்பதுல் ழப்த்’ எனப்படும் செய்தியை ஊர்ஜிதமாக அறிவிப்பதில் இருக்கும் குறைபாடு குறித்த ஹதீஸை ஹஸனானதாக மாற்றிவிடும்.

ஹதீஸ்களை ரிவாயத் செய்யும் ராவிகளின் எண்ணிக்கையை வைத்தும், ராவித் தொடரின் அறிவிக்கப்படுகின்ற தன்மையை மையமாக வைத்தும் ஹதீஸ்களை பின்வருமாறு பிரிக்கலாம் :-

**1. முதவாதிர்**

ஸஹாபிகள், தாபிஊன்கள், தபஉத்தாபிஈன்கள் என்பவர்களில் பெரும் எண்ணிக்கையான, நம்பகரமான ராவிகள் அறிவிப்புச் செய்த ஹதீஸை ‘முதவாதிர்’

என்பர். மேற்குறித்த மூன்று பரம்பரையினருக்குள்ளும் ஒவ்வொரு பரம்பரையை சேர்ந்தவர்களில் குறைந்தபட்சம் பத்து பேராவது குறித்த ஹதீஸை ரிவாயத் செய்திருக்க வேண்டும் என்று சிலர் கூறுவர். ஆனாலும், புனைந்துரைத்தல் இடம்பெறுதல் சாத்தியமற்றது என்று கருதப்படக்கூடிய அளவிலான எண்ணிக்கையைக் கொண்ட ராவித் தொடரை உடைய ஹதீஸ்கள் மட்டுமே 'முதவாதிர்' ஆகக் கொள்ளப்படுகின்றன. ஹதீஸ்களின் வகைகளில் மிகவும் நம்பகரமான ஹதீஸ்களாக விளங்கும் முதவாதிரான ஹதீஸ்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது.

**2. ஆஹாத்**

முதவாதிர் என்று கருதப்படப் போதுமான ராவித் தொடர்கள் இல்லாத ஹதீஸ்கள் "ஆஹாத்" எனப்படுகின்றன. முதல் மூன்று பரம்பரையைச் சேர்ந்தவர்களில் ஒருவர் அல்லது இருவர் அல்லது மூவர் ரிவாயத் செய்யும் இஸ்னாதை உடைய ஹதீஸ்கள் இதில் அடங்கும்.

ஆஹாத் வகையைச் சேர்ந்த ஹதீஸ்களை முஹத்திஸ்கள் பல பிரிவுகளாக வகைப்படுத்துவர். அவற்றிற் சில பின்வருமாறு :-

1. **மஷ்ஹூர்**

   ஒவ்வொரு அறிவிப்பாளர் வகுப்பிலும் குறைந்தபட்சம் மூவரால் அறிவிக்கப்பட்ட ஹதீஸ். (இந்த வகையில் மஹ்ஹுர் முத்வாதீர் வகை ஹதீஸ்களுக்கு அடுத்த நிலையில் இருக்கும்.)

2. **அஸீஸ்**

   ஒவ்வோர் அறிவிப்பாளர் வகுப்பிலும் குறைந்தபட்சம் இரு ராவிகளைக் கொண்ட ஹதீஸ்.

3. **ஃகரீப்**

   அறிவிப்பாளர் வகுப்புகளுள் ஏதாவது ஒரு வகுப்பில் ஒரு ராவி மாத்திரம் அறிவிக்கும் ஹதீஸ்.

**ஓர் இஸ்னாத் சென்றடையும் முடிவிடத்தை கருத்திற்கொண்டு ஹதீஸை மூன்றாக வகைப்படுத்தலாம்.**

1. **மர்பூஉ**
   ராவித்தொடர் முறிவற்று தொடர்ச்சியாக நபி(ஸல்) அவர்களைச் சென்றடையும் ஹதீஸ்

2. **மவ்கூப்**
   ராவித்தொடர் ஸஹாபி வரை சென்றடையும் ஹதீஸ்

3. **மக்தூஃ**
   ராவித்தொடர் தாபிஈ வரை சென்று அவரோடு நின்றுவிடும் ஹதீஸ்

**ஆஹாதான ஹதீஸ்கள் இஸ்னாதில் ஏற்படும் முறிவுகளின் அடிப்படையிலும் பல வகைகளுக்குட்படும்.**

1. **முர்ஸல்**
   ஒரு ஹதீஸின் தொடரில் ஸஹாபியை விட்டுவிட்டு ஒரு தாபிஈ நேரடியாக நபி (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கும் ஹதீஸ்.

2. **முஅல்லக்**
   அறிவிப்பாளர் வரிசையின் ஆரம்பத்தில் வருகின்ற ஒரு ராவியோ ஒன்றுக்கு மேற்பட்ட ராவியோ விடுபட்டிருக்கும் ஹதீஸ்.

3. **முன்கதிஉ**
   ராவித் தொடரில் ஆரம்ப ராவியினதும் இறுதி ராவியினதும் பெயர்கள் இருந்தபோதிலும் இடையில் ஓரிடத்தில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் ராவியின் பெயர் விடுபட்டிருக்கும் அறிவிப்பாளர் வரிசையயைக் கொண்ட ஹதீஸ்

**ஹதீஸ்களின் இயல்பை மையமாகக் கொண்டு பின்வருமாறு ஹதீஸ்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன :-**

**1. ஹதீஸ் குத்ஸி**

அல்லாஹ் சொன்னதாக நபி(ஸல்) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ்கள். இங்கு ராவியாக நபி(ஸல்) அவர்கள் இருப்பார்கள்.

**2. ஹதீஸ் நபவி**

நபி(ஸல்) அவர்களது சொல், செயல், அங்கீகாரம், குணங்கள், அங்க அவயவங்கள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய ஹதீஸ்கள்

## அஸ்ஸிஹாஹுஸ் ஸித்தாவும் அவற்றின் தொகுப்பாசிரியர்களும்

ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டு ஹதீஸ் கலை வரலாற்றில் பொற்காலமாக விளங்கியது. இக்காலப்பகுதியில் ஆதாரபூர்வமான ஹதீஸ்களை திரட்டித்தரும் "அஸ்ஸிஹாஹுஸ் ஸித்தா" ஹதீஸ் கிரந்தங்கள் தோற்றம்பெற்றன. ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம், ஸுனன் அபூதாவூத், ஸுனனுந் நஸாயீ, ஜாமிஉத் திர்மித், ஸுனன் இப்னு மாஜா ஆகிய ஆறு ஹதீஸ் கிரந்தங்களே "அஸ்ஸிஹாஹுஸ் ஸித்தா" என வரலாற்றில் பிரபல்யமாகியுள்ளன.

### (1) ஸஹீஹுல் புஹாரி

ஹிஜ்ரி 194 இல் புகாராவில் பிறந்த அபூ அப்தில்லாஹ் முஹம்மத் பின் இஸ்மாஈல் அவர்களால் தொகுக்கப்பட்ட நூலே ஸஹீஹுல் புகாரி எனப்படுகிறது. ஹதீஸ் கலையை கற்பதில் நாட்டம் கொண்ட இமாம் புகாரி (ரஹ்) தன்னுடைய பதினாறு வயதில் மிகவும் பிரபல்யமான ஆரம்பகால ஹதீஸ் வல்லுனர்களான இப்னுல் முபாரக், வாகிதி முதலானோரின் ஹதீஸ் தொகுப்புக்களை மனனம் செய்திருந்தார். வெறுமனே ஹதீஸ்களை மனனம் செய்வதோடு மாத்திரம் நின்றுகொள்ளாது ஹதீஸ்களை அறிவிப்புச் செய்தோரின் வரிசையில் இருந்த ஒவ்வொருவரதும் வாழ்க்கை வரலாறு, அவர்கள் பிறந்த இடம், திகதி, அவர்களது இறப்பு போன்றன குறித்த பூரண விவரங்களையும் தெரிந்து வைத்திருந்தார்.

இமாம் புகாரி(றஹ்) அவர்கள் ஹதீஸ்களையும் அவற்றின் அறிவிப்பாளர் வரிசையையும் (இஸ்னாத்) மிகச்சரியாக மனனமிட்டிருந்தார்கள். ஹதீஸ்களை அவற்றின் அறிவிப்பாளர் வரிசைகளுடன் மனனமிடுவதில் இமாம் புகாரி தனித்துவமானவராக விளங்கினார். ஒரு முறை பக்தாதை நோக்கி இமாம் புகாரி பயணம் மேற்கொண்டிருந்த போது அங்கிருந்த அறிஞர்கள் இமாமவர்களது நினைவாற்றலை பரீட்சிக்க விரும்பினார்கள். அதற்காக பத்துப் பேர் பத்து ஹதீஸ்களை வாசித்துக்காட்டுவதாகவும், அனைவரும் குறித்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையை மாற்றி முன்வைப்பதாகவும் தீர்மானித்துக் கொண்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் இமாம் புஹாரியின் முன்னிலையில் ஹதீஸ்களை வாசித்துக்காட்ட அவை ஒவ்வொன்றிலும் காணப்படும் பிழைகளையும், மாற்றங்களையும் அவர் சுட்டிக் காட்டியபோது ஈராக் அறிஞர்கள் இமாம் புஹாரியின் ஹதீஸ்கலை ஆற்றலையும் மனன சக்தியையும் பெரிதும் பாராட்டினார்கள்.

இமாம் புஹாரி(றஹ்) அவர்கள் ஹதீஸ்துறையில் பல்வேறு ஆக்கங்களை முன்வைத்தார்கள். அவற்றுள் அதபுல் முப்ரத், ரப்உல் யதைன், அல்முஸ்னத் தாரீகுல்கபீர், அல்இலல், ஸஹீஹுல் புஹாரி போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவை.

இமாம் புஹாரி(றஹ்) அவர்களின் ஹதீஸ்கலை சார்ந்த பிரபலமான ஆக்கமாக ஸஹீஹுல் புஹாரி விளங்குகிறது. அதன் பூரணமான பெயர் ''அல்ஜாமிஉ அல்முஸ்னத் அஸ்ஸஹீஹ் அல்முஹ்தஸர் மின் உமூரி ரஸூலில்லாஹி வஸுனனிஹீ வஅய்யாமிஹி" என்பதாகும். இந்நூலை தொகுப்பதற்கு 16 வருடங்கள் சென்றன. சுமார் ஆறு இலட்சம் ஹதீஸ் வரிசைகளை திரட்டி அவற்றிலிருந்து தான் வகுத்துக்கொண்ட ஸஹீஹான ஹதீஸுக்கு காணப்பட வேண்டிய நிபந்தனைகளோடு உடன்படும் ஹதீஸ்களை தனது கிரந்தத்திலே பதிவு செய்ய முன்னர் இரண்டு ரக்அத்துக்கள் தொழுது பிரார்த்தித்து தூய மனதோடு பதிவுசெய்பவராக இருந்தார்கள். நபி (ஸல்) அவர்களின் ஆதாரபூர்வமான ஹதீஸ்களை பதிவு செய்த இமாமவர்கள் அக்காலத்தில் ஹதீஸ்துறையில் மிகவும் பிரபல்யமும் தேர்ச்சியும் பெற்ற இமாம்களான அஹ்மத் பின் ஹன்பல், யஹ்யா இப்னு முஈன், அலி இப்னுல் மதீனி ஆகியோர்களிடம் தனது ஆக்கத்தை காட்டி அதற்கான அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டார்கள்.

ஸஹீஹுல் புஹாரியில் மொத்தம் 7275 ஹதீஸ்கள் உள்ளன. இமாம் புஹாரி (றஹ்) அவர்கள் தனது கிரந்தத்தை வெறுமனே நபி(ஸல்) அவர்களது ஹதீஸ்களை மாத்திரம் திரட்டித்தரும் நூலாக அமைக்கவில்லை. மாற்றமாக நபி (ஸல்) அவர்களது ஹதீஸ்களுக்கூடாக பெறமுடிந்த பிக்ஹையும் கவனத்திற் கொண்டு ஸஹீஹுல் புஹாரியை தொகுத்துள்ளதாக ஹதீஸ் கலை ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்தவகையில் இமாமவர்கள் அத்தியாயங்களுக்கு இட்டுள்ள தலைப்பும் அவர் குறித்த ஹதீஸை முழுமையாக கொண்டு வராது துண்டு துண்டாக உடைத்தும் ஒரே ஹதீஸை மீட்டிமீட்டிக் கூறியுமிருப்பதை அவதானிக்க முடியும். இமாம் புஹாரி (றஹ்) அவர்களது கிரந்தத்தில் கூறியது கூறல்களை விடுத்து நோக்கும்போது 2602 ஹதீஸ்களே பதிவாகியிருக்கின்றன.

### (2) ஸஹீஹ் முஸ்லிம்

ஹிஜ்ரி 206 இல் பிறந்த இமாம் அபுல் ஹுஸைன் முஸ்லிம் பின் அல்ஹஜ்ஜாஜ் நைஸாபூரி அவர்கள் தொகுத்த ஹதீஸ் கிரந்தமே ஸஹீஹ் முஸ்லிமாகும். பதினைந்தாம் வயதில் ஹதீஸ்களை கற்க ஆரம்பித்த இமாம் முஸ்லிம் ஹதீஸ் கலையை கற்பதற்காக ஈராக், சிரியா, எகிப்து, ஹிஜாஸ், முதலான பிரதேசங்களுக்கு பிரயாணம் மேற்கொண்டார். அவர் நூற்றுக் கணக்கான ஆசிரியர்களிடம் ஹதீஸை கற்றார். அவர்களுள் அஹ்மத் இப்னு ஹன்பல், ஸஈத் பின் மன்ஸுர் புஹாரி, இப்னு மஈன், இப்னு அபிஷைபா ஆகியோர் பிரதானமானவர்களாவர். திர்மிதி, இப்னு அபீஹாதிம், இப்னு ஹுஸைமா போன்ற ஹதீஸ்துறையில் மிகவும் பாண்டித்தியம் பெற்ற மாணவர்களும் இமாம் முஸ்லிமுக்கு இருந்தார்கள்.

இமாம் முஸ்லிம் (றஹ்) அவர்கள் பல நூற்களை தொகுத்துள்ளார்கள். அவற்றுள் சில பின்வருமாறு :-

1 தபகாத்
2. அல் இலல்
3. அல் முஹழ்ரமீன்
4. அத்தாரீஹ்
5. ஸஹீஹ் முஸ்லிம்

இமாம் முஸ்லிம்(ரஹ்) அவர்களால் தொகுக்கப்பட்ட மிகவும் பிரதானமான நூல் ஸஹீஹ் முஸ்லிமாகும். அது ஹதீஸ்கலை வரலாற்றில் ஸஹீஹுல் புஹாரிக்கு அடுத்து முக்கியத்துவம் பெற்ற நூலாகும். அக்கால அறிஞர்கள் ஸஹீஹ் என ஏகமனதாக ஏற்றுக்கொண்ட ஹதீஸ்களை மாத்திரமே இமாம் முஸ்லிம் தனது கிரந்தத்தில் பதிவு செய்தார்கள். ஹதீஸ்களை துண்டுதுண்டாக உடைக்காமல் முழுமையாக பதிவுசெய்தார்கள். ஸஹீஹான ஹதீஸ்களை மாத்திரம் உள்ளடக்கிய ஸஹீஹ் முஸ்லிமிலே 4000 ஹதீஸ்கள் உள்ளன. ஸஹீஹ் முஸ்லிமுக்கு ஏராளமான விளக்கவுரை நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் இமாம் நவவி(ரஹ்) அவர்களின் ‘அல் மின்ஹாஜ் பீ ஷரஹி ஸஹீஹ் முஸ்லிம் பின் ஹஜ்ஜாஜ்’ என்பது மிகவும் பிரபல்யமானதாகும்.

### (3) ஸுனன் அபூதாவூத்

ஹிஜ்ரி 202 இல் பிறந்த இமாம் அபூதாவுதின் பெயர் ஸுலைமான் என்பதாகும். அபூதாவுத் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்ற இமாமவர்கள் ஹதீஸ்

கலையை கற்றுக்கொள்வதற்காக குராஸான், கூபா, பக்தாத், டமஸ்கஸ், எகிப்து ஆகிய நகரங்களுக்கு பிரயாணம் மேற்கொண்டார். ஹதீஸ்கலை இமாம்களான அஹ்மத்பின் ஹன்பல், அலி இப்னுல் மதீனி, யஹ்யா இப்னு மஈன், அபுல் வலீத் தயாலீசி முஹம்மத் பின் பஷ்ஷார் ஆகிய ஹதீஸ் வல்லுனர்களிடம் கற்றார். இமாம் அபூதாவுத் ஹதீஸ்களை திரட்டுபவராகவும் தொகுப்பவராகவும் போதிப்பவராகவும் மாத்திரம் விளங்காது சிறந்த சட்டக்கலை அறிஞராகவும் திறனாய்வாளராகவும் இருந்தார். அவர் ஹிஜ்ரி 275 இல் பஸறாவில் மரணித்தார்.

ஸிஹாஹுஸ் ஸித்தா எனப்படும் ஆறு ஸஹீஹான ஹதீஸ் கிரந்தங்களில் அல்ஜாமிஉ, அஸ்ஸுனன் என இரண்டுவகை தொகுப்புகள் காணப்படுகின்றன. அல்ஜாமிஉ என்பது மார்க்கத்தின் அனைத்து தலைப்புகளையும் தொகுத்துத்தரும் நூற்களைக் குறிக்கிறது. ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம் போன்றன அல்ஜாமிஉ வகை கிரந்தங்களாகும். ஸுனன் என்பது மார்க்கத்தின் பெரும்பாலான தலைப்புக்களை உள்ளடக்கிய நூற்களாகும். இந்தவகை நூற்களுக்கு உதாரணங்களாக ஸுனன் அபீதாவுத், ஸுனன் நஸாஈ, ஸுனன் இப்னு மாஜா என்பன விளங்குகின்றன.

இமாம் அபூதாவுத்(ரஹ்) சுமார் 5 இலட்சம் ஹதீஸ்களிலிருந்து சுமார் 4800 ஹதீஸ்களைத் தெரிவு செய்து தனது நூலிலே பதிவுசெய்தார். ஸுனன் அபூதாவூதிலே பதிவு செய்யப்பட்டுள்ள ஹதீஸ்கள் அனைத்தும் ஆதார பூர்வமானவையல்ல. இத்தொகுப்பிலே மூன்று வகையான ஹதீஸ்கள் காணப்படுகின்றன.

I. ஆதாரபூர்வமான ஹதீஸ்கள்
II. ழஈப் ஆன ஹதீஸ்கள்
III. ஸஹீஹ், ழஈப் என தீர்ப்புக் கூறாது மௌனம் சாதித்த ஹதீஸ்கள்

மூன்றாவது வகை ஹதீஸ்களைப் பொறுத்தவரையில் ஆதாரபூர்வமானவையா அல்லது பலவீனமானவையா என்பதில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இமாம் அபூதாவுத் ஆரம்பகால அறிஞர்களது சட்டரீதியான அபிப்பிராயங்களைவிட பலவீனமான ஹதீஸ்களை இணைத்துக் கொண்டது மாத்திரமன்றி அவை பலவீனமானவை எனவும் கூறியுள்ளார்.

### (4) ஜாமிஉத் திர்மிதி

இமாம் திர்மிதி ஹிஜ்ரி 209 இல் திர்மிதீ எனும் பிரதேசத்தில் பிறந்தார். முஹம்மத் பின் ஈஸா என்பது அவரது பெயராகும். ஹிஜ்ரி 235 ஆம் ஆண்டு முதல் ஹதீஸை கற்பதற்காக தூரப்பகுதிகளுக்கு பிரயாணங்களை மேற்கொள்ள ஆரம்பித்தார். இமாம் புஹாரியின் சிந்தனையினால் கவரப்பட்ட இமாம் திர்மிதி, ஹதீஸ் கலையில் கூடுதலான ஈடுபாடு காட்டினார்கள். இமாம்களான புகாரி, முஸ்லிம், குதைபா போன்றோர்களிடம் கற்றார்கள். அல்இலல், ஷமாஇல், அஸ்மஉஸ் ஸஹாபா, அல் ஆஸார் மவ்கூபா, ஜாமிஉத்திர்மிதி போன்ற நூற்களைத் தொகுத்தார். ஹிஜ்ரி 279 இல் திர்மிதாவில் மரணமானார்.

இமாம் திர்மிதி அவர்களால் தொகுக்கப்பட்ட ஹதீஸ் கிரந்தம் வரலாற்றில் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டது. ஸஹீஹுத் திர்மிதி, ஜாமிஉஸ் ஸஹீஹ், கிதாபுல் ஸுனன், ஜாமிஉத் திர்மிதி போன்ற பெயர்களால் அழைக்கப்படும் இமாம் திர்மிதியின் ஹதீஸ் தொகுப்பு ஜாமிஉத்திர்மிதி என்றே வரலாற்றில் பிரபல்யமடைந்தது. மார்க்கத்தின் அனைத்துத் தலைப்புகளையும் தொகுத்துத் தரும் நூலாக அது விளங்குகிறது.

ஜாமிஉத் திர்மிதி மொத்தமாக 3956 ஹதீஸ்களை உள்ளடக்கியுள்ளது. இமாம் திர்மிதி மூன்று நோக்கங்களுக்காக இந்நூலை தொகுத்தார்கள்.

அ. நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களை ஓர் ஒழுங்கு முறையின் கீழ் தொகுத்தல்
ஆ. ஒவ்வொரு விடயம் குறித்தும் ஆரம்பகால இமாம்களின் சட்டரீதியான கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் தொகுத்தல்
இ. ஹதீஸ்களின் தராதரம் குறித்து விளக்கமளித்தல்

இமாம் திர்மிதி தனது தொகுப்பிலே பதிவுசெய்துள்ள ஹதீஸ்களும் அவற்றை பதிவுசெய்வதற்காக பயன்படுத்திய வழிமுறையும் இமாம்களான புஹாரி முஸ்லிம் ஆகிய இருவரின் வழிமுறைகளையும் ஒத்துள்ளது. இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் ஹதீஸ்களை பிக்ஹ் கண்ணோட்டத்தில் பதிவு செய்ய இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் வெறுமனே ஹதீஸ்களை ஹதீஸ்களாக மாத்திரம் பதிவுசெய்தார்கள். இத்தகைய இரு வழிமுறைகளையும் இணைத்து இமாம் திர்மிதி தனது தொகுப்பை உருவாக்கினார்கள்.

### (5) ஸுனன் நஸாஈ

ஆபூ அப்துர் ரஹ்மான் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் இமாம் நஸாஈ(ரஹ்) ஹிஜ்ரி 215 ஆம் ஆண்டு பிறந்தார். அவரது பெயர் அஹ்மத் பின் ஷுஹைப் என்பதாகும். சிறுவயது முதல் குராஸான், ஈராக், சிரியா, எகிப்து, அரேபியா போன்ற பிராந்தியங்களுக்கு ஹதீஸ்கலையை கற்பதற்காக பயணித்தார். ஹதீஸ்கலை மேதைகளான இஸ்ஹாக் பின் ராஹவைஹி, குதைபா பின் ஸஈத்,

அலி இப்னு ஹஜர் போன்ற இமாம்களிடம் ஹதீஸ்களை கற்றார். இமாம் நஸாஈ பல்வேறு ஆக்கங்களை முன்வைத்தார் அவற்றுள் :- ஸுனனுல் குப்ரா - கிதாபுல் தம்யீஸ் - முஸ்னத் அலி - மனாஸிகுல் ஹஜ் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

இமாம் நஸாஈயின் மிகவும் பிரசித்தி பெற்ற ஆக்கமாக விளங்கும் ஸுனனுந் நஸாஈயில் 5760 ஹதீஸ்கள் உள்ளன. ஸுனன் அந்நஸாஈயில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஹதீஸ்களை இமாம் முஹம்மத் பின் மாஹிர் அல் மத்தினி அவர்கள் மூன்றாக வகுத்தார்கள்.

1. ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய நூல்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஹதீஸ்கள்

2. இமாம் புஹாரி இமாம் முஸ்லிம் ஆகியோர் ஸஹீஹான ஹதீஸ்களை இனங்காண வகுத்துக்கொண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்ட ஹதீஸ்கள்

3. இமாம் நஸாஈ வகுத்துக்கொண்ட விதிமுறைகளுக்கு உட்பட்ட ஹதீஸ்கள்; அவற்றில் குறைபாடுகள் இருப்பின் தெளிவு படுத்துவார்.

இமாமவர்கள் ஹதீஸ்களை அறிவிக்கும் அறிவிப்பாளர்கள் குறித்து தீர்வு செய்வதில் மிகவும் கண்டிப்பாக நடந்துகொண்டார்கள். தனது கிரந்தத்தை இமாம் புஹாரியைப் போன்று பிக்ஹ் கண்ணோட்டத்தில் அமைத்தார்கள்.

**(6) ஸுனன் இப்னு மாஜா**

அபூஅப்துல்லாஹ் முஹம்மத் பின் யஸீத் ஹிஜ்ரி 209 இல் பிறந்தார். அவர் இப்னு மாஜா என வரலாற்றில் பிரபல்யமடைந்தார். தன்னுடைய 20 ஆவது வயதில் ஹதீஸ்களை கற்பதற்காக குராஸான், ஈராக், சிரியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டார்கள். ஹிஜ்ரி 273 இல் மரணமானார்.

ஸுனன் இப்னு மாஜா எனும் நூல் இமாம் அவர்களது மிகவும் பிரபல்யமான ஆக்கமாகும். இத்தொகுப்பு 4341 ஹதீஸ்களைக் கொண்டுள்ளது. இவற்றில் 3002 ஹதீஸ்களை ஏனைய ஐந்து ஸஹீஹான தொகுப்புகளிலும் காணலாம். இமாம் இப்னுமாஜா மாத்திரம் பதிவுசெய்த 1339 ஹதீஸ்கள் இக்கிரந்தத்தில் காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட ஆறு நூற்களும் ஸிஹாஹுஸ் ஸித்தா என அழைக்கப்படும் ஆறு ஆதாரபூர்வமான ஹதீஸ் கிரந்தங்களுள் அடங்கும்.

# இஜ்திஹாத்

இஜ்திஹாத் எனும் பதம் மொழி ரீதியில் கடும் முயற்சி செய்தல், கஷ்டத்தை தாங்கிக்கொள்ளுதல் போன்ற கருத்துக்களை தருகின்றது. குறித்ததொரு விடயத்தில் முழு முயற்சியையும் பிரயோகித்து ஈடுபடுவதை இது குறிக்கும். குர்ஆனோ, ஸுன்னாவோ நேரடியாகத் தீர்வு கூறாத ஒரு பிரச்சினைக்கு ஒரு சட்ட அறிஞன் ஷரீஆவின் துணைகொண்டு விடைகாண மேற்கொள்ளும் கடும் முயற்சியையே இஸ்லாமிய வழக்கில் இஜ்திஹாத் என்பர்.

## இஜ்திஹாதுக்கான ஆதாரம்

இஸ்லாமிய ஷரீஆவின் கண்ணோட்டத்தில் குறித்ததொரு செயல் சார்ந்த பிரச்சினைக்குத் தீர்வு காண மேற்கொள்ளப்படும் இஜ்திஹாத் முயற்சியை இஸ்லாம் அனுமதித்துள்ளது. குர்ஆன், ஸுன்னா, இஜ்மா என்பன இஜ்திஹாத்தின் சட்டபூர்வத் தன்மையை உறுதிசெய்கின்றன.

(1) "அதனை (அல்லாஹ்வுடைய) தூதரிடமும் அவர்களில் (மார்க்க ஞானமுள்ள) உலுல் அம்ர்களிடமும் தெரிவித்திருந்தால், அவர்களுள் அதனை ஆய்ந்து எடுப்பவர்கள் அதனை (நன்கு) அறிந்து கொள்வார்கள்." (4 : 83)

இங்கு அல்குர்ஆன் "உலுல் அம்ர்", "அல்இஸ்தின்பாத்" ஆகிய சொற்களைப் பயன்படுத்தியுள்ளது. விடயங்களை நன்கறிந்தவர்கள் 'இஸ்தின்பாத்' அடிப்படையில் அதாவது, ஆழமாக நோக்கி பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெற்றுக் கொள்வார்கள் என்பதை இங்கு அல்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது.

மு.்.மின்களின் சிறந்த பண்புகளில் ஒன்றாக அவர்கள் எந்த விடயத்தையும் தங்களுக்கு மத்தியில் கலந்துரையாடி ஷூரா அடிப்படையில் தீர்த்துக்கொள்வதாக ஸூரதுஷ் ஷூராவிலே அல்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது. அவர்களுடைய 'ஒவ்வொரு காரியத்தையும் தங்களுக்குள் கலந்தாலோசிப்பார்கள்.' (42 : 38)

இங்கு ஷூரா என்பது சரியானதை கண்டுகொள்வதற்கான கூட்டு முயற்சி யாகும். ஷரீஆவின் ஆதாரங்களினடிப்படையில் தீர்வுகளை பெற்றுக்கொள்வதற்கான கூட்டு முயற்சியாக அமையும் ஷூரா மிகவும் தகுதிவாய்ந்தவர்களின் பங்களிப்போடு இடம்பெறல் வேண்டும்.

(2) நபி(ஸல்) அவர்களது ஹதீஸ்களும் இஜ்திஹாதுக்கான சிறந்த ஆதாரங்களாக விளங்குகின்றன.

நபி(ஸல்) அவர்கள் :- ''சட்ட தீர்ப்பு வழங்குபவர் இஜ்திஹாத் செய்து சரியான தீர்ப்பை அடைந்து கொண்டால் அவருக்கு இரண்டுக் கூலிகளுண்டு. அவரது இஜ்திஹாத் தவறானதாக அமைந்தால் அவருக்கு ஒரு கூலி உண்டு" என்றார்கள். (புஹாரி, முஸ்லிம்)

கூலியைப் பெற்றுத் தரும் உயர்ந்த செயலாக இஜ்திஹாத் உள்ளது என்பதை மேலுள்ள நபிமொழி மூலம் அறிய முடிகிறது. முஆத் பின் ஜபல்(றழி) அவர்கள் யமன் தேசத்துக்கு கவர்னராக அனுப்பிவைக்கப்பட்ட போது நபி(ஸல்) அவர்கள் முஆதிடம் "அல்குர்ஆனிலும் ஸுன்னாவிலும் நீங்கள் தீர்வுகளை கண்டு கொள்ளாவிட்டால் என்ன செய்வீர்கள்" எனக் கேட்டதற்கு 'நான் இஜ்திஹாத் செய்வேன்' என்று கூறினார்கள். இதனை அங்கீகரித்த நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்:- "அல்லாஹ்வையும், அவனது தூதரையும் திருப்திப்படுத்தும் வகையில் இறைத்தூதரின் தூதருக்கு கிருபை செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்" என்றார்கள்.

இந்தவகையில், சமூகத்திலே தோன்றும் சகல பிரச்சினைகளுக்கும் இஸ்லாமிய மூலாதாரங்களின் ஒளியில் தகுதிவாய்ந்தவர்கள் மேற்கொள்ளும் இஜ்திஹாத் முயற்சியை இஸ்லாமிய ஷரீஅத் அனுமதித்துள்ளதோடு தூண்டியுமுள்ளது.

**முஜ்தஹிதின் படித்தரங்கள்**

இஜ்திஹாத் முயற்சியில் ஈடுபடுபவர் 'முஜ்தஹித்' என அழைக்கப்படுகிறார். முஜ்தஹித்கள் ஒவ்வொருவரினதும் தகைமைக்கு ஏற்ப பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளனர்.

**(1) முஜ்தஹித் முத்லக்**

இஸ்லாமிய ஷரீஆவின் மூலாதாரங்களை அணுகி தீர்வு காண முயற்சிப்பவராக முஜ்தஹித் முத்லக் இருப்பார். இவ்வகை முஜ்தஹித்கள் இரண்டு வகைப்படுவர் :-

### (அ) முஜ்தஹித் முத்லக் முஸ்தகில்

இத்தகைய முஜ்தஹிதுக்கு பின்வரும் மூன்று சிறப்பு பண்புகள் இருக்கும் :-

- ஷரீஆவின் மூலாதாரங்களை சுயமாக அணுகி இஜ்திஹாத் முயற்சிகளை மேற்கொள்வார்.
- ஏற்கனவே பெறப்பட்ட தீர்ப்புக்களை ஆராய்ந்து, உற்று நோக்கி அவற்றில் மிகவும் பலமான கருத்துக்களை தேர்ந்தெடுப்பார்.
- புதிய பிரச்சினைகளுக்கு ஆதாரங்களின் ஒளியில் தீர்வுகளை முன்வைப்பார்.

### (ஆ) முஜ்தஹித் முத்லக் முன்தஸிப்

தன்னுடைய இமாமின் மூலாதாரங்களை அறிந்து, அந்த இமாம் முன்வைத்த கருத்துக்களை துணையாகக் கொண்டு ஆதாரங்களின் அடிப்படையில் தீர்வுகளை முன்வைப்பார்.

### (2) முஜ்தஹித் பில் மத்ஹப்

"முஜ்தஹித் முத்லக்" ஐ விடவும் படித்தரத்தில் குறைந்தவராக இருக்கும் முஜ்தஹித் பில் மத்ஹப் குறிப்பிட்ட ஒரு மத்ஹப் சார்ந்து இஜ்திஹாத் மேற்கொள்பவராக இருப்பார். இவர் தனது இமாமை முழுமையாக பின்பற்றும் அதேவேளை தன்னுடைய இமாம் சட்டத்தீர்ப்புக்களை பெறுவதற்காக வகுத்துக் கொண்ட சட்டவிதிகளையும் அடிப்படைகளையும் அறிந்து வைத்திருப்பார். எனவே, புதியதொரு பிரச்சினை தோன்றி, அதற்கான தீர்ப்பை தன்னுடைய இமாமிடத்திலே காணாத போது மத்ஹபின் சட்டவிதிகளின் அடிப்படைகளுக்குள் நின்று தீர்வு காண முயல்வார்.

### (3) முஜ்தஹிதுல் பத்வா

இவர் முஜ்தஹித் பில் மத்ஹபை விட ஒரு படி குறைந்தவராக இருப்பார். தன்னுடைய இமாமின் மத்ஹபை ஆழமாகக் கற்று அதற்குள்ளால் காணப்படும் பல்வேறு தீர்ப்புகளுக்கு மத்தியில் ஒன்றை பலமானதாக மாற்றும் முயற்சியில் ஈடுபடுவார்.

பொதுவாக இஜ்திஹாத் எனும்போது முஜ்தஹித் முத்லகின் முயற்சியைத் தான் அது குறிக்கிறது. இஜ்திஹாத்தின் படித்தரங்களில் உயர்ந்த தரத்தில் நோக்கப்படுபவர் முஜ்தஹித் முத்லக் ஆவார். இந்தவகையில், ஸஹாபாக்கள், தாபிஊன்களில் காணப்பட்ட சட்டத்துறை அறிஞர்கள், நான்கு இமாம்களும் ஸைத் பின் அலி, ஜ.்.பர் ஸாதிக், அல்அவ்ஸாஈ, அத்தபரி போன்ற இமாம்களும் முஜ்தஹித் முத்லக் முஸ்தகில் எனும் வட்டத்தில் அடங்குவர்.

'முஜ்தஹித் முத்லக் முன்தஸிப்' என்பதில் ஹனபி மத்ஹபைச் சேர்ந்த அபூயூஸுப், முஹம்மத், ஸுபர், மாலிக் மத்ஹபைச் சேர்ந்த இப்னுல் காஸிம், ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்த அல்முஸ்னி, அல்புவைதி மற்றும் ஹன்பலி மத்ஹபைச் சேர்ந்த ஹல்லால் போன்றோரைக் குறிப்பிடலாம்.

## இஜ்திஹாதின் வகைகள்

எல்லாக் காலங்களிலும் இஜ்திஹாத் செய்வது முஸ்லிம் சமூகத்தின் மீதுள்ள கட்டாயக் கடமையாகும். ஒவ்வொரு காலத்திலும் உருவாகும் ஷரீஅத் சார்ந்த புதிய பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய ஷரீஆவிலே புலமைபெற்றோர் முன்னின்று இஜ்திஹாத் செய்து தீர்வுகளை முன்வைக்க வேண்டியுள்ளது. இஜ்திஹாதுகள் மேலும் இரு வகையில் பிரித்து நோக்கப்படும் :-

- இஜ்திஹாத் இன்திகாஈ
- இஜ்திஹாத் இன்ஷாஈ

## இஜ்திஹாத் இன்திகாஈ

குறித்த ஒரு பிரச்சினைக்கு பாரம்பரிய பிக்ஹ் புத்தகங்களில் உள்ள பல்வேறுபட்ட தீர்வுகளில் ஒரு தீர்வை தெரிவு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் இஜ்திஹாதை இது குறிக்கிறது. புதிதாக ஆய்வு முயற்சிகளில் ஈடுபடாது குறித்த பிரச்சினைக்கு முன்னைய சட்டத்துறை அறிஞர்கள் வழங்கிய பல்வேறுபட்ட தீர்ப்புக்களையும், அவற்றின் ஆதாரங்களையும் ஆய்வு செய்து அவற்றிலிருந்து மிகவும் பொருத்தமான, பலமான கருத்தொன்றைத் தெரிவு செய்வதே (தர்ஜீஹ்) இஜ்திஹாத் இன்திகாஈ ஆகும். இது தர்ஜீஹ் எனவும் வழங்கப்படும்.

## இஜ்திஹாத் இன்ஷாஈ

குறித்த ஒரு பிரச்சினைக்கு முன்னோர் எவரும் தீர்வுகளை முன்வைக்காத போது அதற்கு தீர்வு பெறுவதற்கான இஜ்திஹாதையே இது குறிக்கிறது. குறித்த பிரச்சினை மிகவும் பழையதாகவோ அல்லது நவீனமானதாகவே இருந்தாலும் அது தொடர்பான எத்தகைய தீர்வுகளும் முன்வைக்கப்படாதிருந்தால் அப்பிரச்சினைக்கு தீர்வுகான முயலும் புதிய முயற்சியாக இஜ்திஹாத் இன்ஷாஈ இருக்கும்.

தற்காலத்தைப் பொறுத்தவரை மேற்குறிப்பிட்ட இருவகை இஜ்திஹாதுகளும் தேவைப்படுகின்றன. பழைய இஜ்திஹாத் தீர்ப்புகளையும் அவை பெறப்பட்ட வழிமுறைகளையும் கவனத்திற் கொண்டு புதிய இஜ்திஹாத்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## முஜ்தஹிதுகளின் பங்களிப்புக்கள்

இஸ்லாம் அதன் நீண்ட வரலாற்றில் எதிர்கொண்டு வந்த அனைத்து வகையான சவால்களையும் ஜிஹாத், இஜ்திஹாதுக்கூடாக எதிர்கொண்டு வந்துள்ளது. முஸ்லிம் சமூகம் வரலாற்று நெடுகிலும் முகம்கொடுத்த பல்வேறு சிந்தனா ரீதியான சிக்கல்களும், சட்டரீதியான சவால்களும் முஜ்தஹிதுகளது வளமான பங்களிப்புகளுக்கூடாக தீர்க்கப்பட்டன. இஸ்லாமிய சிந்தனை வளர்ச்சியில் முஜ்தஹிதுகளுக்கு தனியான இடமுண்டு. இஸ்லாமிய சட்டக்கலை வரலாறு அல்லது இஸ்லாமிய சட்டவாக்க வரலாற்றை நோக்கும்போது முஜ்தஹிதுகள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் தங்களது பெறுமதியான பங்களிப்புக்களை வழங்கி வந்திருப்பதை அறிய முடிகிறது.

குர்ஆனும், ஸுன்னாவும் இஜ்திஹாதின் அவசியத்தை வலியுறுத்தியதால் நபி (ஸல்) அவர்களது காலம் முதலே இஜ்திஹாத் பணி இடம்பெறலாயிற்று. நபித்தோழர்கள் பல பிராந்தியங்களுக்கு சன்மார்க்கப் பணியாற்றுவதற்காக இறைதூதரினால் அனுப்பிவைக்கப்பட்ட போது குர்ஆன், ஸுன்னாவை அடிப்படையாகக்கொண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குமாறும், அவற்றில் தீர்வை பெற்றுக்கொள்ளாதபோது இஜ்திஹாத் செய்யுமாறும் வழிகாட்டப்பட்டார்கள். இந்தவகையில் யெமன் தேசத்துக்கு பிரசாரகராக அனுப்பிவைக்கப்பட்ட முஆத் பின் ஜபல்(றழி) அவர்கள் இஜ்திஹாத் செய்து தீர்வுசொல்வேன்" என்று குறிப்பிட்டபோது நபி(ஸல்) அவர்கள் அத்தோழரை வாழ்த்தியதை வரலாற்றில் காணமுடிகிறது.

நபி(ஸல்) அவர்களது காலம் முதல் ஆரம்பிக்கப்பட்ட இஜ்திஹாத், ஸஹாபாக்கள், இமாம்கள், சீர்திருத்தவாதிகளது சிந்தனா ஆற்றலினதும், தியாக முயற்சியினதும் விளைவாக பாரிய வளர்ச்சி கண்டது. இஸ்லாமிய சட்டவாக்க வரலாற்றில் முஜ்தஹித்களின் பங்களிப்பு மிகவும் விரிந்தளவில் காணப்படுகிறது.

- அல்குர்ஆன், அஸ்ஸுன்னா போன்ற அடிப்படையான சட்டமூலாதாரங்களை விளங்குவதற்கும், அவற்றிலிருந்து சட்டங்களை பெறுவதற்குமான அடிப்படைகளை வகுத்து இஜ்திஹாதின் வளர்ச்சிக்கு முஜ்தஹிதுகள் பங்களிப்புச் செய்தார்கள்.

காலமாற்றத்துக்கும், சமூகமாற்றத்துக்கும் ஏற்ப தோன்றும் பல்வேறு பிரச்சினைகளுக்கு புதிய அணுகுமுறைகளையும் துணை மூலாதாரங்களையும் வகுத்து இஸ்லாமிய சட்டக்கலைப் பாரம்பரியத்தின் விரிந்த வளர்ச்சிக்கு அவர்கள் சிறந்த தொண்டாற்றினார்கள்.

பல்வேறுபட்ட இஸ்லாமிய சட்டமரபுகளை (மத்ஹபுகளை) ஸ்தாபித்து அவற்றினூடாக இஸ்லாமிய சட்டக்கலையின் வளர்ச்சிக்கு முஜ்தஹிதுகள் பங்காற்றினார்கள்.

இஸ்லாமிய சட்டத்துறையில் ஏற்படும் சட்டப்பிரச்சினைகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல்வேறு தீர்ப்புக்களை முன்வைத்து பல தெரிவுகளுக்கு வழிவகுத்துள்ளார்கள். இஸ்லாமிய ஷரீஆவின் நெகிழ்வுத் தன்மைக்கும், விசாலத்தன்மைக்கும் முஜ்தஹிதுகளின் இவ்வாறான முயற்சிகள் போதிய சான்றாகவுள்ளன.

ஆழமான ஆய்வுகள், வித்தியாசமான அணுகுமுறைகள், சட்டமரபுகளை தழுவிய நூல்கள், முதலானவை முஜ்தஹிதுகளால் முன்வைக்கப்பட்டமையால் அவை இஸ்லாமிய நூலகங்களை வளம் மிக்கதாக மாற்றியுள்ளன.

நவீனகாலத்தில் தோன்றும் சட்டப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளையோ தீர்வுகளை பெறுவதற்கான அடிப்படைகளையோ ஆரம்பகால முஜ்தஹிதுகள் முன்வைத்தமை நவீனகால முஜ்தஹிதுகளது இஜ்திஹாத் முயற்சிகளுக்கு பெரிதும் துணையாகியது.

இவ்வாறு முஜ்தஹித்களின் பங்களிப்புகளை பொதுவாகவும், சுருக்கமாகவும் அடையாளப்படுத்தலாம். இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய முஜ்தஹிதுகளை ஒவ்வொருவராக இனங்கண்டு அவர்களது பணிகளை வரையறை செய்வது மிகவும் சிரமமானதாகும். பொதுவாக அனைத்து முஜ்தஹிதுகளதும் பங்களிப்புகளை மேற்குறிப்பிட்டவாறு அடையாளப்படுத்தலாம்.

# இஜ்மா

இஸ்லாமிய ஷரீஆவின் மூலாதாரங்களில் அல்குர்ஆனும், ஸுன்னாவும் மிகப் பிரதான இடத்தை வகிக்கின்றன. இவ்விரண்டும் வஹியின் அடிப்படையில் அமைந்திருப்பதே அதற்குக் காரணமாகும். இஸ்லாமிய வரலாற்றில் இவ்விரண்டு மூலாதாரங்களோடு இஜ்திஹாதின் அடிப்படையில் உருவாகிய துணை மூலாதாரங்களும் தோன்றி வளர்ச்சி பெற்றுள்ளன. இவ்வரிசையில் தோன்றிய மிக முக்கியமான ஒரு துணை மூலாதாரமே இஜ்மாவாகும். இம்மூலாதாரம் குர்ஆனையும் ஹதீஸையும் போன்று நேரடியாக வஹியுடன் தொடர்புடா விட்டாலும் அவ்விரண்டு மூலாதாரங்களினதும் நிழலில் பகுத்தறிவைப் பிரயோகித்து உருவாக்கப்பட்டதாகும்.

'இஜ்மா' எனும் அறபுப் பதம் 'அஜ்மஅ' எனும் அறபுச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். அது, ஒன்று சேர்த்தல், உறுதி கொள்ளுதல், ஒத்த கருத்துக் கொள்ளல், ஏகோபித்த கருத்துக் கொள்ளல் போன்ற கருத்துகளிலேயே பிரயோகிக் கப்பட்டுள்ளது. இஸ்லாமிய ஷரீஅத்தின்படி நபி(ஸல்) அவர்களின் வபாத்தின் பின் ஏதாவதொரு காலத்தில் தோன்றிய பிரச்சினைக்கான தீர்வு குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ தெளிவாகக் காணப்படாத போது அப்பிரச்சினைக்கான தீர்வைப் பெறுவதற்கு அக்காலத்தில் வாழும் முஜ்தஹிதுகள் அனைவரும் ஒன்று கூடி இஜ்திஹாத் செய்வதன் மூலம் ஏகோபித்த ஒரு கருத்துக்கு வருவதே இஜ்மா ஆகும்.

## இஜ்மா சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்கள்

ஒரு முஸ்லிம் எந்தவொரு காரியத்தை மேற்கொள்வதாயினும் அது ஷரீஅத்தில் அங்கீகரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இந்தவகையில் இஜ்மாவின் அடிப்படையில் தீர்ப்புக்கள் பெறுவதற்கு ஷரீத்தில் அங்கீகாரம் இருக்கின்றதா என்பதை அறிவது அவசியமாகும். பொதுவாக இஜ்மா சட்டமூலாதாரம் என்பதற்கான அங்கீகாரத்தைப் பெற்றது என்பதற்கு அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆதாரங்கள் உள்ளன.

**அல்குர்ஆன் ஆதாரங்கள்**

- "மேலும் நேரான வழி இதுதான் என்று தனக்குத் தெளிவானதன் பின்னர் எவர் (நம்முடைய) இத்தூதருக்கு மாறுசெய்து, **விசுவாசிகளின் வழியல்லாத** (வேறு வழியான) தைப் பின்பற்றுகிறாரோ அவரை நாம் அவர் திரும்பிய தவறான வழியிலேயே திருப்பி விடுவோம். (பின்னர்) அவரை நரகத்தில் புகுத்தி விடுவோம். அது சென்றடையு மிடத்தில் மிகக் கெட்டது." (4 : 115)
- "மக்கள் மீது சாட்சி கூறுவோராகவும், நீதியை ஏற்படுத்துவோராகவும் இருக்கும் பொருட்டு உங்களை நாம் **நடுநிலையான சமூகமாக** அமைத்துள்ளோம்." (2:143)
- "நீங்கள் அல்லாஹ்வுக்கு வழிப்படுங்கள், அவ்வாறே அவனது தூதருக்கும் வழிப்படுங்கள். இன்னும் உங்களில் (அல்லாஹ் விற்கும், ரஸூலுக்கும் கட்டுப்படுகின்ற) பொறுப்பாளர்களுக்கும் கட்டுப்படுங்கள்." (4:59)
- "மேலும் (யுத்த) அமைதி அல்லது பீதி பற்றிய யாதொரு செய்தி அவர்களுக்கு வந்துவிட்டால் (உடனே) அவர்கள் அதனை (வெளியில் மக்களிடையே) பரப்பி விடுகின்றனர். (அவ்வாறு செய்யாது) அதனை (அல்லாஹ்வுடைய தூதரிடமும்), அவர்களில் (மார்க்க ஞானமுள்ள) **அதிகாரமுடையவர்களிடமும் தெரிவித்திருந்தால், அவர்களி லிருந்து அதனை ஆய்ந்து எடுப்பவர்கள்** அதனை (நன்கு) அறிந்து கொள்வார்கள். மேலும், (விசுவாசிகளே) அல்லாஹ்வுடைய பேரருளும் அவனுடைய கிருபையும் உங்கள் மீது இல்லாதிருந்தால் (உங்களில்) குறைவானவர்களைத் தவிர நீங்கள் யாவரும் ஷைத்தானையே பின்பற்றியிருப்பீர்கள்." (4:83)

முதலில் குறிப்பிடப்பட்ட இறைவசனத்தில் இறை நம்பிக்கையாளர்களின் கருத்துகளுக்கு கட்டுப்படுவது மார்க்கக் கடமை என்பதும், அதற்கு முரண்படுவது தண்டனைக்குரியது என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது. இரண்டாவது வசனத்தில் மக்கள் மீது நீதி செலுத்த நேர்மை மிக்க நம்பிக்கையாளர்கள் இருப்பதைக் குறிப்பிட்டு அதன் மூலம் அவர்களது சட்ட முடிவுகளை பின்பற்ற வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. மூன்றாவது வசனத்தில் 'உலுல் அம்ர்' எனும் முஸ்லிம் சமூகத்தின் அறிஞர்களுக்கு அல்லது முஜ்தஹிதுகளுக்கு அல்லது தலைவர்களுக்கு வழிப்படும்படி கட்டளையிடப்பட்டுள்ளது. நான்காவது வசனத்தில் பிரச்சினைகளின் போது அறிஞர்கள், பொறுப்பாளர்களை நாடி அவற்றைத்

தீர்த்துக் கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது. ஆகவே, இஜ்மாஉவின் அடிப்படையில் அறிஞர்கள் வழங்கும் ஏகோபித்த முடிவுகள் பிழையாக இருக்க முடியாது என்பதை இப்போதனைகள் உறுதிப்படுத்துகின்றன.

### ஸுன்னாவின் ஆதாரங்கள்

- "எனது சமூகத்தினர் தவறான விடயங்களில் ஒன்றுபடமாட்டார்கள்"
- "சத்தியத்தில் நிலைத்திருக்கக் கூடிய ஒரு கூட்டம் எனது சமூகத்தில் என்றென்றும் இருந்து வருவார்கள்."
- "எவர் ஜமாஅத்தை விட்டும் பிரிந்து மரணிக்கின்றாரோ அவரது மரணம் (ஜாஹிலிய்யத்தை) மடமையைச் சேர்ந்ததாகும்."
- "முஸ்லிம்கள் நல்லதாகக் கருதுபவை அல்லாஹ்விடமும் நல்லதாகவே இருக்கும். அவ்வாறே அவர்கள் தீயதாக கருதுபவை அல்லாஹ்விடமும் தீயதாகவே இருக்கும்."
- "யார் சுவர்க்கத்தின் இன்பங்களைச் சுவைக்க விரும்புகிறாரோ அவர் சமூகத்தோடு இணைந்திருக்கட்டும்."

மேற்படி ஹதீஸ்களில் முஸ்லிம் சமூகம் சத்தியத்தில் ஒன்றுபடும் என்ற கருத்தும், அதேநேரத்தில் உண்மைக்கு முரணானவற்றில் முஸ்லிம் சமூகம் ஒன்றுபடமாட்டாது என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இஜ்மாவின் முடிவுகளுக்கு முஸ்லிம்கள் கட்டுப்படக் கடமைப்படு கின்றார்கள்.

மனிதனின் சீரிய பகுத்தறிவு இஜ்மாவின் அவசியத்தை ஏற்றுக் கொள்கின்றது. சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு குர்ஆனிலோ ஸுன்னாவிலோ தெளிவான ஆதாரங்கள் காணப்படாதபோது ஸஹாபாக்களும் இஜ்மா மூலமே தீர்வு பெற்றனர். எனவே, இஸ்லாத்தின் உயிரோட்டமும், நடைமுறைச் சாத்தியமும் விளக்கப்படுவதற்கு இஜ்மா இன்றியமையாததாகும். ஏனெனில், குறிப்பிட்ட தொரு பிரச்சினையில் முஜ்தஹித்கள் யாவரும் ஏகோபித்து, எவ்வித கருத்து முரண்பாடுமின்றி ஒரு முடிவிற்கு வருவார்களாயின் அது இஸ்லாமிய எல்லைக்கு வெளியே செல்லாது. ஆகவே, பகுத்தறிவு ரீதியாக நோக்குகின்றபோதும் இஜ்மா அவசியமாகும். அதனடிப்படையில் பெறப்படுகின்ற தீர்மானங்களுக்கு முஸ்லிம் சமூகத்தினர் கட்டுப்பட வேண்டும் என்பதும் தெளிவாகின்றது.

## இஜ்மாவிற்கான நியதிகள்

இஸ்லாமிய வட்டத்தினுள் உருவாகின்ற ஒரு பிரச்சினையின் போது முஜ்தஹிதுகள் ஒன்று சேர்ந்து இஜ்மாவின் அடிப்படையில் ஒரு முடிவுக்கு வருவதாக இருந்தால் பின்வரும் நிபந்தனைகள் அதில் பேணப்பட வேண்டும்.

1. இஜ்மாஉ செய்யப்படுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட முஜ்தஹிதுகள் இருக்க வேண்டும்.

2. இஜ்திஹாதில் சம்பந்தப்படும் அனைவரும் ஏகோபித்த முடிவைப் பெறுதல் வேண்டும். பிரதேச, நிற, மொழி வேறுபாடுகளைக் கவனத்திற் கொள்ளாது அனைவரும் ஒருமித்த கருத்துக்கு வரவேண்டும்.

3. முஜ்தஹிதுகள் தமது முடிவை வார்த்தைகளால் அல்லது செயலினால் புலப்படுத்த வேண்டும். பெரும்பான்மையோரின் முடிவுகள் இஜ்மாவாகக் கொள்ளப்பட முடியும் என சில சட்ட அறிஞர்கள் கருத்துத் தெரிவித் துள்ளார்கள்.

மேற்குறித்த நியதிகளுக்குட்பட்ட வகையில் பெறப்பட்ட இஜ்மாவான முடிவுகளைப் பின்பற்றுவது முஸ்லிம் சமூகத்தின் கடமையாகும். அம்முடிவுகளை எடுத்த முஜ்தஹிதுகளின் வபாத்திற்குப் பின்னர்தான் அவை பின்பற்றப்பட வேண்டும் என்ற நியதி கிடையாது. ஏனெனில், குர்ஆன், ஹதீஸ் நிழலிலேயே இஜ்மாஉ மேற்கொள்ளப்பட்டுகிறது. ஸஹாபாக்களின் இஜ்மா அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதைக் கண்டுகொள்ள முடிகின்றது. சம்பந்தப்பட்ட முஜ்தஹிதுகள் மரணித்த பின்புதான் பின்பற்ற வேண்டும் என்ற நியதி இருப்பின் மறுமை நிகழும் வரை இஜ்மா முடிவுகளை நடைமுறைப் படுத்துவது சாத்தியமற்றதாகிவிடும்.

## இஜ்மாவின் வகைகள்

இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் இஜ்மாவை பல வகைகளாகப் பிரிக்கின்றனர். அவை ஒவ்வொன்றும் ஆதாரபூர்வத் தன்மையில் பல படித்தரங்களைக் கொண்டிருக்கின்றன. இஜ்மா ஸரீஹ், இஜ்மா ஸுகூத்தி, இஜ்மா முரக்கப், இஜ்மா அக்ஸரிய்யா என்பவற்றை இவற்றுக்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

### அ) இஜ்மா ஸரீஹ்

சமகாலத்தில் வாழுகின்ற முஜ்தஹிதுகள் ஒவ்வொருவரும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சட்டப் பிரச்சினை தொடர்பாகத் தமது கருத்தையும் நிலைப்பாட்டையும் தெளிவாக முன்வைப்பதன் மூலம் ஏகோபித்த முடிவொன்றுக்கு வருவதையே 'இஜ்மா ஸரீஹ்' என்று அறிஞர்கள் கூறுவர். 'இஜ்மாஉ ஸரீஹ்' என்பது 'தெளிவான இஜ்மா' என்ற கருத்தைத் தரும். இத்தகைய இஜ்மாவை திட்டவட்டமானதாக, சந்தேகத்திற் கிடமற்றதாக, ஆதாரபூர்வமானதாக, சட்ட அறிஞர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இதற்கு உதாரணமாக நபி(ஸல்) அவர்களது வபாத்தின் பின்னர் இஸ்லாமிய அரசின் தலைவராக அபூபக்ர் (ரழி) அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதைக் குறிப்பிடலாம். மற்றோர் உதாரணமாக உமர்(ரழி) அவர்களது ஆட்சியில் கால் நடைகளில் குதிரைக்கும் ஸகாத் வாஜிபாகும் என தீர்மானிக்கப்பட்ட இஜ்மாவைக் குறிப்பிடலாம்.

### ஆ) இஜ்மா ஸுகூதி

ஏதேனுமொரு சட்டப் பிரச்சினை தொடர்பாக முஜ்தஹிதுகளில் ஒருவரோ பலரோ ஒரு கருத்தை தெரிவித்து அக்கருத்து பிரபல்யமடைந்த நிலையில் ஏனைய முஜ்தஹிதுகள் அது தொடர்பாக சார்பாகவோ, எதிராகவோ எக்கருத்தையும் தெரிவிக்காது மௌனமாக இருந்தால் அதனை 'இஜ்மா ஸுகூதி' - மௌன நிலையில் பெறப்பட்ட இஜ்மாஉ என அறிஞர்கள் அடையாளப்படுத்துவர். 'இஜ்மா ஸுகூதியை' இஜ்மா என கொள்ளலாமா என்பது குறித்து மூன்று விதமான கருத்துக்கள் நிலவுகின்றன.

1. அதனை இஜ்மாவாகக் கொள்ள முடியாது.
2. முதற்தர பலமான இஜ்மாவாக அல்லாமல் அதற்கடுத்த தரத்தில் வைத்து கணிக்கலாம்.
3. இஜ்மா ஆக அல்லாமல் ஆதாரபூர்வமான ஒரு கருத்தாக கொள்ளலாம்.

இமாம் ஷாபிஈ(ரஹ்) அவர்களும், ஹனபி மத்ஹபைச் சார்ந்த சில அறிஞர்களும் பெரும்பாலான சட்டத்துறை அறிஞர்களும் மேற்படி இஜ்மாவை கருத்திற் கொள்வதில்லை. மௌனமாக இருப்பவரின் கருத்தையோ, நிலைப்பாட்டையோ தெளிவாக அறிய முடிவதில்லை. இந்நிலையில், முஜ்தஹிதுகளின் மௌனம் அவர்களது அங்கீகாரத்தையே காட்டும் என்று கூறுவது முறையல்ல, அம்முஜ்தஹிதுகள் கூறாத கருத்துக்களுக்கு அவர்கள் பொறுப்பாளிகளாக மாட்டார்கள்.

மேற்படி இஜ்மாவை ஏற்றுக்கொள்வோர் "முஜ்தஹிதுகள் தமது உடன்பாட்டை தெளிவான வார்த்தைப் பிரயோகங்களில் முன்வைக்க வேண்டும்" என்ற நியதியை முன்வைக்கின்றனர். தமது கருத்தை உறுதிப்படுத்த, பின்வரும் நியாயத்தை

முன்வைக்கின்றனர். சட்டப் பிரச்சினையின்போது சட்டத்துறையில் அறிவுடையோர் சிலர் தீர்வை முன்வைக்க, ஏனையோர் அதனை அங்கீகரிக்கும் நடைமுறையே பொது வழக்காகும். ஏனையோர் ஒரு கருத்தை முன்வைக்கும் போது முஜ்தஹிதுகள் மாற்றுக் கருத்துக் கூறாமல் இருப்பது அதனை அவர்கள் அங்கீகரிப்பதையே குறிக்கும். ஏனெனில், சட்டத்தை விளக்குவது அவர்களது பணியாகும். கால அவகாசம் கொடுத்தும் கூட ஒரு தீர்மானத்திற்கு முஜ்தஹித் ஒருவர் எதிர்க் கருத்து கொண்டு அதனைத் தெரிவிக்காமலிருப்பது பாவமானதாகும் எனும் கருத்துக்களுக்கமைய 'இஜ்மா ஸுகூதி' சட்ட அங்கீகாரம் பெற முடியுமென்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட இரு சாராரது நியாயங்களையும் எடுத்து நோக்கும்போது இவ்வகை இஜ்மாவை 'இஜ்மா ஸரீஹ்'இன் தரத்தில் வைத்து ஏற்றுக் கொள்ள முடியாது என்பது புலனாகின்றது. முழுமையாக அதனை மறுத்து விடுவதும் பொருத்தமானதல்ல. மாற்றமாக, 'இஜ்மா ஸுகூதி'யைப் பலமான கருத்தொன்றாகக் கொள்வதே சரியானதாகும். அநேக இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் இக்கருத்தையே கொள்கின்றனர்.

### இ) இஜ்மா முரக்கப்

குறிப்பிட்டதொரு விடயத்தில் ஒரு காலப் பிரிவின் சட்ட அறிஞர்கள் குறிப்பிட்ட சில கருத்துக்களைக் கொண்டுள்ளனர். இவ்வனைத்துக் கருத்துக்களுக்கும் மாற்றமாக ஒருவர் புதிதாக ஒரு கருத்தை வெளியிடக் கூடாது என்பர். இதற்கு உதாரணமாகப் பின்வரும் இஜ்மா முடிவைக் குறிப்பிடலாம்.

ஸஹாபாக்களில் இருந்த சட்ட அறிஞர்கள், இறந்த ஒருவரின் சகோதரர்களோடு அவரது தந்தையின் தந்தையும் வாரிசுரிமை பெறுவர் என்ற விடயத்தில் கீழ்வரும் மூன்று கருத்துக்களைக் கொண்டனர் :-

1. தந்தையின் தந்தைக்கு 1/3 இற்குக் குறையாத ஒரு பகுதி கிடைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் சகோதரர்களோடு வாரிசுரிமையில் அவர் பங்கு பெறுவார்.
2. தந்தையின் தந்தைக்கு 1/6 இற்குக் குறையாத அளவு கிடைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் சகோதரர்களுடன் வாரிசுரிமையில் பங்கு பெறுவார்.
3. தந்தையின் தந்தை இருக்கும் போது சகோதரர்கள் வாரிசுரிமையில் எப்பங்கும் பெறமாட்டார்கள்.

இவ்விடயத்தில் ஸஹாபாக்கள் கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும் தந்தையின் தந்தை வாரிசுரிமை பெறுவார் என்பதில் ஒன்றுபடுகின்றனர். எனவே,

பின்னால் வரும் சட்ட அறிஞர்கள் தந்தையின் தந்தை வாரிசுரிமை பெறமாட்டார் என்று ஒரு புதிய கருத்தைக் கொண்டு வர முடியாது என்ற கருத்தில் ஒன்றுபட்டனர்.

மற்றோர் உதாரணத்தைப் பின்வருமாறு குறிப்பிடலாம். முஸ்லிம்களில் ஆண்கள் தாடியை வளர விடுவதோடு தொடர்புடைய சட்டத்தில் சட்ட அறிஞர்கள் பின்வரும் கருத்துக்களை கொண்டுள்ளனர்:-

1. தாடி வளர்ப்பது ஸுன்னத்தானதாகும்.
2. தாடி வளர்ப்பது வாஜிபானதாகும்.

தாடி வளர்ப்பதை ஸுன்னத் எனவும் வாஜிபு எனவும், அதன் தரத்தில் கருத்து வேறுபாடு கொண்டாலும் தாடி வைக்க வேண்டும் என்பதில் ஒன்றுபட்டனர். ஆகவே தாடியை நீக்குவது என்ற கருத்தை கொண்டு வர முடியாது என்பதில் ஒன்றுபட்டனர்.

### ஈ) இஜ்மா அக்ஸரிய்யா

ஏதேனுமொரு சட்டப் பிரச்சினை தொடர்பாக முஜ்தஹிதுகளில் பெரும்பான்மை யானோர் ஒரு கருத்தில் உடன்பட்டு மற்றும் சில முஜ்தஹிதுகள் முரண்பட்டால் அது இஜ்மா அக்ஸரிய்யாவாகும். முஜ்தஹிதுகளில் பெரும்பான்மையோரது இந்த முடிவு இஜ்மாவாகுமா என்பதில் பல்வேறு விதமான கருத்துக்கள் உள்ளன.

1. 'இஜ்மா அக்ஸரிய்யா' என்பது இஜ்மாவான முடிவாக கொள்ளப்பட மாட்டாது என்பதே இஸ்லாமிய அறிஞர்களது பொதுவான கருத்தாகும். இஜ்மா ஒரு சட்ட மூலாதாரம் என்பதை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் முழு சமூகத்தையும் தழுவியதாக அமைந்துள்ளதேயன்றி சமூகத்தில் பெரும்பான்மையானோர் தவறிழைக்கமாட்டார்கள் என்பதைக் காட்ட மாட்டாது என்பது அவர்களது வாதமாகும். ஸஹாபாக்களது நடை முறையும் இதனையே உணர்த்துகின்றது. சில பிரச்சினைகளில் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரழி) அவர்கள் பெரும்பான்மையினரின் கருத்துக்களுக்கு மாற்றமான கருத்தினையே கொண்டிருந்தார்கள் என இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

2. இஜ்மா அக்ஸரிய்யாவை இஜ்மாவாக ஏற்றுக்கொள்ள முடியும் என்பது சில அறிஞர்களின் கருத்தாகும். இவர்களுள் இமாம் முஹம்மத் இப்னு ஜரீர் அத்தபரி, அபூபக்ர் அர்ராஸி, அஹ்மத் இப்னு ஹன்பல் போன்றோர் முக்கியமானவர்களாவர்.

3. இன்னும் சிலர் முதவாதிருடைய எண்ணிக்கையை விட குறைந்த அளவில் முரண்பட்டோர் இருப்பின் பெரும்பான்மையோரது கருத்து இஜ்மாவாகக் கொள்ளப்படலாம் எனக் கருதுகின்றனர்.

4. மற்றும் சிலர் பெரும்பான்மையோரது முடிவு ஒரு ஆதாரமேயன்றி இஜ்மாவல்ல என்கின்றனர்.

5. வேறு சிலர் பெரும்பான்மையோரது முடிவைப் பின்பற்றுவது பொருத்தமானது என்கின்றனர்.

இஜ்மாஉ அக்ஸரிய்யாவை ஏற்றுக் கொள்வோர் முன்வைக்கும் ஆதாரங்கள்:-

1. நபி(ஸல்) அவர்களது ஹதீஸ்கள் :-

   (அ) "அல்லாஹுத்தஆலா முஹம்மத்(ஸல்) அவர்களின் உம்மத்தை வழிகேட்டில் ஒன்றிணைக்கமாட்டான்"

   (ஆ) "நீங்கள் கருத்து வேறுபாடுகளைக் கண்டால் பெரும்பான்மை யோரது கருத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்"

   (இ) "நீங்கள் சமூகத்தைச் சார்ந்திருங்கள்"

   (ஈ) "தனித்துச் செல்வது குறித்து நான் எச்சரிக்கை செய்கிறேன்"

2. பெரும்பான்மையான ஸஹாபாக்களின் கருத்தின் படியே முதல் கலீபா தெரிவு இடம்பெற்றது. ஆரம்பத்தில் அலி(ரழி), ஸஃத் இப்னு உபாதா(ரழி) ஆகியோர் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

3. ஏதேனுமொரு விடயத்தில் தனித்த சிலரது கருத்து முழுமையான அறிவை பிரதிபலிக்கமாட்டாது. ஆனால், பலரது கூட்டான கருத்து தெளிவான அறிவின் அடிப்படையில் அமைந்திருக்கும். ஆகவே இஜ்மாவிலும் இது சாத்தியமானதே.

4. பெரும்பான்மையான முஜ்தஹித்கள் ஒரு கருத்தில் உடன்பட்டிருப்பது அக்கருத்து வலுவானதாக இருப்பதற்கு ஆதாரமாகும்.

5. குறிப்பிட்ட ஒரு சாராரது முரண்பாட்டைக் கருத்திற் கொண்டு செயற்பட்டால் இஜ்மா எந்த வகையிலும் இடம்பெறுவது சாத்தியமாகாது.

6. இப்னு அப்பாஸ்(ரழி) அவர்கள் கூட தொடர்ந்து வந்த காலப் பகுதிகளில் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார்கள்.

## இஜ்மாவின் பிரிவுகள்

இஜ்மாவிற்கு அடிப்படையாக அமைந்த ஆதாரத்தின் அடிப்படையில் நோக்கும்போது அது இரு வகைப்படும் :-

1. **இஜ்மா நக்லீ**

   இது குர்ஆன், ஸுன்னா என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் இஜ்மாவாகும். உதாரணமாக, பெண்களுக்கு தங்கம் ஹலாலானது என்ற ஏகோபித்த முடிவைக் குறிப்பிடலாம்.

2. **இஜ்மா இஜ்திஹாதீ**

   இது ஏனைய சட்ட மூலாதாரங்களைக் கொண்டு உருவாகும் இஜ்மாவாகும். உதாரணமாக, அபூபக்ர்(ரழி) அவர்கள் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்டதைக் குறிப்பிடலாம்.

இஸ்லாம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்துகின்ற அல்லது கட்டியெழுப்ப முயற்சிக்கின்ற ஓர் அடிப்படை அம்சம் முஸ்லிம்களது ஐக்கியமும், ஒருமைப்பாடுமாகும். பிரதானமான இறைவணக்கங்களிலும் அன்றாட விவகாரங்களிலும் இதனை ஏற்படுத்த இஸ்லாம் முயற்சிக்கின்றது. இந்தவகையில் இஜ்மா எனும் துணை மூலாதாரத்தின் அடிப்படையிலும் முஸ்லிம்களது கருத்தொற்றுமையைத் தோற்றுவித்து நடைமுறை வாழ்க்கையில் அவற்றைப் பிரதிபலிக்க வைக்க முயற்சிக்கின்றது.

# கியாஸ்

## அறிமுகம்

இது குர்ஆன், ஸுன்னா, இஜ்மா என்ற மூன்று சட்ட மூலாதாரங்களுக்கும் அடுத்த நிலையிலுள்ள சட்ட மூலாதாரமாகும். சட்டமாக்கும் பகுதியில் ஒரு சில வரையறைகளோடு மனித அறிவும் சம்பந்தப்படுவதை அல்லாஹ் அனுமதித்துள்ளான். அந்தவகையில் "மஸாதிர் அக்லிய்யா" – மனித ஆய்வின் அடிப்படையிலான சட்ட மூலாதாரங்களில் ஒன்றாக கியாஸ் காணப்படுகிறது.

குர்ஆனிலும், ஸுன்னாவிலும் உள்ள சட்டங்களோடு தொடர்பான வசனங்கள் வரையறைக்குட்பட்ட எண்ணிக்கையில் தான் உள்ளன. ஆனால் சட்ட தீர்வை வேண்டி நிற்கும் நிகழ்வுகளோ, வரையறைக்கு அப்பாற்பட்டவை. அல்லாஹ் அவற்றை சட்டங்களால் ஒழுங்குபடுத்த நேரடி சட்ட வசனங்களைத் தரவில்லை. சட்ட விதிகளையும், கொள்கைகளையும் சட்டவாக்க ஒழுங்குகளையுமே அவன் குர்ஆன், ஸுன்னா மூலம் காட்டியுள்ளான். இஸ்லாமிய சட்டவியலாளர்கள் அவற்றைக் கண்டு பிடித்தனர். அவற்றுக்கு மனித ஆய்வடிப்படையிலான சட்ட மூலாதாரங்கள் (அல்மஸாதிர் அல்அக்லிய்யா) எனப் பெயரிட்டனர்.

கியாஸ் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டமூலாதாரமாகும். ளாஹிரி மத்ஹபினரும் மு.்.தஸிலாக்களில் சிலரும் இதனை சட்ட மூலாதாரமாக ஏற்கவில்லை. ஸஹாபாக்கள், தாபியீன்கள், நான்கு மத்ஹபினதும் இமாம்கள், அவர்களது சம காலத்தைய ஏனைய இமாம்கள் அனைவரும் கியாஸ் ஒரு சட்ட மூலாதாரம் என்பதனை ஏற்றனர்.

## பொருளும் வரைவிலக்கணமும்

ஒப்பிட்டு நோக்கல் என்பது கியாஸ் என்ற சொல்லின் மொழி ரீதியான பொருளாகும். 'ஏற்கனவே சட்டத் தீர்வு காணப்பட்ட பழைய நிகழ்வொன்றோடு சட்டத் தீர்வற்ற புதிய நிகழ்வை சட்டத்திற்கான காரணத்தில் காணப்படும் ஒற்றுமை காரணமாக ஒன்றிணைதல்' என்பது கியாஸுக்குக் கூறப்படும் வரைவிலக்கணமாகும்.

**விளக்கம்**

குர்ஆன் அல்லது ஸுன்னா அல்லது இஜ்மா என்பன ஏற்கனவே பல நிகழ்வுகளுக்கு சட்டத் தீர்வுகளைக் கூறியுள்ளன. ஆனால் அக்குறிப்பிட்ட மூலாதாரங்கள் நேரடியாக தீர்வு சொல்லாத பல நிகழ்வுகள் சமூகத்தில் தோன்ற முடியும். இப்போது இப்புதிய நிகழ்வுக்கான தீர்வு என்னவென ஆராயும்போது அதனை பழைய நிகழ்வோடு ஒப்பு நோக்கி, குறிப்பிட்ட பழைய நிகழ்வுக்கும் புதிய நிகழ்வுக்கு மிடையே ஒற்றுமை காணப்படுகின்றதா என நோக்கவேண்டும் அந்த ஒற்றுமை காண்பதற்கான ஒரே வழி பழைய தீர்வுக்கான காரணத்தைக் கண்டுபிடித்தலாகும். அதே காரணம் புதிய நிகழ்விலும் காணப்பட்டால் அதே தீர்வில் இப்புதிய நிகழ்வும் இணைக்கப்படும்.

| கியாஸ் காணும் வழிமுறை | உதாரணம் I | உதாரணம் II |
|---|---|---|
| அஸ்ல் | கம்று | ஜும்ஆ நேரத்தில் வர்த்தகம் செய்தல் |
| பரஉ | கசிப்பு | ஜும்ஆ நேரத்தில் கற்பித்தலில் ஈடுபடல் |
| இல்லத் | போதை | ஜும்ஆவுக்குச் செல்ல தடையாக அமைதல் |
| ஹுகும் | ஹராம் | ஹராம் |

### கியாஸின் (அர்கான்கள்) - பகுதிகள்

இந்தப் பின்னணியில் "கியாஸ்" என்பதை 'சட்டவாக்கத்தில் ஒப்பீட்டு முறைமை' என அடையாளப்படுத்தலாம். அந்தவகையில், கியாஸ் கீழ்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது :-

அ. **பழைய நிகழ்வொன்று** - இது அல்குர்ஆன், அல்லது ஸுன்னா அல்லது இஜ்மா மூலம் நிறுவப்பட வேண்டும். இது "அஸ்ல்" எனப்படுகிறது.

ஆ. **புதிய நிகழ்வு** - இதுவே சட்டத்தை வேண்டி நிற்கும் பிரச்சினையாகும். இது "பரஉ" எனப்படும்.

இ. **பழைய சட்டத்திற்கான காரணம்** : இது "இல்லத்" எனப்படுகின்றது. இது புதிய நிகழ்வையும் பழைய நிகழ்வையும் இணைக்கும் காரணியாகும். இது அல்குர்ஆனிலோ ஸுன்னாவிலோ நேரடியாகக் கூறப்பட்டிருக்கும். அல்லது இஜ்மா மூலம் நிறுவப்பட்டிருக்கும். அல்லது சட்ட அறிஞர்கள் ஆய்வின் ஊடாக இதனைக் கண்டு பிடிப்பர்.

ஈ. **சட்டத் தீர்ப்பு** : இது பழைய நிகழ்வுக்கான தீர்வாகும். புதிய நிகழ்வின் மீது இத்தீர்வு பிரயோகிக்கப்படும்.

### கியாஸின் வகைகள் :

கியாஸை அதன் பிரயோக நிலைமையை பொறுத்து மூன்று பிரிவாக வகுப்பர்.:-

1. **கியாஸ் அவ்லா : (உச்ச நிலையிலுள்ள கியாஸ்)**
   பரஉவில் தென்படுகின்ற இல்லத் அஸ்லின் இல்லத்தை விட பெறுமானத்தில் கூடியதாக இருக்கும் கியாஸ் "கியாஸ் அல்அவ்லா என்றழைக்கப்படுகிறது. உ-ம் : அல்குர்ஆனின் 17 : 23 வசனத்தில் பெற்றோருக்கு "சீ" என்று கூறாதீர் என்று வந்துள்ளது. வார்த்தையால் இவ்வாறு நோவினை செய்வதை விட சாட்டையால் அடித்தல் கடுமையானது.

2. **கியாஸுல் முஸாவி : (சமமாக அமையும் கியாஸ்)**
   அஸ்லும் பர்உவிலும் இருக்கும் இல்லத் சமமான பெறுமானம் உடையதாய் இருத்தல் கியாஸ் முஸாவி என்றழைக்கப்படுகிறது. உ-ம் : நாய் நக்கிய பாத்திரத்தை ஏழுமுறை கழுவுமாறு ஹதீஸ் கூறுகிறது. பன்றி நக்கினாலும் அவ்வாறு ஏழுமுறை கழுவ வேண்டும்.

3. **கியாஸ் அத்னா : (ஓரளவு பலவீன நிலையில் அமையும் கியாஸ்)**
“அஸ்லை” விடவும் “பர்உவில்” உள்ள இல்லத்தின் பெறுமானம் தரம் குறைந்ததாக இருக்கும். கியாஸின் இவ்வகை கியாஸ் அல் அத்னா என்றழைக்கப்படுகிறது.

**கியாஸ் சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்கள்**

ஏற்கனவே விளக்கப்பட்ட கியாஸ் பற்றிய விடயங்களை நன்கு ஆழமாக நோக்கினால் கியாஸ் என்பது குர்ஆன் ஸுன்னாவின் சட்ட வசனங்களுக்கான விரிந்த பிரயோகம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். எனவே, கியாஸ் ஒரு சட்ட மூலாதாரம் என்பதை ஏற்றல் மிகவும் இயல்பானது. அதனை மறுக்க நியாயமெதுவும் கிடையாது. எனவே தான் ஸஹாபாக்களது காலம் தொடக்கம் மிகப் பெரும்பாலான சட்ட அறிஞர்கள் இதனை சட்ட மூலாதாரமாக ஏற்றுள்ளனர். மிகச் சில சட்ட அறிஞர்களே இதனை மறுத்துள்ளனர்.

கியாஸ் என்பது குர்ஆன் ஸுன்னாவின் விரிந்த பிரயோகமே என்பது உண்மை யாயினும் இங்கு மேலதிகமாக சில ஆதாரங்களைத் தரமுடியும்.

(1) ஒப்பிட்டு ரீதியான கியாஸ் அடிப்படையிலான கருத்துக்களையும், சிந்தனைகளையும் குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது.

(அ) “கூறுவீராக! ஆரம்பத்தில் அதனை படைத்தவனே அதனை உயிர்ப்பிப்பான். அவன் படைப்பினம் பற்றியும் மிக ஆழ்ந்து அறிந்தவனாக உள்ளான்.” (36 : 79)

படைப்புக்களை இல்லாமையிலிருந்து படைத்ததோடு அவற்றை மீளெழுப்புவதை ஒப்பிட்டு நோக்குமாறு குர்ஆன் இங்கே கட்டளையிடுகிறது. இல்லாமையிலிருந்து படைத்தவன் இறந்த ஒன்றை மீளெழுப்பச் சக்தியுடையவனே என்பதில் என்ன சந்தேகம் வர முடியும்?

(ஆ) “பூமியில் பிரயாணம் செய்து அவர்களுக்கு முன்பிருந்தோரின் முடிவு என்னவாயிற்று என அவர்கள் அவதானிக்க வேண்டாமா?” (47 : 10)

பழைய சமூகங்களின் அழிவை அவதானித்து எமது நிலையோடு அதனை ஒப்பு நோக்கிப் படிப்பினை பெறுமாறு குர்ஆன் இங்கே கூறுகின்றது. இவ்வாறு ஒப்பிட்டு நோக்கி ஆய்தலை குர்ஆன் வலியுறுத்தியுள்ளமை இங்கு தெளிவாகின்றது.

(2) இறைத்தூதர்(ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் சட்டங்களை சொல்லும் போது அதற்கான காரணங்களைக் காட்டி விளக்கியுள்ளார்கள். இது சட்டங்களுக்கு காரணங்கள் உள்ளன என்பதையும் அவற்றின் அடிப்படையில் நிகழ்வுகளை நோக்க முடியும் என்பதையும் உணர்த்துகின்றது. இங்கு இரு உதாரணங்கள் தரப்படுகின்றன:-

(அ) "(தீய) பார்வையத் தவிர்ப்பதற்காகவே அனுமதி கேட்டல் கட்டாயப்படுத்தப்பட்டது." (புகாரி, முஸ்லீம்)

(ஆ) "நபி(ஸல்) அவர்கள் உழுஹிய்யா இறைச்சியை சேமிக்க வேண்டாம் எனக் கூறக்காரணம் மதீனாவுக்கு வந்திருந்த உபசரிக்கப்பட வேண்டிய விருந்தாளிகளான பிரயாணிகளாவர். (புகாரி)

வணக்க வழிபாடுகளோடு தொடர்பான சட்டங்களுக்கு காரணம் காண முடியாது. ஆனால், ஏனைய சட்டங்களைப் பொறுத்தவரையில் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் இவ்வாறு காரணங்களை வரையறுத்துக் கூறியுள்ளார்கள். குர்ஆனில் பல இடங்களில் இதனைக் காணலாம். இவ்வாறு சட்டங்களைக் காரணம் கண்டு ஆராயும் முறையை இறைத்தூதர்(ஸல்) அனுமதித்துள்ளார்கள்.

(3) கியாஸைப் பயன்படுத்தி ஸஹாபாக்கள் சட்டங்களை உருவாக்கியமை மிகத் தெளிவான உண்மையாகும். கீழே சில உதாரணங்கள் தரப்படுகின்றன.

1. ஸஹாபாக்களிற் சிலர் அபூபக்ர்(ரலி) அவர்களை கலீபாவாக ஏற்று பைஅத் செய்தபோது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அவரை தொழுகை நடாத்துவதற்கு இமாமாக நியமித்ததனை ஆதாரமாகக் காட்டினார்கள். அதாவது, தொழுகைக்கான தலைமையை பொதுத் தலைமையோடு ஒப்பிட்டு நோக்கினார்கள்.

2. பல ஒட்டகங்களின் பெறுமதிகளுடைய, நூறு ஆடுகளின் பெறுமதி கொண்ட குதிரைகளை, சிலர் தமது சொத்தாக வைத்துள்ளனர் என உமர்(றழி) அவர்களின் கவர்னர்கள் சிலர் கலீபா உமரிடம் கூறினார்கள். அப்போது உமர் (றழி) அவர்கள்.

“40 ஆடுகள் இருந்தால் ஸகாத் அறவிடுகிறோம். அப்படியிருக்க அதைவிட பெறுமதியான குதிரைகளுக்கு ஸகாத் அறவிடாதிருக்க முடியுமா?” எனக் கூறி ஸகாத் அறவிட்டார்கள். இமாம் அபூஹனீபா இக்கருத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

**கியாஸ் அடிப்படையில் பெறப்பட்ட சட்டங்களுக்கான சில உதாரணங்கள்:**

(1) "நீதிபதி கோபமாக இருக்கும் நிலையில் இருவருக்கிடையே தீர்ப்பளித்தல் கூடாது" என இறை தூதர்(ஸல்) கூறினார்கள். கடும்பசி, கடும் மனஅழுத்த நிலை, மலசலத்திற்காக வெளியிற் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ள நிலைமை என்பவற்றை ஒப்பீடு (கியாஸ்) செய்து இந்நிலைகளிலும் தீர்ப்பளித்தல் கூடாது என சட்ட அறிஞர்கள் “கோபமாக இருத்தல்” என்ற நிலையோடு இவற்றை ஒப்பிட்டுக் கூறியுள்ளனர்.

(2) கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறலுக்கு 80 கசையடிகள் கொடுக்கப்படும் என குர்ஆன் ஸூரா நூரின் 4 ஆம் வசனம் கூறுகிறது. கற்பொழுக்கமுள்ள ஆண்கள் மீது அவதூறு கூறலும் இத்தகையதே என்ற சட்டம் கியாஸைப் பிரயோகித்ததன் மூலம் பெறப்படுகின்றது.

## இஸ்திஹ்ஸான்

கியாஸுக்கு அடுத்த சட்டமூலாதாரம் இஸ்திஹ்ஸானாகும். இதனை இமாம்களான அபூஹனீபா (ரஹ்), மாலிக் (ரஹ்) போன்றோர் உருவாக்கினார்கள். இமாம் ஷாபிஈ (ரஹ்) இந்த சட்டமூலாதாரத்தை ஏற்கவில்லை. இக்கருத்து வேறுபாடு வெறும் சொற்பிரயோகக் கருத்து வேறுபாடாகவே நோக்கப்படுகிறது.

இஸ்திஹ்ஸான் என்பதன் மொழிப் பொருள் ‘சிறந்ததாகக்காணல்’ என்பதாகும். இஸ்திஹ்ஸான் பரிபாஷையில் பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்தப்படுகிறது.

“ஒரு பிரச்சினைக்கான தீர்வைத்தேடும் போது அதனை ஒத்த பிரச்சினை களுக்கான தீர்வை விட்டுவிட்டு ஒரு பலமான காரணத்திற்காக இன்னொரு தீர்வைக் காண்பதாகும்.”

கியாஸ் என்பது ஒரே வகையான நிகழ்வுகள் அல்லது பிரச்சினைகளுக்கு இடையில் காணப்படும் ஒற்றுமையை அவதானித்து ஒரே தீர்வை வழங்கலாகும். ஆனால் சில சந்தர்ப்பங்களின்போது அந்தப்பிரச்சினைகளுக்கிடையில் காணப்படும்

ஒற்றுமையை அவதானித்து ஒரே தீர்வை கொடுப்பது பொருத்தமாக இருக்காது. இந்நிலையில் சில நியாயங்கள், காரணங்களுக்காக வேறொரு தீர்வை நாடிச் செல்வது இஸ்திஹ்ஸானாகும்.

உதாரணம் :- இஸ்திஸ்னா வியாபாரம் : அதாவது தயார் நிலையில் இல்லாத பொருளுக்காக பணத்தை முழுமையாகவோ பகுதியாகவோ முன்கூட்டியே வழங்கி, பின்னர் பொருளை ஏற்றுக்கொள்ளல் உதாரணமாக நகை செய்வதைக் குறிப்பிடலாம். இல்லாத பொருளொன்றை விற்பதனை ஹதீஸ் தடைசெய்துள்ளது. எனவே கியாஸும் இந்த விற்பனையைத் தடைசெய்துள்ளது. எனினும் இந்த வியாபாரம் பரவலாக இடம்பெறுவதால் சமூகநலன் கருதி இஸ்திஹ்ஸான் அதனை அனுமதித்துள்ளது.

**கௌலுஸ் ஸஹாபி** :-

ஸஹாபாக்களது சட்டத்தீர்ப்புக்களையே கௌலுஸ் ஸஹாபி என்பது குறித்தது. குர்ஆன், ஸுன்னாவின் வழிகாட்டலை மிகச்சரியாக விளங்கி நடைமுறைப் படுத்தியவர்களே ஸஹாபாக்களாவர். இறைத்தூதர் (ஸல்) அவர்களைத் தொடர்ந்து சமூகப்பிரச்சினைகளை எதிர்கொள்வதில் ஸஹாபாக்கள் பல்வேறு வழிமுறைகளை கடைப்பிடித்தார்கள். இந்தப் பின்னணியில் ஸஹாபாக்களால் முன்வைக்கப்பட்ட சட்டத்தீர்ப்புக்கள் ஒன்றாக திரட்டப்பட்டன. பின்னால் வந்தவர்கள் ஸஹாபாக்களது சட்டமியற்றும் வழிமுறையை பின்பற்றத் துவங்கினார்கள்.

ஸஹாபாக்களது கூற்றுக்கள் குர்ஆன், ஸுன்னா போன்றே ஒரு சட்டமூலாதார மாக கொள்ளப்படவேண்டுமா என்ற சர்ச்சை பிற்பட்ட காலப்பிரிவில் ஏற்பட்டது. எனினும் கௌலுஸ் ஸஹாபி என்பது குர்ஆன், ஸுன்னாவைப் போன்று தனியான சட்டமூலாதாரமாக இல்லாது சட்டத் தீர்ப்புக்களை பெறுவதற்கான துணைமூலாதார மாக நோக்கப்பட வேண்டும் என்பதே பலமான கருத்தாகும்.

**ஷராயி.ஃ. சாபிகா** :-

முற்கால சமூகங்களின் ஷரீஅத் : முற்கால சமூகத்தினரது ஷரீஅத்தும் எமக்குரிய ஷரீஅத்தாக கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தை ஹனபி, மாலிகி, ஷாபிஈ மத்ஹபினருள் பலர் ஏற்றுக்கொள்கிறார்கள். இதற்கு பல்வேறு ஆதாரங்கள் இவர்களால் முன்வைக்கப்படுகின்றன.

முற்கால சமூகத்தவரது ஷரீஅத்துக்கள் எமக்கு ஷரீஅத்தாக அமைய முடியும் எனும்போது சில உண்மைகளை புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

* அனைத்து ஷரீஅத்துக்களும் அல்லாஹ்வால் இறக்கப்பட்டவையே. முற்கால சமூக சட்டங்கள் மாற்றப்பட்டுவிட்டன என்பதன் பொருள், அனைத்து

கிளைச்சட்டங்களும் இக் காலத்துக்கு பொருத்தமில்லை என்பதல்ல. சில கிளைச்சட்டங்கள் எமக்கும் பொருத்தமாக இருப்பது சாத்தியமாகும்.

* முற்கால ஷரீஅத்.- ஷராயி.'. ஸாபிகா - மாற்றப்படாத போது அவை கட்டாயம் பின்பற்றப்படவேண்டிய சட்டங்களாகும். எனினும் இதனை தனியானதொரு சட்டமூலாதாரமாக கொள்ளுவதை விட குர்ஆன், ஸுன்னாவினுள் அடங்கும் ஒரு பகுதியாக கொள்வதே பொருத்தமானதாகும்.

**உர்பு - வழக்காறு** :

"உர்பு" என்பதை தமிழில் வழக்காறு அல்லது மரபு என மொழிபெயர்க்கலாம். இஸ்லாமிய ஷரீஆவின் துணைமூலாதாரங்களுள் ஒன்றாக கருதப்படும் உர்பு, பரிபாஷையில், ஒரு சமூகத்தில் பெரும்பாலானோர் தமது சொல்லில் அல்லது செயலில் மரபு ரீதியாக பின்பற்றி வருவதைக் குறிக்கும்.

பொதுவாக சட்டவல்லுனர்கள் தீர்ப்புக்களை வழங்கும்போது உர்பை அடிப்படையாக கொண்டிருக்கிறார்கள். அதற்கு பல்வேறு ஆதாரங்களையும், நியாயங்களையும் முன்வைக்கிறார்கள். "உர்பு" சட்டமூலாதாரமாக கொள்ளப்படுவதற்கு பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாகி இருக்க வேண்டும்.

(1) குறித்த உர்பு அதனை கையாளும் சமூக அங்கத்தவர்களில் எல்லோரிடமும் அல்லது பெரும்பான்மையினர் மத்தியில் இடம்பெறுவதாக இருக்க வேண்டும். அதே வேளை அது ஒரு சில நிகழ்வுகளில் மாத்திரம் பிரயோகிக்கப்படுவதாக இருக்கக் கூடாது.

(2) எந்த உர்பினைப் பயன்படுத்தி குறித்த விவகாரங்களை அணுகமுற் படுகின்றோமோ அந்த விவகாரங்கள் தோற்றம் பெற்ற வேளையில் நடைமுறையில் இருந்த உர்பாக குறித்த உர்பு இருக்க வேண்டும்.

(3) நடைமுறையிலுள்ள மரபுக்கு மாற்றமான சட்டமொன்று சட்டயாப்பிலோ அல்லது வியாபார கொடுக்கல், வாங்கல் உடன்படிக்கையிலோ தெரிவிக்கப்பட்டிருத்தல் கூடாது.

(4) ஷரீஅத் சட்டவசனமொன்றுக்கு அல்லது அதனூடாகப் பெறப்பட்ட சட்டவிதியொன்றுக்கு முரண்படும் உர்பாக அது இருக்கக்கூடாது.

**மஸ்லஹா முர்ஸலா**

“மஸ்லஹா” என்பது நலன் என்றும், “முர்ஸலா” என்பது வரையறையற்றது என்றும் பொருள்படும். எனவே வரையறைக்குட்படாத நலன் என்பது இதன் பொருளாகும்.

குர்ஆனோ சுன்னாவோ குறிப்பிட்டுக்காட்டாத, ஆனால் அவற்றின் பொது விதிகளோடும் கொள்கைகளோடும் ஒத்துச்செல்லும் வகையில் நலன்களின் அடிப்படையில் சட்டமியற்றல் என்பது மஸ்லஹா முர்ஸலாவின் வரைவிலக்கண மாகும்.

இஸ்லாமிய ஷரீஆவில் குறித்த பிரச்சினைக்கு நேரடியாக சட்டவசனங்கள் காணப்படும்போது மஸ்லஹா முர்ஸலாவை கையாள்வதில்லை.

மிகப்பெரும்பாலான சட்ட அறிஞர்கள் சட்டத்தீர்ப்புக்களை பெறுவதற்காக இதனை ஒரு துணை மூலாதாரமாக பிரயோகித்துள்ளார்கள். ஸஹாபாக்களும் சமூகநலனை அடிப்படையாகக்கொண்டு பல்வேறு ஆக்கபூர்வமான தீர்மானங்களை நிறைவேற்றியதை வரலாற்றில் காணலாம்.

மஸ்லஹா முர்ஸலாவை அடிப்படையாகக்கொண்டு பெறப்பட்ட தீர்ப்புக்கள், நிலைபாடுகளுக்கு பின்வரும் உதாரணங்களை குறிப்பிடலாம்.

1. அபூபக்ர் (றழி) அவர்களது ஆட்சியில் அல்குர்ஆன் தொகுக்கப் பட்டமை

2. உமர் (றழி) அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நகரமயமாக்கம், சிறைச்சாலை உருவாக்கம், பல்வேறு தண்டனைகளுக்கு த.ஃஸீர் தண்டனை விதித்தல் முதலானவை

3. விளைபொருட்களுக்கான ஸகாத்தை அறவிட யெமன் தேசம் சென்ற முஆத் பின் ஜபல் (றழி) குறிப்பிட்ட பொருட்களுக்கான ஸகாத்தை யெமனில் ஆடைகளாக தரும்படி வேண்டியமை

# இல்முல் பிக்ஹ்

'இல்முல் பிக்ஹ்' என்பது இஸ்லாமிய சட்டக்கலை பற்றிய அறிவைக் குறிக்கிறது. 'பிக்ஹ்' என்ற சொல் மொழியியல் ரீதியாக ஆழமாகப் புரிந்து கொள்ளுதல் என்ற கருத்தை தருகிறது. ஷரீஆ கண்ணோட்டத்தில் பிக்ஹ் என்பது நடத்தையோடு தொடர்பான ஷரீஆ சட்டங்களை அதன் மூலாதாரங்களிலிருந்து புரிந்து கொள்வதாகும். மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணத்திலிருந்து பின்வரும் முடிவுகளுக்கு வரமுடியும்.

- பிக்ஹ் கலையின் ஆய்வுப் பொருளாக, நடத்தை சார்ந்த ஷரீஆ சட்டங்கள் அமையும்.
- குறித்த ஷரீஆ சட்டம் இஸ்லாமிய சட்டவாக்க மூலாதாரங்களின் ஒளியில் விளக்கப்பட வேண்டும்.

இந்தவகையில், வணக்கவழிபாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், திருமண விவகாரங்கள், குற்றவியல் சட்டங்கள் போன்ற துறைகளை மிகவும் விரிவாக, இஸ்லாமிய சட்டவாக்க மூலாதாரங்களின் துணை கொண்டு விளக்குவதாக பிக்ஹ் கலை உள்ளது.

### பிக்ஹ் கலையின் தோற்றமும் வளர்ச்சியும்

நபி(ஸல்) அவர்களது காலமே பிக்ஹ் கலையின் தோற்றகாலமாகும். பிக்ஹ் கலையின் முதற்தர மூலாதாரங்களான குர்ஆன், ஸுன்னா ஆகிய இரு மூலாதாரங்களினதும் அடிப்படையில் தான் பிக்ஹ் கலை கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இக்காலப்பிரிவில் குர்ஆன், ஸுன்னாவுக்கூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டங்கள் மிகவும் அடிப்படையானவையாகவும், அக்காலத்துப் பிரச்சினைகளை தீர்ப்பன வாகவுமே அமைந்திருந்தன. அல்லாஹ்வுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவுகள், தனிமனித சமூக உறவுகள், குடும்ப வாழ்வின் பல்வேறு அம்சங்கள், அரசியல், குற்றவியல், ஒழுக்கவியல், உழைப்பு, உணவு, உடை, சர்வதேச உறவுகள் என பல துறைகளுக்கும் அடிப்படையான சட்டங்கள் குர்ஆன், ஸுன்னாவின் துணை கொண்டு பெறப்பட்டன.

பிக்ஹ் கலையானது நபி(ஸல்) அவர்களது காலத்தைத் தொடர்ந்து குலபாஉர் ராஷிதூன்கள், ஸஹாபாக்கள், மூத்த தாபிஈன்கள் காலத்திலேயே துரிதமாக வளர்ச்சியடைய ஆரம்பித்தது. நபி(ஸல்) அவர்களுக்குப் பின் கலீபாவாக வருபவர் யார் என்ற பிரச்சினை, இரண்டாம் கலீபாவின் காலத்தில் இராச்சிய விஸ்தரிப்பு, மூன்றாம் கலீபாவின் காலத்தில் ஏற்பட்ட உள்நாட்டு கிளர்ச்சி, நான்காம் கலீபாவின் காலத்தில் ஏற்பட்ட ஜமல், ஸிப்பீன் யுத்தங்கள் போன்ற அரசியல் நிகழ்வுகள் பிக்ஹ் கலை வளர்ச்சியில் பெரிதும் தாக்கம் செலுத்தின.

குலபாஉர்ராஷிதூன் காலத்திலும் உமையாக் காலத்திலும் ஏற்கனவே முன்னேற்றம் அடைந்த பிராந்தியங்களுக்கு இஸ்லாம் பரவியபோது பல்வேறுபட்ட புதுப்புதுப் பிரச்சினைகள் தலைதூக்கின. இத்தகைய சந்தர்ப்பங்களில் ஸஹாபாக்களும், தாபிஊன்களும் குர்ஆன், ஸுன்னா ஆகிய இரண்டின் துணையுடன் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முயற்சித்தனர். சில பிரச்சினைகளில் அவ்விரண்டினதும் துணையுடன் தீர்வு பெறமுடியாத நிலையை கண்டபோது இஜ்திஹாத் வழிமுறைக்கூடாக தீர்வு காண ஆரம்பித்தார்கள். இதன் விளைவாக இஜ்மா, கியாஸ் என இரண்டு துணை மூலாதாரங்கள் இக்காலப்பிரிவில் தோற்றம் பெற்று பிக்ஹ் கலை வளர்ச்சியில் பெரிதும் பங்கெடுத்தன. அவ்விரண்டில் ஒன்றிலேனும் தீர்வு கிடைக்காதவிடத்து சட்டத்துறை ஈடுபாடுடைய ஸஹாபாக்களின் கருத்துக்களைப் பெற்றனர். இந்தவகையில் குர்ஆன், ஸுன்னா என்பன தனி மூலாதாரங்களாகவும், இஜ்மா, கியாஸ் என்பன துணை மூலாதாரங்களாகவும் தோற்றம் பெற்றதோடு பல்வேறு பிரச்சினைகளுக்கு இவ்விரண்டினதும் துணையோடு தீர்வுகள் பெறப்பட்டன.

உமையா சாம்ராஜ்யத்தின் ஆரம்ப காலப்பிரிவிலே அரசியல் பிரச்சினைகள் தோன்றி, அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத், காரிஜி, ஷீஆ என்ற மூன்று பிரிவினர் தோன்றினர். அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்தின் சட்டக்கலை வளர்ச்சியில் ஷீஆ, காரிஜீ, இயக்கச் சிந்தனைகள் தாக்கம் செலுத்தின. குலபாஉர் ராஷிதீன்களின் காலத்தில் ஏற்பட்ட இராச்சிய விரிவு, அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத் பிரிவினரின் சட்டத்துறை வளர்ச்சியை, துரிதப்படுத்தியது. உமர் (றழி) அவர்களின் காலத்தில் கைப்பற்றப்பட்ட பகுதிகளை நிர்வகிக்கவும், அங்கு வாழ்ந்தவர்களுக்கு ஷரீஆவைப் போதிக்கவும் மூத்த ஸஹாபாக்களில் சிலர் அப்பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டனர். இத்தகைய ஸஹாபாக்கள் வழிநின்று, பிராந்தியங்களை மையப்படுத்தி தாபிஈன்களும் சட்டத்துறைக்கு பங்களிப்புச் செய்தனர். மக்கா. மதீனா, கூபா, பஸரா, சிரியா போன்ற பகுதிகளில் சட்டத்துறையில் இத்தகைய மரபுகள் தோன்றி வளர்ச்சி கண்டன.

இஸ்லாமிய சட்டக்கலை வளர்ச்சியில் மத்ஹபுடைய இமாம்களின் தோற்றம் பெரிதும் செல்வாக்குச் செலுத்தியது. அப்பாஸிய காலத்தில் ஏற்பட்ட அறிவியல் மறுமலர்ச்சியும், பல்வேறு சிந்தனைப் பிரிவுகளின் தோற்றமும் இஸ்லாமிய ஷரீஆ தொடர்பான பல புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்தன. இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைக்க முயன்ற அக்காலத்து இமாம்கள் புதிய சட்ட மரபுகளை உருவாக்கிக் கொண்டார்கள். ஷரீஆ சட்டங்களைப் பெறுவதற்கான துணை மூலாதாரங்களையும், அவற்றிலிருந்து சட்டத்தீர்ப்புகளைப் பெறுவதற்கான புதிய வழிமுறைகளையும் அவர்கள் கையாண்டமையினால் வித்தியாசமான சட்ட மரபுகள் தோன்றின. ஹனபி, மாலிகி, ஷாபிஈ, ஹன்பலி போன்ற மத்ஹபுகள் தோன்றி மிகப் பரவலான சட்ட சிந்தனை வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தன.

பிக்ஹ் கலை வரலாற்றில் நவீன காலத்தில் தோன்றியுள்ள பல்துறைசார்ந்த பிரச்சினைகளுக்கு புதிய இஜ்திஹாத்களை மேற்கொண்டு பொருத்தமான தீர்வுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை பிக்ஹ் கலையின் வளர்ச்சிக்கு சிறந்த சான்றாகும்.

## பிக்ஹ் கலை வளர்ச்சியில் மத்ஹபுடைய இமாம்களின் பங்களிப்பு

பிக்ஹ் கலை வளர்ச்சியில் பல்வேறு காலப்பிரிவுகளிலும் தோன்றிய இமாம்கள் பெரிதும் பங்களிப்பு செய்தார்கள். அவர்களில் நான்கு மத்ஹபுடைய இமாம்களது பங்களிப்புக்களை இங்கு நோக்குவோம்.

### 1. இமாம் அபூ ஹனீபா (றஹ்) (ஹி. 80 - 150, கி.பி 699 - 767)

இமாம் அபூஹனீபா என அழைக்கப்படும் இவரது பெயர் நு.்.மான் பின் தாபித் என்பதாகும். கூபா நகரில் ஹிஜ்ரி 80 ஆம் ஆண்டு பிறந்த அவர்கள், அங்கிருந்த மிகப்பெரும் பகீஹ் ஆன ஹம்மாத்பின் ஸுலைமான்(றஹ்) அவர்களிடம் பிக்ஹ் கலையை கற்றார்கள். அறிவியல் வளர்ச்சி கண்ட கூபாவில் அறிவியலின் செல்வாக்கு கடுமையாக இருந்தது. இந்நிலையில் இஸ்லாமிய ஷரீஆ தொடர்பாக எழுந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு இமாம் அவர்கள் குர்ஆன், ஸுன்னா, இஜ்மா, கியாஸ் ஸஹாபாக்களின் கருத்துக்கள் போன்றவற்றைத் துணையாகக் கொண்டார்கள்.

இமாம் அபூஹனீபா(றஹ்) அவர்கள் சட்டத்துறையில் ஈடுபாடு காட்டிய காலப்பிரிவில் பிக்ஹ் சட்டங்கள் தொகுக்கப்பட்டு எழுத்துருப் பெற்றிருக்கவில்லை. மூலாதாரங்களிலிருந்து சட்டங்களை உருவாக்கும் கிரமமான வழிமுறையும் அறிமுகமாக்கப்பட்டிருக்கவில்லை. ஸுன்னாவும் அதன் நம்பகத்தன்மைக்கு ஏற்ப தரப்படுத்தப்பட்டோ, தொகுக்கப்பட்டோ இருக்கவில்லை. அது, ஸஹாபாக்கள் காலம் போலல்லாது, அரசியல், சமூகவியல், தத்துவம் போன்ற துறைகள் வளர்ச்சியடைந்து பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் தோன்றிய காலமாகும்.

இத்தகைய வாதப்பிரதிவாதங்களில் கலந்து கொண்ட இமாம் அவர்கள், அக்காலத்து சட்டப் பிரச்சினைகளை புரிந்து கொண்டு, அவற்றுக்குத் தீர்வு காண முற்பட்டார்கள். சமய கோட்பாடுகளை தர்க்கரீதியாக முன்வைப்பதில் விஷேட திறமை பெற்றிருந்த இமாமவர்கள், குர்ஆன், ஸுன்னா, இலக்கியம், தர்க்கவியல் போன்ற பல துறைகளில் சிறப்பாற்றல் பெற்றிருந்த தனது மாணவர்கள் நாற்பது பேரைக் கொண்ட சபையொன்றை உருவாக்கினார்கள். இச்சபை புதிய பிரச்சினைகளுக்கு சிந்தனா ரீதியான வழிமுறையில் தீர்வுகாண முயற்சித்தது. இச்சபையில் கலந்துரையாடி பெறப்பட்ட ஏகோபித்த முடிவுகள் பதிவுசெய்யப்பட்டன.

இமாமவர்களின் தலைமையில் அவரது மரணம் வரை சுமார் முப்பது வருடங்கள் இயங்கிய அந்த சபையில் எண்பத்து மூவாயிரம் சட்டப் பிரச்சினைகள் ஆராயப்பட்டு தீர்வுகள் வழங்கப்பட்டன. இவை தொகுக்கப்பட்டு நூல் வடிவாக்கப்பட்டன. அல்பிக்ஹுல் அக்பர், முஸ்னத் போன்றன அவர்களது மாணவர்களால் தொகுக்கப்பட்ட நூல்களாகும். இமாம் அபூயூஸுப், இமாம் ஹஸனுஷ் ஷைபானி, இமாம் ஸுபர் ஆகியோர் இமாம் அவர்களின் பிரதானமான மாணவர்களாவர். இமாம் அபூஹனீபாவைத் தொடர்ந்து அவர்களது மாணவர்கள் அவர்களது வழிநின்று சட்டப் பங்களிப்புக்களைச் செய்தார்கள்.

## 2. இமாம் மாலிக் பின் அனஸ் (றஹ்) (ஹி. 93 - 179, கி.பி 713 - 799)

இவரது முழுப் பெயர் அபூஅப்தில்லாஹ் மாலிக் பின் அனஸ் பின் மாலிக் பின் அபீ ஆமிர் அல்அஸவஹி என்பதாகும். மதீனாவில் பிறந்த இவர் ஒரு சிறந்த முஹத்திஸும், பகீஹும் ஆவார். இளமையில் குர்ஆனை மனனமிட்டதோடு ஹதீஸ்களையும் மனனமிட்டிருந்தார்கள். நபி(ஸல்) அவர்களது ஹதீஸ்களையும் இஸ்லாமிய சட்ட நுணுக்கங்களையும் கற்பதில் பேரார்வம் கொண்டிருந்தார்கள். அப்துர் ரஹ்மான் பின் ஹுர்முஸ், இப்னு ஷிஹாப், யஹ்யா பின் ஸ.்த் போன்ற அறிஞர்களிடம் ஹதீஸ்களையும், ரபீஆ பின் அப்துர் ரஹ்மான் என்பவரிடம் சட்டக்கலையையும் பயின்றார்கள். இதன் பிறகு மஸ்ஜிதுன் நபவியிலிருந்து ஹதீஸ் பாட போதனை நடாத்தியதுடன் பத்வாக்களையும் வழங்கினார்கள்.

இஸ்லாமிய வரலாற்றில் ஹதீஸ் மற்றும் பிக்ஹ் கலை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த இமாம் மாலிக்(றஹ்) அவர்கள் ஏனைய இமாம்களைப் போன்று சட்டங்களைப் பெறுவதற்கு பல மூலாதாரங்களை கையாண்டார்கள். எனினும், அவர் பயன்படுத்திய மூலாதாரங்களுக்கு அளித்த முன்னுரிமை மிகவும் வித்தியாசமானதாக இருந்தது. குர்ஆன், ஸுன்னாவுக்கு அடுத்ததாக (மதீனா வாசிகளின் ஏகோபித்த முடிவை மட்டுமே அவர்கள் இஜ்மாவாக ஏற்றார்கள்) இஜ்மாவையும் கருதினார்கள். ஸஹாபாக்களின் கூற்றுக்கள், மஸாலிஹ் முர்ஸலா, கியாஸ் போன்ற மூலாதாரங்களையும் பயன்படுத்தினார்கள்.

இமாம் மாலிக்(றஹ்) அவர்கள் "உஸுலுல் பிக்ஹ்" எனும் துறைக்கு மட்டுமன்றி "புருஉ" எனப்படும் சட்டவிதிகளின் அறிமுகத்திற்கும் பெரும் பணிபுரிந்துள்ளார்கள். இந்தவகையில் அவர்களின் 'முஅத்தா' எனும் நூல் பிக்ஹ் கலை வளர்ச்சிக்கு மட்டுமல்லாது ஹதீஸ்கலை வளர்ச்சியிலும் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். முஅத்தா நூலை இமாம் மாலிக்(றஹ்) எழுதும் போது பின்வரும் வழிமுறைகளைக் கையாண்டுள்ளார்கள். குறிப்பிட்டதொரு சட்டப்பிரச்சினையை தீர்ப்பனவாக இதன் அத்தியாயத் தலைப்புகள் அமைந்துள்ளன. அத்தலைப்பின் கீழ் விளக்கும் போது முதலில் அத்தலைப்புடன் தொடர்புடைய ஹதீஸ்களை கையாண்டு விளக்கமளிக்க முயன்றுள்ளார்கள். அதன் பிறகு மதீனா

வாசிகளின் ஏகோபித்த நடைமுறை விளக்கப்பட்டுள்ளது. அதை அடுத்து பிக்ஹ் கலை பற்றிய அறிவும் தக்வாவுமுள்ள தாபிஊன்களின் கருத்தக்களை முன்வைத்துள்ளார்கள். குறித்த பிரச்சினைக்கு தீர்வு பெற மேற்கூறிய எதுவும் துணைசெய்யாத போது தான் பெற்றிருந்த அறிவையும், தெளிவையும் பயன்படுத்தி சிந்தித்து, தனது கருத்தை முன்வைத்துள்ளார்கள். முஅத்தா நூலை வெறும் ஹதீஸ் திரட்டு நூலாக மாத்திரம் அமைக்காது சட்ட நூலாகவும் ஆக்கினார்கள்.

இமாம் மாலிக்(றஹ்) அவர்களின் சட்ட சிந்தனைகளை ஆழமாகக்கற்ற மாணவர் பரம்பரையொன்று பல்வேறு நாடுகளிலும் தோன்றியது. எகிப்து, வட ஆபிரிக்கா, ஸ்பெயின், பக்தாத், பஸரா போன்ற பிரதேசங்களிலிருந்து வந்த மாணவர்கள் அவர்களிடம் கல்வி கற்றுக்கொண்டனர். அப்துல் மலிக் பின் அப்துல் அஸீஸ், அபூ முஹம்மத் அப்துல்லாஹ் இப்னு வஹ்ப், அப்துல் ஸலாம் இப்னு ஸஈத் ஸனூன் போன்ற மாணவர்களைக் குறிப்பிடலாம்.

மாலிக் மத்ஹப் மதீனாவில் அறிமுகமாகிய போதிலும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் மேற்குப் பிரதேசத்தில் தான் அந்த மத்ஹப் செல்வாக்குப் பெற்றுள்ளது. குறிப்பாக எகிப்து, வடஆபிரிக்க நாடுகள், மேற்காபிரிக்க நாடுகள், அரேபிய குடா நாடுகள் என்பவற்றில் மாலிக் மத்ஹபை பின்பற்றுவோர் பரவலாக உள்ளனர்.

### 3. இமாம் முஹம்மத் பின் இத்ரீஸ் அஷ்ஷாபிஈ (றஹ்) (ஹி. 150 - 204, கி.பி 767 - 820)

இமாம் ஷாபிஈ(றஹ்) ஹி. 150 இல் பலஸ்தீனைச் சேர்ந்த காஸாவில் பிறந்தவராவர். இமாம் ஷாபிஈ பிறந்து இரண்டு வருடங்களில் தந்தை பலஸ்தீனில் இறந்தார். அதன் பின் அவரது தாய் தன் குழந்தையை மக்காவுக்கு எடுத்துச் சென்றார். அங்கு அவரது இளமைப் பருவம் வறுமையில் கழிந்தது. பத்து வருடங்கள் கழிவதற்கு முன்னர் அல்குர்ஆனை மனனம் செய்து ஹதீஸ்களையும் மனனம் செய்யலானார். மக்காவின் பிரபல முஹத்திஸான ஸுப்யான் பின் உயைனா என்பவரிடம் பிக்ஹ் கலையையும் பயின்றார். அதன் பின் மதீனாவுக்குச் சென்று இமாம் மாலிக் (றஹ்) அவர்களிடம் கல்வி பயின்றார். பின் ஈராக்கிற்குச் சென்று இமாம் அபூ ஹனீபாவின் மாணவர் முஹம்மத் பின் ஹஸனுஷ் ஷைபானியிடம் ஹனபி மத்ஹபின் பிக்ஹை கற்றார்.

இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள் இரண்டு வித்தியாசமான சிந்தனைப் பாரம்பரியங்களைக் கற்று தனித்துவமான, மிகவும் விரிந்த சட்ட சிந்தனையை உள்ளடக்கிய மத்ஹபொன்றை தோற்றுவித்தார். மதீனாவிலே இமாம் மாலிக்(றஹ்) அவர்கள் ஹதீஸ்களுக்கும், மதீனாவாசிகளது தீர்ப்புகளுக்கும் முன்னுரிமை கொடுத்து சட்டத் தீர்ப்புக்களை வழங்கினார். ஈராக்கிய இமாம் அபூ ஹனீபா(றஹ்)

பகுத்தறிவுக்கு கூடிய முக்கியமளித்து கியாஸ் அடிப்படையில் சிந்தித்து சட்டத்தீர்ப்புக்களை வழங்கினார்.

இமாம் அபூ ஹனீபாவும், இமாம் மாலிகும் சட்டத்தீர்ப்புக்களை பெறுவதற்காக கையாண்ட சட்டவிதிமுறைகளை ஆழமாகக் கற்று இரண்டையும் ஒன்றிணைத்து தனித்துவமான சட்டப் பாரம்பரியமொன்றை இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள் கட்டியெழுப்பினார்.

இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள் பிக்ஹ்கலை மூலாதாரங்களைப் பயன்படுத்துவதற்காக சில கோட்பாடுகளை வகுத்துக் கொண்டார். பிக்ஹ் கலை மூலாதாரங்களை பயன்படுத்துவதற்காக தான் கையாண்ட கோட்பாடுகள் பற்றிய தெளிவை அர்ரிஸாலா என்ற தனது நூலிலே விளக்கியுள்ளார். இது பிக்ஹ் கலை மூலாதாரங்கள் "உஸூலுல் பிக்ஹ்" பற்றிய மிகவும் அடிப்படையான நூலாகும். அது பிக்ஹ் கலை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்ற நூலாகும். சட்டக்கலையின் ஊற்றுக் கண்ணாக கருதப்படும் அல்குர்ஆன் குறிப்பிடும் ஏவல், விலக்கலை வகைப்படுத்தி நோக்கும் புதிய அணுகு முறையை முன்வைத்தார்கள்.

இமாம் அவர்கள் ஸுன்னாவை கையாண்ட முறையும் முன்னைய இமாம்களிலிருந்து வித்தியாசப்பட்டது. ஆஹாதான ஹதீஸ்களையும் சட்ட மூலாதாரமாக கொள்ளத்தக்கவை என்பதை அவர்கள் முன்வைத்ததோடு அக்கருத்தை அக்கால புகஹாக்கள் ஏற்கச் செய்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இமாம் ஷாபிஈ(றஹ்) கிதாபுல் உம், அர்ரிஸாலா போன்ற நூல்களை எழுதி தனது சட்டசிந்தனையை விளக்கியதோடு, சட்டத்துறை வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தார். அதேவேளை ஷாபிஈ மத்ஹப் போக்கை கற்ற அதிகமான மாணவர்களை உருவாக்கினார்கள். அபூபக்ர் அல் ஹுமைதி, அபூபக்ர் முஹம்மத் இப்னு இத்ரீஸ், அபுல்வலீத் மூஸா, அஹ்மத்பின் ஹன்பல் போன்றோரை பிரதானமாகக் குறிப்பிடலாம் ஷாபிஈ மத்ஹபானது எகிப்து, சிரியா, ஹிஜாஸ், ஈராக், பாரசிகம், பாகிஸ்தான், தாய்லாந்து, இலங்கை, இந்தியாவின் மேற்குக் கரை போன்ற நாடுகளில் பின்பற்றப்பட்டு வருகின்றது.

### 4. இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (றஹ்)
### (ஹி. 164 - 241, கி.பி 778 - 885)

அபூ அப்துல்லாஹ் அஹ்மத் பின் முஹம்மத் ஹன்பல் ஹிஜ்ரி 164 இல் பக்தாதில் பிறந்தார். இமாம் அஹ்மத் (றஹ்) அவர்கள் பிறந்து வளர்ந்த காலம் அப்பாஸிய கிலாபத்தின் முன்னேற்றமான காலப் பிரிவாகும். அப்போது தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ் கலைகள் போன்று ஏனைய கலைகளும் விருத்தியடைந்து காணப்பட்டன. இந்தச் சூழலில் இமாமவர்கள் சமய அறிவின் பால் நெறிப் படுத்தப்பட்டு அல் குர்ஆனையும் மனனம் செய்து கொண்டார்.

இமாம் அஹ்மத்(றஹ்) பிக்ஹ் கலையில் ஈடுபாடு காட்டியது போல ஹதீஸ் கலையிலும் ஆழமான அனுபவம் பெற்றிருந்தார். இமாம் அவர்களது மாணவர்கள் அவரிடம் கேட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த விடைகள் அவரை ஒரு பகீஹாக உயரச் செய்தன. இவர் இமாம்களான அபூ யூஸுப், ஷாபிஈ, ஸுப்யான் பின் உயைனா, அப்துர் ரஹ்மான் பின் மஹ்தி ஆகியோர்களிடம் ஹதீஸ், பிக்ஹ் கலைகளை கற்றுக்கொண்டார்.

தூய இஸ்லாமிய அகீதாவை பாதுகாப்பதற்காக களத்தில் முன்னின்று போராடிய ஒருவராக இமாம் அஹ்மத் விளங்கினார். இவர் அப்பாஸிய கலீபா மஃமூன் முஃதஸிலாக் கோட்பாட்டை அரசாங்கக் கொள்கையாக பிரகடனம் செய்தமைக்கு எதிராக குரல் எழுப்பினார்.

அஹ்லுல் ஹதீஸ்களின் வழிமுறையைப் பின்பற்றி, அல்குர்ஆனுக்கு அடுத்ததாக ஸுன்னாவின் துணை கொண்டு சட்டங்களை வகுத்தார். இமாம் ஷாபிஈ(றஹ்) அவர்கள் ஹதீஸ்களை அணுகுவதில் கையாண்ட கடுமையான போக்கினை இமாம் அவர்கள் பின்பற்றவில்லை. ஹதீஸ்களை மிகப் பரந்த அளவில் பயன்படுத்தியதோடு, ஹதீஸ்களை அதன் புறப்பொருளில் புரிந்து கொண்டு தீர்ப்பு வழங்கியமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஹதீஸ்களை மிகப்பரந்த அளவில் பயன்படுத்தியமையால் இஜ்மா, கியாஸை அவ்வளவு தூரம் பயன்படுத்த வேண்டிய தேவை அவருக்கு ஏற்படவில்லை. ஸஹாபாக்களின் பத்வாக்களையும் அவர் சட்டமூலாதாரமாக கருதினார்.

இமாம் அவர்களின் மாணவர்கள் பலர் அவரது பிக்ஹ், ஹதீஸ் போதனைகளை எழுதி வெளியிட்டுள்ளார்கள். அவரது மூத்த மகன் ஸாலிஹ் இமாம் ஹன்பலிடம் தான் கேட்ட வினாக்களுக்கு, இமாம் அவர்கள்தான் அளித்த விடைகளை தொகுத்து "மஸாஇல் ஸாலிஹ்" என்ற நூலை வழங்கியுள்ளார். அவரது மற்றொரு மகன் அப்துல்லாஹ் பின் அஹ்மத், இமாம் அவர்கள் ரிவாயத் செய்த ஹதீஸ்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். இத்தொகுப்பே முஸ்னத் அஹ்மத் என்றழைக்கப்படுகிறது. வளைகுடா நாடுகளில் ஹன்பலி மத்ஹபின் செல்வாக்குள்ளது.

## அல் குர்ஆனின் சில முக்கிய ஸூராக்கள்

**ஸூரதுல் அஸ்ர் - அத்தியாயம் 103, மக்கி ஸூரா** سُورَة العَصر

بِسْمِ اللهِ الرَّحمنِ الرَّحِيْمِ

அளவற்ற அருளும், நிகரற்ற அன்பும் கொண்ட அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பம் செய்கின்றேன்.

وَالْعَصْرِ

காலத்தின் மீது சத்தியமாக

إِنَّ الْإِنْسَانَ لَفِي خُسْرٍ

நிச்சயமாக மனிதன் நஷ்டத்திலுள்ளான்.

إِلاَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ وَتَوَاصَوْا بِالصَّبْرِ

ஈமான் கொண்டு நற்கருமங்கள் செய்து சத்தியத்தைக் கொண்டும், பொறுமையைக் கொண்டும் பரஸ்பரம் உபதேசித்துக் கொண்டவர்களைத் தவிர.

**ஸூராவின் கருத்துச் சுருக்கம்**

காலம் - வரலாறு மனிதனின் வெற்றிக்கு அல்லது நஷ்டத்திற்கு சான்றாக அமைகிறது என்று ஆரம்பிக்கும் ஸூரதுல் அஸ்ர், மனித வாழ்வின் வெற்றிக்குரிய வழிகளைச் சொல்கிறது. ஈமானும் அதன் விளைவாக ஏற்படும் நற்செயல்களும், சத்தியத்தையும், அதனை சுமப்பதற்குத் தேவையான பொறுமையையும் தமக்குள் ஞாபகமூட்டிக் கொள்ளுதல் என்பன வெற்றிக்கான வழியாகும் எனக்கூறுகின்றது.

**ஸூரதுல் இஹ்லாஸ் - அத்தியாயம் 112, மக்கி ஸூரா**

سُورَةُ الإِخلاَص

முஷ்ரிகுகள் இறைத்தூதரிடம் வந்து, உமது இறைவனின் நிலைபற்றி எமக்கு சொல்வீராக எனக் கேட்டபோது இந்த ஸூரா இறங்கியது என உபை இப்னு க.்.ப்(றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ

நபியே நீர் கூறுவீராக! அல்லாஹ் ஒருவன்.

اللَّهُ الصَّمَدُ

அல்லாஹ் (எவருடைய) தேவையுமற்றவன் (யாவும் அவன் அருளையே எதிர்பார்த்திருக்கின்றன)

لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ

அவன் யாரையும் பெறவுமில்லை, அவன் யாராலும் பெற்றெடுக்கப்படவுமில்லை.

وَلَمْ يَكُنْ لَهُ كُفُوًا أَحَدٌ

அவனுக்கு நிகராக யாருமில்லை.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் "ஸூரதுல் இக்லாஸ் அல் குர்ஆனின் மூன்றிலொன்றிற்குச் சமனாகும்." (அஹ்மத்)

ஸூரதுல் இஹ்லாஸ் இறைவனின் தௌஹீதைப் பற்றி பேசும் ஒரு ஸூராவாகும். பல்வேறு காலப்பிரிவுகளில் மனித சிந்தனையில் இறைவன் பற்றி மிகைத்துக் காணப்பட்ட பிழையான கருத்துக்களை, வழிகேடுகளை நீக்கி தூய்மைப்படுத்து வதாக இந்த ஸூரா அமைந்திருக்கிறது.

**அல் முஅவ்விததைன்**

**ஸூரதுல் பலக் - அத்தியாயம் 113 மக்கி ஸூரா** سُورَةُ الفَلَق

قُلْ أَعُوذُ بِرَبِّ الْفَلَقِ

நபியே நீர் சொல்வீராக! நான் அதிகாலையின் இரட்சகனிடத்தில் பாதுகாப்புத் தேடுகின்றேன்.

مِنْ شَرِّ مَا خَلَقَ

படைத்தவற்றின் தீங்கிலிருந்தும்

وَمِنْ شَرِّ غَاسِقٍ إِذَا وَقَبَ

கடும் இருள் ஊடுருவி நுழையும் போது ஏற்படும் தீங்கிலிருந்தும்

وَمِنْ شَرِّ النَّفَّاثَاتِ فِي الْعُقَدِ

முடிச்சுகளில் ஊதுபவர்களின் தீங்கிலிருந்தும்

وَمِنْ شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ

பொறாமைக்காரன் பொறாமைப்படும் போது ஏற்படும் தீங்கிலிருந்தும் (பாதுகாப்புத் தேடுகிறேன்)

ஸூரதுல் பலக், ஸூரதுந் நாஸ் அகிய இரு ஸூராக்களும் அல் முஅவ்விததைன் எனப்படுகின்றன. இவையிரண்டு ஸூராக்களினதும் சிறப்புக்கள் குறித்து நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

"அன்றிரவு இறங்கிய வசனங்களை நீ பார்க்கவில்லையா? அவை போன்று எதுவும் காணப்படவில்லை. குல் அஊது பிரப்பில் பலக், குல் அஊது பிரப்பின் நாஸ்." (முஸ்லிம்.)

ஸூரதுல் பலக், உலகம் சோதனைக்காகவே படைக்கப்பட்டுள்ளதை தெளிவுபடுத்துகிறது. நன்மை, தீமைகள் ஆகிய இரண்டும் கலந்தே உலகம் படைக்கப்பட்டுள்ளது. உலகின் தீமைகளிலிருந்து பாதுகாப்புப் பெற ஒரே வழி இறைவனை நோக்கி மீளுவதாகும் என்ற கருத்தை அது தருகிறது.

**ஸூரதுன் நாஸ் - அத்தியாயம் 114, மக்கி ஸூரா** سُورَةُ النَّاس

قُلْ أَعُوذُ بِرَبِّ النَّاسِ

நபியே நீர் கூறுவீராக! மக்களின் இரட்சகனிடத்தில் பாதுகாப்புத் தேடுகின்றேன்.

مَلِكِ النَّاسِ

மக்களின் மன்னன்

إِلَهِ النَّاسِ

மக்களின் இறைவன்

مِنْ شَرِّ الْوَسْوَاسِ الْخَنَّاسِ

மறைந்து ஒளிந்திருந்து ஊசலாட்டங்களை ஏற்படுத்துவோனின் (ஷைத்தானின்) தீங்கிலிருந்து,

الَّذِي يُوَسْوِسُ فِي صُدُورِ النَّاسِ

அவன் மக்களின் உள்ளங்களில் ஊசலாட்டங்களை ஏற்படுத்துகின்றான்

مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ

அவன் ஜின்களிலும், மனிதர்களிலும் உள்ளான்.

உள்ளத்தில் பிழையான சலனங்களை உண்டு பண்ணல் மூலம் வழிதவறச் செய்தலே மிகவும் அபாயகரமான ஷைத்தானின் வழிமுறையாகும். இதிலிருந்து பாதுகாப்புப் பெற ஒரே வழி அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுவதாகும் என்பதை இந்த ஸூரா வலியுறுத்துகிறது.

**ஸூரதுல் ழுஹா - அத்தியாயம் 93, மக்கி ஸூரா** سُورَةُ الضُّحى

وَالضُّحَى

முற்பகல் மீது சத்தியமாக,

وَاللَّيْلِ إِذَا سَجَى

அமைதியடையும் இரவின் மீது சத்தியமாக,

مَا وَدَّعَكَ رَبُّكَ وَمَا قَلَى

உமது இரட்சகன் உங்களை கைவிட்டுவிடவுமில்லை, வெறுக்கவுமில்லை.

وَلَلْآخِرَةُ خَيْرٌ لَكَ مِنَ الْأُولَى

ஆரம்பகட்டத்தை விட உங்களது பிந்திய கட்டம் சிறந்ததாகும்.

وَلَسَوْفَ يُعْطِيكَ رَبُّكَ فَتَرْضَى

உமது இரட்சகன் உங்களுக்கு தருவான். எனவே நீங்கள் திருப்தியடைவீர்கள்.

أَلَمْ يَجِدْكَ يَتِيمًا فَآوَى

உங்களை அநாதையாகக் கண்டு ஆதரவளிக்கவில்லையா.

وَوَجَدَكَ ضَالًّا فَهَدَى

உம்மை வழியறியாதவராக இருப்பதை கண்டு நேர்வழி காட்டவில்லையா?

وَوَجَدَكَ عَائِلًا فَأَغْنَى

உம்மை ஏழையாகக் கண்டு செல்வந்தராக்க வில்லையா?

فَأَمَّا الْيَتِيمَ فَلَا تَقْهَرْ

அநாதையைக் கண்டு கடுமையாக நடக்காதீர்.

وَأَمَّا السَّائِلَ فَلَا تَنْهَرْ

யாசகம் கேட்பவரை விரட்டாதீர்.

وَأَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ

உமது இரட்சகனின் அருளை எடுத்துரைப்பீராக!

இறைத்தூதர்(ஸல்) ஒரு நாள் நோய் காரணமாக இரவில் நின்று வணங்கவில்லை. அப்போது ஒரு பெண் “உன்னை உன் ஷைத்தான் கைவிட்டுவிடான் போலும் என்றாள்” அப்போது இந்த ஸூரா இறங்கியது. (புகாரி – முஸ்லிம்.)

நபி(ஸல்) அவர்கள் த.்.வாவின் ஆரம்பகட்டத்தில் எதிர் கொண்ட துன்பங்களுக்கு இந்த ஸூரா ஆறுதல் கூறுகிறது. வாழ்க்கைப் போராட்டத்தில் ஏற்படும் இன்பங்களும் துன்பங்களும், இருளும் ஒளியும் மாறி மாறி வருவதைப் போன்று இயல்பாக ஏற்படக் கூடியவைகளே என்று கூறி ஆறுதல் சொல்கிறது. அல்லாஹ் அடியானுக்குச் செய்த அருட்கொடைகளை நினைவுபடுத்தி அதற்காக அந்த இரட்சகனுக்கு அவன் நன்றியுள்ளவனாக இருக்க வேண்டும் என்கிறது.

# அகீதாவும் மஸாதிருஷ் ஷரீஆவும்
# (இஸ்லாமியக் கோட்பாடும் சட்ட மூலாதாரங்களும்)